தங்கம்,—அழலை-பிரமேகம்-சன்னிபாதம்-காசம்-வெண்குட்டம்-புடைமுதலியவை நீக்கும்.-இவை (வீரியவிருத்திக்குணமுண்டு.)

வெள்ளி.—வெடிசூலை-பக்கச்சூலை-மூலநோய் - கிரந்தி-மேககாங்கைமுதலியவை நீக்கும், இவை (தாதுவிருத்திக்குணமுண்டு.)



தாம்பரம்.—வாதரோகம்-சுரசன்னி- குழிப்புண் - பிளவை-பாண்டு - பீலிகை-விழிநோய் கிருமிரோக முதலியவைநீக்கும், இவை (குட்டரோகநிவாரணி.)

அயம்.—பாண்டு-காமாலை-புடை-சூலதேகம்-சுரம் - வீக்கம்-தமரகம்-சச்சு-நீரோற்றமுதலியவைநீக்கும், இவை (வாதரோகநிவாரணி.)

காந்தம்.—ஊதுபாண்டு-மகோதரம்-பீலிகை - காச்சக்கட்டி-நீராமைக்கட்டி-சலபீனிசமுதலியவை நீக்கும், இவை (நீரேற்றநிவாரணி.)

மண்டூரம்.—சோகைரோகம்-பாண்டுரோகம் - காமாலைரோகம்-விஷபாதரோகம்- அஸ்திசுரரோகம் - பாண்டவெளுப்பு முதலியவைநீக்கும், இவை (சூலரோகநிவாரணி.)

வெள்வங்கம்.—பிரமேகம்-மூத்திரப்பெருக்கு-பலயீனம்- மந்தாரகாசம்-அக்கினிமந்த முதலியவைகளைப்போக்கும், இவை (மூலரோகநிவாரணி.)

கருவங்கம்.—கிரகணி-வயற்றுவலி-கல்விஷம்-வண்கெடி - மேகரோகம்-புடை-வெப்புரோகம்-குன்மம்- குட்டரோகமுதலியவைநீக்கும், இவை (மேகரோகநிவாரணி.)

நாகம்.—கழிச்சல்-சளி-எலும்புருக்கி-நீரழுக்குவெள்ளை- கெற்பச்சூலை-கெற்பப்புழு - மூளைமூலம் - பவுத்திரமுதலியவை நீக்கும், இவை (மேகவுஷ்ணரோகநிவாரணி.)

மேற்கூறிய மூலிகைகள், பாஷாணங்கள், கற்வகைகள், லவணங்கள், உலோகங்கள் முதலியவைகள் யோகங்களிற் சேர்ந்துவருகின்றமையால், அதனதன் சத்துக்களும், குணங்களும், புத்திமான்களாகிய பண்டிதர்களறியும்பொருட்டு இங்ஙனம் வரையலாயிற்று.

அன்றி, சிலாசத்துக்கல்நார்முதலிய உபரசங்கள் யோகக்கட்டுடன்மையால் இங்ஙனம் கூறாது இந்நாலின் பற்ப பாகத்தில் தனித்தனி யோகங்களாகச் சொல்லப்படும்.

## சரக்குகளின் சுத்தி.

ரசச்சுத்தி.—ஒருபலம் ரசத்தைசெங்கல்மாத்தூளிலும், மஞ்சள் தூளிலும் வகைக்கு ஒருமணி நேரமாட்டி ஒருபடிமேனிச்சாற்றிவிட்டு அடுப்பேற்றி சார் சுண்டும் வரையிலெரித்தெடுக்கவும்.

கெந்தகச்சுத்தி.—ஒருபலம் கெந்தகத்தைப் பசுவின் நெய்யிலுருக்கி-எ-விசை பாலில்சாய்த்துப் பின் நீராயிலைச்சாம்பலும் நாகதாளிப்பூச்சாம்பலும் சமன்சேர்த்துப் பாண்டத்திட்டு மேற்படிகெந்தியை உட்பொதிந்து சிறு தீயாயிரண்டு ஜாமமெரித்தெடுக்கவும்.

இலிங்கச்சுத்தி.—ஒருபலம் லிங்கத்திற்கு தேன் - நிம்பழச்சார், முலைப்பால், ஆவின்பால், குப்பைமேனிச்சார் இவைகளைச்சமன்கொண்டு இரண்டு ஜாமம் சுருக்கிட்டெடுத்து ஒருபலம் காரியத்தை ஒட்டிவிட்டுருக்கி இரண்டு பலந் தாளகப்பொடியைக்கிராசமீயப்பொடியாகும், அப்பொடியை முலைப்பாலாலாட்டி மேற்படி லிங்கத்திற்கு கவசித்து மண்சீலைகட்டி உலர்த்தி ஜாண் சவுக்கக்குழியில் உமி புடமிடவும்.

பூரச்சுத்தி.—ஒருபலம்பூரத்தை முலைப்பாலில் ஒருஜாமம் வெள்ளுள்ளித்தயிலத்தில் ஜாமஞ்சுருக்கியெடுத்துவெள்வங்கம் பலம்-க, நாகம்பலம்-க, சூதம்பலம் - க, வெடிப்புப்பு பலம் க, இவைகளைக் கல்வத்திலிட்டரைத் துவைக்க ஜயநீராகும், அச்செயநீரை மேற்படி பூரத்துக்கு அப்பிரோகத்துகட்டில் சுருக்கியவும்.

வீரச்சுத்தி.—ஒருபலம் வீரத்தை மிளகு கியாழத்தால் இரண்டு ஜாமஞ் சுருக்கிட்டெடுத்து மிளகை அரைத்துக் கவசித்து சோற்றுப்புபடி-௨, கற்பூரம் பலம்-க, பொடித்துச் சேர்த்துப்பாண்டத்திட்டு மேற்படி கவசித்த வீரத்தை உட்பொதிந்து சிறுதீயாய் இரண்டுஜாமமெரித்தெடுக்கவும்.

பாஷாணச்சுத்தி.—ஒருபலம் பாஷாணத்தை அவுரிச்சாற்றில் நாலுஜாமஞ் சுருக்கியெடுத்து பின் வெள்ளெருக்கன் பாலில் ஒருஜாமஞ்சுருக்கியவும்.



காபிச்சுத்தி.—ஒருபலம்காபியை சாணிச்சார், சிறுகீரைச்சார், வெண்பருத்தியிலைச்சார், ஆவின்கோமயம் இவைகளில் தனித்தனி வகைக்கு ஒருஜாமம் டோலாக்கிரமாய்க்கட்டியெரித்துப் பின் வாண்ட இலையைச் சுற்றி கரிநெருப்பில் சிறுகவாட்டி யெடுத்து முன்பு கோமயத்திலும், பின் ஆவின் பாலிலும் கழுவி யெடுக்கவும்.

தாளகச்சுத்தி.—ஒருபலந்தாளகத்திற்கு கீழ்மேல்கற்சுண்ணம்படியிட்டு எச்சுங்கள்ளிறைல் - எ- விசைத்தாளித்துச் சிறுதுண்டுகளாக்கிச்சீலையில் தளர்ச்சியாய்முட்டைகட்டிகோமயத்தில் ஒருஜாமம், காடியில் ஒருஜாமம் அவித்தெடுத்துக்கிளிஞ்சல்சுண்ணத்திலிட்டு அடுப்பேற்றி ௨-ஜாமமெரித்தெடுக்கவும்.

மனோசிலைச்சுத்தி.—ஒருபலம் மனோசிலையை வெண்மேஷத்தின் கோமயம், உளுந்துவெந்த தண்ணீர், காடி, நிம்பழச்சார் இவைகளில் தனித்தனி இரண்டு ஜாமம் கிளிகட்டி யெரித்தெடுக்கவும்.

கெவுரிச்சுத்தி.—ஒருபலங்கெவுரியை பாவையர்பாலில்மூன்றுநாளூரவைத்து கொட்டைக்கரந்தைச்சாற்றில் இரண்டுஜாமஞ் சுருக்கு தாக்கவும்.

துருசுச்சுத்தி.—ஒருபலந்துருசை அமுரியில்-எ-ஜாமம் ஆவின்கோமயத்தில்இரண்டுஜாமம்,நிம்பழச்சாற்றில் ஒருஜாமம்ஆவின்பாலில் ௧ சாமம் கிளிகட்டியெரிக்கவும்.

நாகச்சுத்தி.—பத்துபலஞ்சிறுகண்ணுகத்தை இலுப்பெண்ணெயில்-எ-விசை, புளித்தமோரில்-௬-விசை, பழச்சாற்றில் ௰க-விசை, எருக்கன்பாலில்-ரு-விசை, தனித்தனி உருக்கிச்சாய்த்துப்பின்நாகமல்லி இலையரைத்துக்கவசித்துச்சீலைவலுக்கச்செய்து ௧0- எருவில்-௨- புடமிட்டெடுக்கவும்.

அயச்சுத்தி.—ஐந்துபலம் அயப்பொடியை நிம்பழச்சாற்றில் ஒருநாள் ஊரவைத்தெடுத்துக்கழுவி அயச்சட்டியில் கொடி அரப்பொடியிட்டு எள்ளெண்ணெய்வார்த்து ஒரு ஜாமம் வறுத்துகாடிவிட்டுக்கழுவிகருவேலம்பட்டைச்சாற்றில்

வேசவைத்தெடுத்து நிம்பழச்சாற்றில்கழுவியெடுத்துநாகம்,ரசம்,வீரம்,வெடியுப்பு வகைக்குப்பலம்-க-கல்வத்திட்டரைத்தெஜயநீரில்மேற்படி நாரப்பொடியை ஒருநாள் ஊரவைத்தெடுக்கவும்.

காந்தசுத்தி.—ஒருபலம்,ஊசிக்காந்தத்தை துண்டுகளாக்கிமேற்படிஜெயநீரில் ஒருநாள் ஊரவைத்து சம்பீரச்சார், பழையகாடி, புளித்தமோர் இவைகளை ஒன்றுபடுத்தி அதில் காந்தத்தையிட்டுச்சுண்ட வெரிக்கவும்.

அப்பிரேகச்சுத்தி.—ஆட்டுக்கோமயம், குதிரைமூத்திரம், கேசரிமூத்திரம், அமுரி, யானைமூத்திரம் இவைகளைச்சமன்கொண்டு பாண்டத்திட்டு பத்துபலம் அப்பிரேகத்தை குராட்டினால் பிடித்து ஒல்கடத்தில் காய்ச்சிக்காய்ச்சிப்பொடியாகும்வரையில் தோய்த்து அடியில் நிற்கும் சத்தையெடுத்து சுணையுள்ள நெல்லை ஒக்கச்சேர்த்துச்சீலையிலிட்டுப்பிழிந்தெடுக்கவும்.

மண்டூரச்சுத்தி.—ஐந்துபலம் மண்டூரத்தை வெள்ளாட்டுக்கோமயத்தில் ஒருநாளூரவைத்து பொற்றலைக்கையான்சார், நிம்பழச்சாரசமன்சேர்த்துச் சுண்டவெரித்தெடுக்கவும்.

வங்கச்சுத்தி.—ஒருபலம் வங்கத்தை வேப்பெண்ணெயில்-எ-விசை-கற்றாழைச்சோற்றில்-எ-விசை, பொன்னாங்கண்ணிச்சாற்றில் - எ-விசை தனித்தனி உருக்கிச்சாய்த்தெடுக்கவும்.

வெள்வங்கச்சுத்தி.—ஒருபலம் வெள்வங்கத்தை இலுப்பெண்ணெயில்-எ-விசை, ஆடுதின்னாப்பாளைச்சாற்றில்-எ - விசை, வெள்ளைவாடாமல்லியிலைச்சாற்றில் எ-விசை தனித்தனி உருக்கிச்சாய்த்தெடுக்கவும்.

தாம்பரச்சுத்தி.—சல்லிக்காசுகளை புளித்தமோர், சாணிப்பால், எருக்கன்பால், எள்ளெண்ணெய், ஆவின்கோமயம், ஆவின்பால், தேசிச்சார், கற்றாழைச்சார், பொன்னாங்கண்ணிச்சார், பழையகாடி இவைகளில் தனித்தனி எவ்வேழு



விசைக்காய்ச்சிக் காய்ச்சித்தோய்த்தெடுத்துப் பின்மேனி இலையரைத்துக்கவசித்துக் குஞ்சரச்சாணத்தால் புடமிட்டெடுக்கவும்.

இந்நூலிற்கூறிய அவுஷதயோகங்களிற்சேரும் சிலமுக்கியமான சுத்திகளைமாத்திரஞ் சொல்லப்பட்டது.

ஆன்றோர்களாலியற்றிய வயித்தியசாஸ்திரங்களில் காரசாரங்களின்றி அவுடதங்கள் பயன்படாதென்றும் ரோகங்களை நிவர்த்திசெய்யாதெனக்கூறியுமதைக்கண்ணுறாது சிலர் அவ்வவர்கள் கருதியவாறு அவுடதங்களை முடிப்பித்துக் கையாண்டு வருகின்றமையால், அவ்வண்ணஞ்செய்யாது கருதி இம்மணம் காரசாரங்களாகிய ஜெயநீர்களைச்சொல்லப்படும்.

## ஜெயநீர்கள்.

### வெடியுப்பு ஜெயநீர்.

கல்லுப்பு-சத்தகவுப்பு-அமரியுப்பு-தேசியுப்பு - இந்துப்பு-நவாயுப்புவகைக்குப்பலம்-உ, சீனம்-காட்டுச்சீரம்-சூடன்-வீரம்-பூரம்-துருசு-வெண்காரம்-பேதி-தசதிட்சைப்பூநீர்- வகைக்குப்பலம் கால்-எ-ங் காய்ச்சல் கம்பியுப்புப்பலம்-கo, இவைகளையொன்றாய்ச்சேர்த்துக்கல்வத்தில்பொடித்து-ரு பங்குசெய்து ஒருபங்கைப்பனிநீரால் ஜாமம்-க, தேசிச்சாற்றால் ஜாமம்-க, வெள்ளறுக்கன்பாலால் ஜாமம்-க, அமுரியில் ஜாமம் க, அண்டவெண்கருவால் ஜாமம்-க, ஆட்டிச்சிறுவில்லைகளாகத்தட்டி வெண்கலம்போல ரவியுலர்த்தி ஒட்டிவிட்டு மேலோமூடி மண்சீலை வலுக்கச்செய்து ரு-எருவில் புடந்தீர்த்து இதற்கு கால்பங்கு நாட்டுச்சாரஞ்சேர்த்துப்பொடித்துப்பின்காளிளேட்டிவிட்டு பனியில் வைக்க ஜெயநீராகும். இந்த ஜெயநீரால் மறுபங்கையரைத்து அச்சிறுவில்லைகளாக்கி ரவியுலர்த்தி ரு-எருவில் புடமிட்டெடுத்துக்கால்பங்கு நாட்டுசாரஞ்சேர்த்துப்பொடித்துப்பனியில் வைக்க ஜெயநீராகும், இவ்வாறு மற்றைய மூன்றுபங்குகளையும் முன்சொன்னதைப்போன்று செய்து சாரஞ்சேர்த்து ஜெயநீராக்கவும், ஆகிய ஜெயநீரில் வீரம்-பூரம்-புழுகு-குருவண்டு-வச்சநாபி வகைக்கு கா[illegible]-ங- பொடித்துப்போட்டுப் பதனஞ்செய்யவும்.

### சாரஜெயநீர்.

நாட்டுச்சாரத்தை மேற்படி வெடியுப்பு ஜெயநீரில் தோய்த்துப் பீங்கான் பிலேட்டில் வைத்து ரவியுலர்த்தவும், இவ்வாறு நாளொன்றுக்கு-எ-தடவைவீதம்-எ-நாள்செய்து பொரிகாரம் சினக்காரம்-வீரம்-துடன்-கசதிட்டைப்பூநீர் - பூரம் இவைகளைச்சமன் கொண்டு பழச்சாற்றாலரைட்டி மேற்படி சாரத்திற்கவிபூட்டிக் கற்சுண்ணமுக்கிலிட்டு ஆடிப்பேற்றி ஆவாரையின் விரகால் ஒரு ஜாமம் கமலாக்கினியாயெரித்து வாங்கச் சுண்ணமாகும். அச்சுண்ணத்தைப்பனியில் வைக்க ஜெயநீராகும்.

### அறுவகைஜெயநீர்.

அருக-படிகாரம்-வெண்காரம்-கசதிட்டைப்பூநீர்- நாட்டுச்சாரம்-குதிரைமட்டை வகைக்குப் பலம்-க- ஒக்கச்சேர்த்துப்பொடித்து ஆபச்சட்டியில்-கூ-பலம் வெடியுப்பை இட்டு அடுப்பேற்றி உருகும்போது மேற்படி பொடியைக்கொஞ்சங் கொஞ்சமாய்க் கிராசமிட்டுக் கிளறிக்கொண்டிருக்கவும், பொடியெல்லாஞ்சென்றபின்பெரக்கி அத்துடன்-ரு-பலம் நவாச்சாரஞ்சேர்த்துக்கல்வத்திட்டு வெள்ளெருக்கன்பாலால் இரண்டு ஜாமமரைட்டிப் பீங்கான் லப்பி பனியில்வைக்க ஜெயநீராகும்.

### நாகஜெயநீர்.

பத்துபலம் சிறுகண்ணுகத்தை யுருக்கி மூன்று பலம் ரசம் சேர்த்து வெட்டைப்பதித்து சாரஜெயநீரால் நாலு சாமமரைட்டி வட்டுசெய்துலர்த்திக் கற்சுண்ணமுக்கிலிட்டு-ஏ-வரட்டியில்புடமிட்டெடுத்து வெண்காரம்- சாரம்- கற்சுண்ணநீர் - படிகாரம்- வெடியுப்பு- பூநீர்- வீரம்-வகைக்குப்பலங்கால் ஒக்கச்சேர்த்து நாற்சதுரக்கள்ளிப்பாலாலரைட்டிப் பீங்கான் பிலேட்டிலப்பி பனியில் வைக்கஜெயநீராகும்.

### வீரஜெயநீர்.

சாரஜெயநீர்ச்சுண்ணம் வீரம் - பூரம் சமன்கொண்டு உமிழ்நீராலரைட்டி அருகக்கு அங்கிபூட்டி புலர்த்திச் சுண்ணாம்புச்சீலை செய்து ஓட்டிலிட்டு மண்சீலை வலுக்கச்செய்து கூ எருவில் புடமிடச்சுண்ணமாகும், ஒருபலம் வீரத்தை அப்பிரேகக்கட்டியிலிட்டு வெடியுப்புஜெயநீரால் ஒருமணிநேரஞ்சுருக்கிட்டு மேற்படி அருகசுண்ணத்தைச் சாரஜெயநீரால் பத்தித்து வீரத்துக்கங்கி பூட்டி உலர்த்தி ஓட்டிலிட்டு ஏ - சீலை வலுக்கசெய்து கூ0 எருவில் [illegible]மிட்டெடுத்துக் கால்பங்கு நாட்டுசாரஞ்சேர்த்துப்பொடித்து [illegible]கான் பிலேட்டிலிட்டுப்பனியில் வைக்கஜெயநீராம்.



## கட்டுவங்கள்.

### லிங்கக்கட்டு.

சுத்தித்த லிங்கம் பலம்-க, அப்பிரேகக்கட்டியிலிட்டு வெடியுப்பு ஜெயநீரில் மணி-க, சாரஜெயநீரில் மணி-க, நேரஞ்சுருக்கிட்டு வில்வப்பழத்திலிட்டு மண்சீலைசெய்து லகுபுடமைந்துபோட்டு கந்தகம்-நாகம்-அரப்பொடி-மனோசிலை வகைக்குக் கழஞ்சு க இவைகளை ஒன்றுசேர்த்து சாரஜெயநீராலரைட்டி மேற்படி லிங்கத்திற் கவிபூட்டி ஓட்டிலிட்டு மண்சீலைவலுக்கச்செய்து கூ0 எருவில் புடமிடக் கட்டும் தக்கவனுபானங்களில் கொடுக்க காக்கைவலி-சுரம்-வாதரோகம் சீதளம்-ஜன்னிமுதலியவை நீங்கும்.

### பூரக்கட்டு.

ஒருபலம் பூரத்தை அறுவகைச்செயநீரில் ஒருமணிநேரஞ்சுருக்கிட்டு ஓட்டிலிட்டு இரண்டுபலம் படிகாரத்தூளைக்கொட்டி நெருப்பெரித்து படிகாரம் பூக்கும் வரையில் பிரட்டிக்கொண்டேயிருக்கக் கட்டும், தக்கவனுபானங்களில் கொடுக்க கைகால் பிடிப்பு-சச்சுவாதம்-அக்கினிசோணிதவாதம் வாதசுரம்-கைகால் குடைச்சல் சுவாதமுதலியவை நீங்கும்.

### வீரக்கட்டு.

ஒருபலம் வீரத்தை சாரஜெயநீரால் ஒருமணிநேரஞ்சுருக்கிட்டு ஓட்டிலிட்டுக் கீழ்மேல் கற்பூரம் பலம்-உ-பொடித்துவைத்து மேல்மூடி மண்சீலை வலுக்கச்செய்து-ரு எருவில் புடமிடக் கட்டும், தக்கவனுபானங்களில் கொடுக்க ஜன்னி-பிரவிசன்-முகவாதஜன்னி-வாதாங்கஜன்னி-பிடரிவலி-செம்புஜன்னி-சுரஜன்னி தோஷமுதலியவை நீங்கும்.

### பாஷாணக்கட்டு.

ஒருபலம் பாஷாணத்தை வீரஜெயநீரால் ஒருமணிநேரஞ்சுருக்கிட்டு திருகுகள்ளியை அரைத்துக் கவித்து மண்சீலைசெய்து-ஐ-எருவில் புடமிடக் கட்டும் சுரஜன்னி-மேகசுரம்-விஷசுரம் நளிர்சுரம்-மாரல்சுர முதலியவை நீக்கும்.

தாளகக்கட்டு.

ஒருபலந்தாளகத்தை அறுவகைச் செயநீரால் மணிநேரஞ் சுருக்கிட்டு நரிவெங்காயத்தை அரைத்துக்கவசித்து உலர்த்திக்கு கைவையிலிட்டு மண்சீலை வலுக்கச்செய்து - கய - எருவில் புடம் மூன்று போடக்கட்டும். அனுபான மறிந்தூட்ட சிதசுரம்- சுரக் காசம்-பித்தகாசம் முதலியவை நீங்கும்.

கரியுப்புக்கட்டு.

செய்நூர் உப்பு படி-உ, பாண்டத்திலிட்டு சமுத்திரசலம்படி-ச-வார்த்து அடுப்பேற்றி உப்பு கரையும் வரையில் எரித்து வடிகட்டி அடுப்பேற்றிச் சட்டிவாய்ச் சீலைகட்டி நீர்சுண்டும்வரையில் தீபாக்கினியாயெரித்து ஆரவிட்டு வேறு பாண்டத்திலிட்டு முன்போல் சமுத்திரஜலம்-ச-படி வார்த்து முறை பிறழாது (கஉ) சட்டிக் காய்ச்சியெடுக்கக் கட்டாகும். முப்பத்திரண்டு சட்டிகளும் அடிகனமாய் செய்விக்கவேண்டும். ஆகிய உப்புக்கட்டை தக்கவனுபானங்களில் கொடுக்க அட்டகுன்மம்-பொருமல்- அக்கினிமந்தம் பசிமந்தம்- வயற்றிரைச்சல் - அசீரணபேதி - அதிசாரம்- குடல்பிரட்டல் முதலியவை நீங்கும்.

சாரக்கட்டு.

ஒருபலம் சாரத்தைப்பெரண்ட ஓட்டுத்தாளின் மத்தியில் வைத்து நாற்சதுரக் கள்ளிப்பாலை மிதக்கவிட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாய்ச் சற்றுக்கொதிப்பித்தெடுத்து அப்போக்கட்டிவிட்டு வெடியுப்புச்செயநீரால்-உ-மணிநேரம் சுருக்கிட்டுப் பின்பு நாற்சதுரக்கள்ளிச்சாம்பல் மத்தியிலிட்டுச் சீலைசெய்துக் கமலாக்கினியாய்-க-சாமமெரித்தெடுக்கக் கட்டும்.

மேற்கூறிய ஒவ்வொரு கட்டுவகைகளுக்கு இன்னாவிதுவன் ளைதப்போன்று சுத்தி செய்து சேர்க்கவும்.

—()—



சுண்ணங்கள்.

ஆயுள்.

வீறுசுண்ணங்கிளக்குமாயுடனெக்
கூறுவான்கெருதிக்கலைஞருருவென
பேருபெற்றமெஞ்ஞானிகட்சொன்முறைப்
பாரிலுள்ளநற்பண்டிதற்காகவே.

தாளகச்சுண்ணம்.

கட்டின தாளகம் பலம் - க - க்கு தரதிட்டைசப்பூநீர்- வீரம்- குகம்-குடன் குஞ்சுபொரித்த அண்டவோடு வகைக்குக் கழஞ்சு-க-சேர்த்து வெள்ளெருக்கன் பாலாலாட்டி அங்கிபூட்டி சுண்ணும்புச்சீலை-எ-செய்து சட்டியில்வைத்து பூவரசன் பட்டைச்சாம்பல் படி-க, கீழ்மேலிட்டு மேல்மூடி சீலைசெய்து தென்னம்பட்டையால் ச-ஜாமம் கமலாக்கினியா யெரித்துவாங்கச் சுண்ணமாகும், அச்சுண்ணத்தில் கெல்லெடை தக்கவனுபானங்களிலூட்ட மந்தாரகாசம்-பித்தகாசம்-தொந்தகாசம்- ஈளை-இருமல்-சுரக்காசமுதலியவை நீங்கும்.

பாஷாணச்சுண்ணம்.

கட்டின பாஷாணம் பலம்-க,கேசரி சிறுகீரிக் காய்ச்சி-எ,வி சைத்தோய்த்து சாரச்சுண்ணத்தை தயிர் நீரால் மத்தித்து வெ சாய்ப்பூசி உலர்த்தி நல்லெண்ணெ இலைமறைத்துக் கவசித்து - உடு- எருவில் புடமிடச் சுண்ணமாகும், சுண்ணத்தில் கெல்லெடை ஒருபலம் நெய்யிற்கலந்து காலைமாலை கொள்ள ஜன்னிபாதம் ஊழி நோய் நீங்கி ஆயுஷ்யம் பாரிக்கும்.

வீரச்சுண்ணம்.

கட்டினவீரம் பலம் - க - க்கு வீரவிஜயநீருக்குச்சொல்லிய அருசுண்ணத்தை வாய்நீரால் மத்தித்துப்பூசி புலர்த்தி குஞ்சுபொரித்த அண்டோட்டை எருக்கன்பாலாலாட்டிக் கவசித்து ஓட்டிலிட்டுக் கீழ்மேல் கற்சுண்ணங்கொஞ்சங்கொட்டி மேல்மூடி மண்சீலைவலுக்கச்செய்து-கு-எருவில் புடமிடச்சுண்ணமாம். அச்சுண்ணத்தில் எள்ளெடை அனுபானமறிந்தூட்ட சகலஜன்னி ரோகங்களும் நீங்கும்.

## கெந்தகச் சுண்ணம்.

செவ்விகெந்தகத்தை வீரஜெயநீராலாட்டி சிறுவில்லைகளாகச்செய்துலர்த்திச் சுண்ணாம்பைக் கவசித்து லகுபுடமிட்டெடுத்துப்பொடித்து ஒருபலந்துளசிச்சாறுவிலொருபலம் சுத்தசுண்ண நீர் கலந்து சிறிய குகையிலிட்டுச் சிறுதீயாய் அரைமணிநேரமெரித்துவாங்கி எள்ளெடை தக்க வனுபானங்களில் கொட்ட விஷபாண்டு-ஊதுபாண்டு-சீழ்றோழம்-சூலைதேகம்-வாதரோகமுதலியவை நீக்கும்.

## நாகச்சுண்ணம்.

சுத்தித்த ஒருபலம் நாகத்தை அறுவகைச்செயநீரில்-எ-விசை உருக்கிச்சாய்த்து மறுபடியு மூசையிலிட்டு உருகும்போது தங்கம் கழஞ்சி-க-சேர்த்தெரக்கி ஒருபலம் ரசம் கூட்டி கல்வத்திட்டுப்பொடித்து கெந்தகம் பலம்-௬, சூடன்பலம்-௨, வீரம்பலம் கால், தசதீட்சைப்பூநீர்பலம்-௨, சாரம் பலம்-௧, இவைகளை ஒன்றசேர்த்து அண்டவெண்கருவால் ஜாமம்-௪ வெள்ளெருக்கன் பாலால் ஜாமம் ௨, ஆட்டிச் சிறுவில்லைகளாகத்தட்டி ரவியுலர்த்திச்சுண்ணாம்பு மத்தியிலிட்டுச் சீலைசெய்து-உம்-எருவில் புடமிட்டெடுத்து வில்லைகளைக் கல்வத்திட்டு வெடியுப்பு ஜெயநீரால் ஒருமணி நேரமாட்டிச் சிறுவில்லைகளாக்கி ரவியுலர்த்திச் சுண்ணாம்புக்குளிட்டு-இம்-எருவில் புடமிடச் சுண்ணமாம், சுண்ணத்தை அனுபானமறிந்தூட்ட பிரமேகம்-எரும்புருத்தி-மூலச்சூடு-மேகம் ௨௧-ம், நீங்கி விந்தூறும்.

## வெள்ளங்கச்சுண்ணம்.

சுத்தித்த வெள்ளங்கம் பலம் ௧, மூசையிலிட்டுருக்கி நாகம்-அண்டவோடு-சூதம் வகைக்குப்பலம்-௧, சேர்த்துக் கள்ளிப்பாலால் மூன்று சாமமாட்டி குன்றிப்போலுன்டைசெய்து ஒவ்வொன்றுக்கு இரசமிப்பத்தனைப்பலம் நவாச்சாரப்பொடித்தூவி க்கற்றுமுஞ்சேர்த்தில் சாய்த்து அரைப்பலம் ரசஞ்சேர்த்தரைத்துக் குங்குமப்பூநீர்த்த அண்டவோடு பலம்-௩, கற்பூரசிலாசத்து பலம்-௧-சேர்த்து வெள்ளெருக்கம்பாலால் ஒருசாமமாட்டிச்சிறு வில்லைகளாக்கி ரவியுலர்த்திக் குகையிலிட்டு இரண்டு மணிநேர



மூதி ஆவியெடுத்து வெடியுப்பு ஜெயநீரால் ஒருமணிநேரமாட்டி மூன்போல் வில்லை செய்துக் குகையிலிட்டெடுக்கச் சுண்ணமாம், அனுபானமறிந்தூட்ட நவமேகங்களும் நீங்கும்.

## கருவங்கச்சுண்ணம்.

சுத்தித்த ஒருபலம் கருவங்கத்தை அறுவகைச்செயநீரில் ௭-விசை உருக்கிச்சாய்த்து தகடாக்கி வெள்ளைப்பாஷாணம்-சவ்வீரம்-பூரம்-சினம்-சூடன்-தசதீட்சைப்பூநீர் இவைகளைச் சமன்கொண்டு சாரச்செயநீரால் மத்தித்து மேற்படிதகட்டிற்பூசி சுண்ணாம்புக்குகையிலிட்டு ஊதியெடுத்து அரைக்கால்பலஞ் சாரஞ்சேர்த்து மேற்படி சாரஜெயநீராலாட்டி மறுபடியுஞ்சுண்ணக்குகையிலிட்டு ௫௰-எருவில் புடமிட சத்திவல்லாமல் கடுங்காரச்சுண்ணமாகும், ஆகிய சுண்ணத்தை புத்திமான்களாகிய பண்டிதர்கள் தக்கவனுபானங்களில் அளவறிந்து கையாட சகல மேகரோகங்களும் நீங்கும்.

## தங்கச்சுண்ணம்.

தங்கத்தை தகடாக்கி செம்முள்ளி உப்புங் கருவங்கச்சுண்ணமுஞ் சமன்கொண்டு வெடியுப்பு ஜெயநீரால் மத்தித்து மேற்படி தகட்டிற்பூசி சுண்ணாம்புக்குகையிலிட்டூதச்சுண்ணமாம் சுண்ணத்தை அனுபானமறிந்தூட்ட மேகரோகங்கள் நீங்கி தேககாந்தியாவதுமன்றி விந்தூறும்.

## அண்டச்சுண்ணம்.

கோழிமுட்டை ஒன்றை சிறிய துவாரமிட்டு குஞ்சியெடை வெண்கருவை கீழ்ச்சாய்த்து அதற்கு நிகர் வெடியுப்பு ஜெயநீர்குத்தி உறைந்துமாவால் துவாரத்தை யடைத்து தெள்ளிய சுண்ணாம்பு நீசை வெள்ளெருக்கன்பாலால் மத்தித்து முட்டை முழுமையும்பூசி குகையிலிட்டு மேல்மூடிச்சீலைசெய்து-௰-எருவில் புடமிடச்சுண்ணமாம், அச்சுண்ணத்தை அனுபானமறிந்தூட்ட வாதபித்த ரோகங்களை நிவர்த்திக்கும்.

## முத்துச்சுண்ணம்.

சிப்பிமுத்தை மூசையிலிட்டு வெடியுப்பு ஜெயநீர்க் குத்தி மேல்மூடிச்சீலைசெய்து-ம-எருவில்புடமிட்டெடுத்துக் கல்வத்திலிட்டு மேற்படியும் வெடியுப்பு ஜெயநீராலாட்டி வட்டிவொருபங்கு சிலாசத்து பற்பஞ்சேர்த்து மூசையிலிட்டு மேல்மூடி-ஊ-எருவிற் புடமிடச்சுண்ணமாம் சுண்ணத்தை அநுபானமறிந்துண்ண கப ரோகம்-சிலேற்பனரோகம் இருமல்-சலதோஷம்-பசிமந்தம் முதலியவைநீக்கி விந்துறும்.

## வெள்ளிச்சுண்ணம்.

வெள்ளித்தகட்டைச் சாரசெயநீரில்-எ-விசைகாய்ச்சித்தோய்த்து வீரம்-பூரம்-அண்டவோடு-சமன்சேர்த்து மேற்படி செயநீரால் மத்தித்து தகட்டிற்குப்பூசி வில்லைப்பற்றவிட்டுமேல்சீலைசெய்து-ஈ-எருவில் புடமிடச் சுண்ணமாம், ஆகிய சுண்ணத்தை அநுபானமறிந்தூட்ட மேகரோகங்கள் நீங்கி விந்துறும்.

## (கவனிப்பு.)

மேற்கூறிய சிறந்தகட்டுனங்களும் சிற்றினங்களும் ஜெயநீர்களாகிய காரசாரங்களின்றிக் கைகூடாவென்றும், குறுக்குப் போக்குகளாற்செய்து முடிந்த சில அவுஷதங்கள் பயன்படாவென்றும் ஆன்றோர்கள் செப்பியிருந்தும், கவனிக்காது யாரும் குறுக்குப்பாதையிற்புகுந்து எரக்குறைச் சட்டலைந்துப் பயனின்மையால், அநுபவத்திற்கு வொட்டியதை வரையலாயிற்று. அவ்வண்ணமெடுத்த விஷயங்களைச் செய்யும் பிரயாசையெனக்கிருந்தும் பண்டிதர்களுக்கு வேறு சிறந்தகாரிய மூலிகைகளில் சித்தியாகுமென்று முன்னோர்களால் கூறப்பட்டுளது. புத்திமான்களோன்று கவனிப்பீர்களாக.

---



## பற்பங்கள்.

### ஆயுள்.

சொல்லுவேன்பிணிகளுக்குத் தோன்றலாம்பண்டிதர்க்கு
வல்லமைப்பற்பமாயுள் வகுத்திதிவிருதாரண்டு
பல்பிணியகலச்செய்யப் பாரினிலியாவருக்கும்
தொல்லையின்றிதனைச்சொன்னேம் சூட்சுமாய்க்கண்டுகொள்ளே.

### சாதிலிங்கபற்பம்.

கட்டினசாதிலிங்கம் பலம் ஒன்றுக்கு வெடியுப்பு - சீனம்-வீரம்-பூரம் வகைக்குக் கழஞ்சு - க, வெள்ளருகலாட்டிக் கவசித்து லகுபுடமிட்டெடுத்து முன்போல் சரக்குகளைச்சேர்த்து வெடியுப்புச்செயநீராலாட்டி மேற்படி வில்லைத்திற் சங்கூட்டிக் குக்கிட்புடம்போடநீறும் நீறிய பற்பத்தை அநுபானமறிந்தூட்ட சுரம்-சுசு, வலி-பாண்டு சச்சுவாய்வு-காமாலை-சூலை முதலியவைபோம்.

### ரசபற்பம்.

சுத்தித்த ரசம் பலம்-க-க்கு கெந்தகச்சுண்ணம்-தசதிட்டைப் பூநீர் சமன்சேர்த்து வெடியுப்புச்செயநீராலாட்டிச் சிறு வில்லைகளாகச்செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேல்மூடி சீலைசெய்து உமிபுடமிட்டெடுத்து அலரிச்சாற்றால் ஒருசாமமாட்டி முன்போல்சீலைசெய்து குக்கிடபுடமிட நீறும், நீறியபற்பத்தை அநுபானமறிந்தூட்ட கைகால் பிடிப்பு-முக்கரையன் கல்[illegible] வெடி-சூலை-குழிப்புண்-ஆறாத்துரணம் முதலியவை நீக்கும்.

### கரியுப்புபற்பம்.

கட்டினஉப்பு பலம்-க, முப்பிரண்டைச்சாற்றாலாட்டி சிறுவில்லைகளாக்கி ரவியுலர்த்தி மேனியிலையறைத்துக்கவசித்து உமி-எருவில்புடமிட்டெடுத்து வெடியுப்புச் செயநீராலாட்டிச் சிறுவில்லைகளாகச்செய்துலர்த்தி வேளையையறைத்துக்கவசித்து ருடு-எருவில் புடமிட துல்லியபற்பமாம், பற்பத்தை அநுபானமறிந்துண்ண ஆட்ட குன்மம்-வாதரோகம்-வலி-வயிற்றுவலி-பிநுரோகம்-இரகணி-பவுத்திரம்-ரத்தவாய்வு - குடல்பிரட்டல் - வயிற்றுப் பொருமல் மகோதரம்-அக்கினிமந்தம்-செரியாமந்த முதலியவைநீங்கும்.

## சப்தலவண பற்பம்.

இந்துப்பு-வெடியுப்பு-கட்டியன் கரியுப்பு - லாகூர்வெள்ளையுப்பு-வளையலுப்பு - கருப்புப்பு-வெண்காரம் வகைக்குப் பலம் ௧ இவைகளைக்குகைவயில்விட்டு வெள்ளெருக்கன்பால் விடுக்கவிட்டு மேல்மூடிச் சீலைசெய்து-௰-எருவில் புடமிட்டெடுத்து கல்லோரைவெளுறும் வரிமிஞ்ச ரசத்தாலாட்டிக் குகைவயிலிட்டு மூடிசீலைசெய்து-௰-எருவில் புடமிட்டெடுத்து மறுபடியும் குகைவயிலிட்டு ஒருநாளாம் வெடியுப்புச் செயநீர்க்குத்தி-௰-எருவில்புடமிட நீறும், நீறியதை தக்கவனுபானங்களிலூட்ட கரியுப்புக்குச்சொன்ன வியாதிநீக்கும்.

## மண்டூரபற்பம்.

சுத்தித்த மண்டூரம்பலம் ௧, பொன்னாங்கண்ணிச்சாற்றால் ௩-சாமமாட்டி சிறுவில்லைகள் செய்துலர்த்தி மேற்படி மூலிகையிலைத்துக்கவசித்து கெசபுடமிட்டெடுத்து வெடியுப்புச்செயநீரால் ஒருமணி நேரமாட்டி முன்போல் வில்லைசெய்துலர்த்தி அனாகெசபுடமிட நீறும் நீறியபற்பத்தை அனுபானமறிந்தூட்ட பாண்டு சோகை-காமாலை-ஊதுகாமாலை-விக்கநீர்-நீராம்பல் - கட்டி-மகோதரமுதலியவைபோம்.

## பவழபற்பம்.

சுத்தித்த பவழம் பலம்-௧, மூசையிலிட்டு வெள்ளெருக்கன்பால் விடுக்கவிட்டு மேல்மூடிச்சீலைசெய்து ௰ எருவில்புடமிட்டெடுத்து வேறு மூசையில் கொட்டி முயல்இரத்தம்விடுக்கவிட்டு-௰-எருவில் புடமிட்டெடுத்து வெடியுப்புச்செயநீராலாட்டிச் சிறுவில்லைகளாகச்செய்து சவிபுலர்த்திக் குப்பைமேனி இலையரைத்துக் கவசித்து மண்சீலை செய்து-௰-எருவில் புடமிடக் களங்கமறநீறும், நீறிய பற்பத்தை அனுபானமறிந்தூட்ட மேகசாங்கை-இருமல் சுவாசம்-வயிற்றிரைப்பு முதலியவை நீக்கும்.



## சிங்கபற்பம்.

சுத்தித்தமான்கொம்பை சிறிய துண்டுகளாக்கிக் குகைவயிலிட்டு வேலிச்சார் விடுக்கவிட்டுச் சீலைசெய்து புடமிட்டெடுத்து வேறு குகைவயிலிட்டு கருநொச்சிச்சார் விடுக்க வார்த்து முன்போல் புடமிட்டெடுத்து வெடியுப்புச் செயநீரால் ஒருமணிநேரமாட்டிச்சிறுவில்லைகள் செய்துலர்த்திப்புடமிட்டெடுக்க நீறும், நீறிய பற்பத்தில் இரண்டுமூன்று அரிசியெடை அனுபானமறிந்தூட்ட மேகசாங்கை-அஸ்திவெட்டை-கெர்ப்பச்சூடு-மார்நோய்-அண்டவாதமுதலியவை நீக்கும்.

## சிலைக் கல்நார்பற்பம்.

சுத்தித்த சிலைக் கல்நார் பலம்-௧, கருவூமத்தை இலையரைத்துக் கவசித்துக் கெசபுடமிட்டெடுத்து கல்லேவின் இலைச்சாற்றாலாட்டிச் சிறுவில்லைகள் செய்துலர்த்தி ஓட்டிலிட்டு-௰-எருவில் புடமிட்டெடுத்து வெடியுப்புச்செயநீரால் ஒருமணிநேரமாட்டி முன்போல் வில்லைசெய்து கன்னும்புக் குகையிலிட்டு - ௰-எருவில் புடமிடக்களங்கமறநீறும், நீறியபற்பத்தை அனுபானமறிந்தூட்ட வெள்ளைப்பிரமேகம்-இரத்தப்பிரமேகம்-மதுமேகம்-தந்திமேக முதலியவை நீக்கும்.

## கற்பூரசிலாசத்து பற்பம்.

சுத்தித்தகற்பூரசிலாசத்து பலம்-௧, கெந்தகம்- கற்சுண்ணாம்பு வகைக்குப்பலம்-௨, நிம்பழச்சாற்றாலாட்டிக் குகை செய்து மேற்படி சிலாசத்தை அதனுள்ளிட்டு மேல்மூடிச் சீலை செய்து ௰-எருவில் புடமிட்டெடுத்து வெடியுப்புச்செயநீரால் ஒருமணிநேரமாட்டிச் சிறுவில்லைகளாகச்செய்துலர்த்தி ஓட்டிலிட்டுச்சீலைசெய்து-௰-எருவில்புடமிட நீறும், நீறியபற்பத்தை அனுபானமறிந்தூட்ட நீர்ச்சுருக்கு-நீர்ச்செரிப்பு-நீர்க்கடுப்பு-அழலை முதலியவை நீக்கும்.

## பால்கெருடக்கல்பற்பம்.

சுத்தித்த பால்கெருடக்கல்லை ஆடுதின்னாப்பாளை இலையரைத்துக்கவசித்து ௩-எருவில் புடமிட்டெடுத்து வெடியுப்புச்செயநீரால் ஒருமணிநேரமாட்டி சிறு வில்லைகளாகச் செய்துலர்த்தி

ஒட்டிவிட்டுச்சில்லுசெய்து-௬ம் எருவில் புடமிட்டெடுக்கவும், இவ்வாறு ஜெயநீராலரைத்தரைத்து மூன்று புடமிடக்களங்கமில்லாமல்நீறும், நீறியபற்பத்தை அநுபானமறிந்தூட்ட மேகவூஷ்ணங்கள் நீங்கும்,

கல்மத பற்பம்

சுத்தித்த கல்மத்தை மேற்கூறிய பால்கெருடக்கல்பற்பத்தின்பாகத்தைப்போல்செய்யநீறும், நீறியபற்பத்தை அநுபானமறிந்தூட்ட மேற்படி குணங்களேயாம், அன்றி,மேற்கூறிய பற்பங்களில் பவழம்-சிப்பி-கல்நார்-சிலாசத்து - பால்கெருடக்கல்-கல்மதம்முதலியவைகளைமாத்திரம் ஜெயநீர்களின்றியும் நீற்றப்படும், அப்படி நீற்றிய பற்பங்களுக்கு காரசாரங்களிராதென்றும் கூடியசீக்கிரம் சாந்தரோகங்களை வெல்வதரிதென்று மௌனகுருக்கூ.

—()—

சிந்தூரங்கள்.

ஆயுள்.

கண்டேசொல்வோமுலகத்திலகருணையுறவேபண்டிதற்குப்
பண்டுசொன்னசிந்தூரம்பாகமதற்குமாயுடனே
விண்டேனுண்டுயெழுநாறுய்வேகமறிந்துக்கையாடத்
தெண்டனிடுமேபல்பிணிகள்தேரவந்தானென்றலுமே.

சூதச்சிந்தூரம்.

சுத்தித்த சூதம் பலம்-க, பிங்காணிலிட்டு வெடியுப்பு திராவகம் ஒரு அவுன்சு விட்டு மணல்மேல் வைத்து சிறுதீயாய் திராவகஞ்சுண்டும் வரையில் யெரித்து ஆறியபின் கல்வத்திலிட்டு எட்டிலொருபங்கு கெந்தகஞ்சேர்த்து அறுவகைச்செயநீரால்ஆட்டி உணர்த்திப்பொடித்து குப்பிக்கேற்றி தீபாக்கினியாய்-௩-ஜாமமெரித்து வாங்கச்சிந்தூரமாம், ஆகிய சிந்தூரத்தில் கெல்லெடைத் தக்கவநுபானங்களிலுண்ண குழிப்புண்-வெடிசூலை-கிரந்தி-அரிகிரந்தி-நணுக்கிரந்தி-கெர்ப்பக்குப்புண்-புடை - கைகால்முடக்கு முதலியவை நீங்கும்.



அப்பிரேகச்சிந்தூரம்.

சுத்தித்த கிருஷ்ண அப்பிரேக் கவசீநம் பலம்-௫, கல்வத்திலிட்டு பொற்றலைக்கையாந்சாற்றால்-௩-சாமமாட்டிச்சிறுவில்லைகளாகச்செய்துலர்த்தி ஆலம் விழுது-கொற்றுச்சாமஞ்சேர்த்து ஆலம்பாலாலாட்டி அடைதட்டி மேற்படி அப்பிரேகவில்லைகளைவைத்து மேலுமந்தஅடையால்மூடி ஆவிலைப்புழுப்பு-அ-கொண்டுமூடி அதற்குமேல்எருக்கன்பழுப்பு-அ-சுத்திக்கசாற்றால்கட்டிமண்சீலைச்செய்துகெஜபுடமிட்டெடுத்துக்கல்வத்திலிட்டுப்பெய்மிராட்டி இலைச்சாற்றாலாட்டிச்சிறுவில்லைகளாக செய்துலர்த்திஒட்டிவிட்டுச்சீலைசெய்து-௱-எருவில் புடம்-க, கற்றாழைச்சாற்றாலாட்டி-௱-எருவில்புடம்-க, ஓரிலைத்தாமரைச்சாற்றாலாட்டி-௱-எருவில்புடம்-க, அழுகிரியாலாட்டி-௫௰-எருவில் புடம்-க, வெருகஞ்செடிச்சாற்றாலாட்டி-௫௰-எருவில் புடம்-க-போட்டெடுத்துநுகர்வற்பட்டைத்தோல்-அரசம்பட்டைத்தோல் சமன்கொண்டு குறுணி சலம் விட்டு-அரைவொன்றாகக்காய்ச்சிவடித்து மேற்படி வில்லைகளை அரைத்து-௫௰-எருவில் புடம்-க, வாழைக்கட்டைச் சாற்றாலாட்டி-௫௰-எருவில் புடம்-க, குருவி தேங்காய்ச்சாற்றாலாட்டி - ௫௰-எருவில் புடம்-க, ஆவாரஞ்சமூலக்கியாழத்தாலாட்டியாட்டிக் கெஜபுடம் புடம்-க, போட்டெடுத்துப்பொடித்து மூசையிலிட்டுக் கதலிப்பழம்-தேன்-பால் நெய்-சீனி இவைகளைச்சமன்கொண்டுப்பிசைந்து-௱-எருவில் புடமிட்டெடுத்துக் கல்வத்திலிட்டு அறுவகைச் செயநீராலாட்டிச் சிறுவில்லைகளாகச் செய்துலர்த்தி ஒட்டிவிட்டுச் சீலைசெய்து-௱-எருவில் புடமிட்டெடுக்கவும் இவ்வாறு ஜெயநீராலாட்டியாட்டி-௱ எருவில்-௫-புடமிடச்சிந்தூரமாம், ஆகிய சிந்தூரத்தை அநுபானமறிந்தூட்ட சுரம்-சன்னி-அட்டகுன்மம்-உதிரக்கட்டி-நீரடைப்பு-நீரிழிவு-க்ஷயரோகம் - மேகவாசம்-வாதசிரோகமுதலியவை நீக்கும்.

வேறுசூதச் சிந்தூரம்.

இரண்டுபலம் நெல்லிக்கெந்தியை சம்மாறுவெற்றிலைச்சாற்றால் ஒருமணிநேரம் கருந்துளசிச்சாற்றால் ஒருமணிநேரமாட்டி மூசைக்குமேலோட்டுக்கும்பூசி ரவியுலர்த்தி வாலரசம் பலம் ஒன்றை மூசையிலிட்டுமேலோடுமூடிசொற்பமப்பு-உ-அந்தமாவ-

அப்ளாகாரம் சமன்சேர்த்து ஓட்டின் சந்துவாய்க்கு விரல் கனம் பூசி அதற்குமேல் மண்சீலை-எ-வலுக்கச்செய்து சட்டியில் மெல்லியமணல்பரப்பி மூசையைப்பொதிந்து மூசைக்கழுத்தளவுமணல்கொட்டி சட்டிவாய்ச்சீலைசெய்து காற்றில்லா விடத்தில் அடுப்பேற்றித் தீபாக்கினியாய் - உ - சாமம், கமலாக்கினியால்-அ-சாமமெரித்திறக்கிக் கல்வத்திலிட்டு அறுவகைச்செயநீரால் ஒருமணிநேரமாட்டி உணர்த்திப்பொடித்து குப்பிக்கேற்றி முன்போல் சீலைகள்செய்து காடாக்கினியாய் இரண்டுசாமமெரிக்கச்சிந்தூரமாம், ஆகிய சிந்தூரத்தை அநுபானமறிந்தூட்ட சுரம்-சுசு-மந்தாரகாசம்-அட்டகுன்மம்-சன்னி-பவுத்திரம்-சிரங்கு-குழிப்புண்-ஆறுத இரணம் கை கால் முடக்கு-குத்தல்குலை புடை-சச்சுவாதம்-சிலவரதழுதலிய சகல வாதரோகங்களும் நீங்கும்.

கருவங்கச்சிந்தூரம்.

சுத்தித்த கருவங்கம் பலம்-க-ஓட்டிலிட்டுருக்கி அலரி இலையால் தேய்த்துக்கொண்டிருக்க மெழுகுபோலாகும்; அச்சிந்தூரத்தைக் கல்வத்திலிட்டுப்புளியம்பட்டைக்கியாழத்தால்-ஈ-சாமமாட்டிச் சிறு வில்லைகளாகச் செய்துலர்த்தி ஓட்டிலிட்டுச் சீலைசெய்து-உ௦-எருவில் புடமிட்டெடுத்துச் சமன் கெந்தி சேர்த்து முன்போலாட்டி வில்லை செய்துலர்த்தி - ருய - எருவில் புடம்-க, ஆடுதீண்டாப்பாளைச்சாற்றால்-ருய-எருவில் புடம்-க, செந்நாயுருவிக்கியாழத்தாலாட்டி-ருய-எருவில் புடம் - க, கண்டங்கத்திரி சமூலக்கியாழத்தாலாட்டி-ருய-எருவில் புடம்-க-போட்டெடுத்து கெந்தகம் பலம் - அரை, சுத்தித்த சூதம் பலம் - கால், சேர்த்து அறுவகைச்செயநீராலாட்டி பாட்டி-ருய-எருவில்-ரு-புடமிடச்சிந்தூரமாம், சிந்தூரத்தை அநுபானமறிந்துண்ண அக்கினிசுரோணிதவாதம்-இரத்தமேகம்-வெள்ளைமேகம்-கல்லெரிப்பு-சுரம்-நீரிழிவு மூத்திரக்கிரிச்சினமுதலியமேகரோகங்கள் நீங்கும்.

காந்தச்சிந்தூரம்.

சுத்தித்த ஊசிகாந்தம் பலம்-உ, கெந்தகம் பலம்-உ, இவைகளைப்பொற்றலைக்கையான்சாற்றிலாட்டிச் சிறுவில்லைகளாக்கி ரவிபுலர்த்தி ஓட்டிலிட்டு மேல்மூடிச் சீலைசெய்து கஜபுடம்போட்டெடுத்து மருந்தெடைக்குக்கெந்திசேர்த்து முன்சாற்றாலாட்டி கஜபுடம்போட்டெடுத்துச் சமன்கெந்திசேர்த்து கிம்புருசாற்றாலாட்டிக்கஜபுடமிட்டெடுத்து அந்தெடைக்குக் கெந்திசேர்த்து இரண்டுநாட்சேர்த்தெடைக்குச் சித்திரமூலச்சூரணங்கூட்டிப் பாலையர்ப்பாலாலாட்டி முன்போலவே புடமிட்டெடுத்து அந்தெடைக்குக்கெந்தியும் சித்திரமூலச்சூரணமுஞ் சமஞ்சேர்த்து அண்டவெண்கருவாலாட்டி முன்போல் புடமிட்டெடுத்து எருக்கம்பாலாலாட்டிப்புடம்போட்டெடுத்து அறுவகைச்செயநீரால் அரைத்தரைத்து முன்போல் மூன்றுபுடம் போட்டெடுக்க களங்கமறச்சிந்தூரமாம், ஆகிய சிந்தூரத்தை அநுபான மறிந்துண்ண பாண்டு-ஊதுபாண்டு காமாலை விஷப்பாண்டு-கெளசிகை - மகோதரம்-பித்தபாண்டு-சோகை-நீராம்பல்- அண்டவாய்வு - வாய்வேற்றம்-பரிசவாய்வு முதலியவை நீங்கும்.

வேறு சூதச்சிந்தூரம்.

ஒரு அகண்டசட்டியின் அடியில் சிறிய பீங்கான் கோப்பையின் பாதமிடிக்கும்படியான துவாரமிட்டு அதன்கீழ் இரண்டு விரல் அகலமும் காலு அங்குலமுள்ள துவாரமிட்டு பூமியில் சிறிய கல்லை வைத்து தீபமேற்றி மேற்படி சட்டியைக்கவிழ்த்து மூடி மேல் துவாரத்தில் பீங்கான் கோப்பையை வைத்து சந்துவாய்ச் சாணமேற்றி மேற்படி கோப்பையில் வாலைரசம் பலம்-க, வார்த்துக்கெந்தகத்திராவகத்தை மூக்கால் பீங்கானளவு விட்டு மேல் வேறு பீங்கான் கோப்பை வாய் பொருந்தக்கவிழ்த்துமூடி அடியிலெரியுந்தீபம் மேற்படி பீங்கான் அடிப்பாகத்தில் சுடர் தாக்கும்படிச்செய்துகொண்டிருக்கவும், இவ்வாறு ரசம்மடியும்வரையில் கெந்தகத்திராவகத்தை விட்டுக்கொண்டிருக்க மடியும் அடிக்கடி பீங்கானடியில் கரி படிந்ததை நீக்கவும், மடிந்த ரசவெண்ணெயை வழித்துக் கல்வத்திலிட்டுச் சமன் கெந்தி சேர்த்து அறுவகைச்செயநீராலாட்டிச் சிறுவில்லையாக்கி ரவியுலர்த்தி ஓட்டிலிட்டுச்சீலைசெய்து-ரு-எருவில் புடமிட்டெடுக்கச்சிந்தூரமாம், ஆகிய சிந்தூரத்தை அநுபானமறிந்துண்ண சிரங்கு- கொறுக்குப்புண்-மூக்குரணம்-புடைக்குமேகம் முடக்குவாதம்-கீல்வாதம்-குத்துவாதம் குடைச்சல்வாதமுதலியவைநீங்கும்.

## பஞ்சபாஷாணச்சிந்தூரம்.

சுத்திசெய்த சாதிலிங்கம் தாளகம்-கெந்தகம் ரசகர்ப்பூரம்- வெள்ளைப்பாஷாணம் வகைக்குப்பலம்-௧-குப்பைமேனி-கம்மாறுவெற்றிலை-கருந்துளசி-உத்தாமணி-நிம்பாறு-பொற்றலைக்கையான் சிறுசின்னி இவைகளின் சாற்றில் வகைக்கு-௪-சாமமாட்டி உலர்த்திப்பொடித்துக்குப்பிக்கேற்றி தீபாக்கினியாய் ௪-சாமமெரித்துக் கல்வத்திலிட்டு அறுவகைச்செயநீரால் ஒருமணிநேரமாட்டி உலர்த்திப்பொடித்து மறுகுப்பிக்கேற்றிக்கமலாக்கினியாய் -௨- சாமமெரிக்கச்சிந்தூரமாகும், ஆகிய சிந்தூரத்தை அனுபானமறிந்துண்ண சன்னிசுரம்-சூலைவாதம்-முடக்குவாதம்-கிரகணி-பிளவை-யோனிப்புற்று-கழல்வாதம்-விஷகப்புற்று- வலி முதலியவை நீங்கும்.

## சண்டமாருதச்சிந்தூரம்.

சுத்திசெய்த கெந்தி-௫, லிங்கம்-௩ பூரம்-௫, ரசசெந்தூரம் நாவிரம்-௨, இவைகளைப்பொற்றலைக்கையான்சாற்றாலாட்டிப்பொடித்துக்குப்பிக்கேற்றித் தீபாக்கினியாய்-௨, சாமமெரித்துக் கல்வத்திலிட்டு அறுவகைச் செயநீராலாட்டிப்பொடித்து மறுகுப்பிக்கேற்றிக்கமலாக்கினியாய்-௨-சாமமெரித்துவாங்கச்சிந்தூரமாம், ஆகிய சிந்தூரத்தை அனுபானமறிந்தூட்ட காசம்-மாரல்சுரம்- கனிர்ச்சுரம்-முறைச்சுரம்-சன்னி-கண்டமாலை-நடுக்குவாயு- அனாக்கட்டி-வாதரோகமுதலியவை நீங்கும்.

## நாகச்சிந்தூரம்.

சுத்திசெய்த நாகம் பலம்-௪, அறுவகைச்செயநீரில்-௭-விசை உருக்கிச்சாய்த்து நாகமல்லியிலையரைத்துக்கவசித்து-௰-எருவில் மூன்றுபுடம்போட்டுக்கவசம்நீக்கி திரிபாலங்களையரைத்துக் கவசித்து முன்போல் மூன்று புடம் போட்டெடுத்துக்கொள்ளவும், ஒருவிராகனெடை தங்கத்தை மூசையிலிட்டுருக்கி மேற்படி நாகத்திலொரு விராகனெடைத்தாக்கி இரண்டுங்கலந்துருகும் போது கட்டினலிங்கம் விராகனெடை-௧, சுத்திசெய்த கருவங்கம் விராகனெடை-௧-சேர்த்துக்கொடுத்து இரண்டும் ஒன்றாய்க்கலந்துருகியபின் உடனே கல்வத்திலூற்றி சூடாறுமுன் ஒருவிராக



னெடை வாலைரசந்தாக்கிப்பொடித்து கெல்லி கெந்தி விராகனெடை-௫-சேர்த்து பொற்றலைக்கையான்சாற்றில்-௪-சாமமாட்டிவில்லைசெய்துலர்த்தி-௫-எருவில் மூன்று புடம்போட்டெடுத்துக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றாலாட்டி உலர்த்திப்பொடித்துக்குப்பிக்கேற்றி-௨-சாமம் கமலாக்கினியாயும், இரண்டுச்சாமம்காடாக்கினியாயுமெரித்துவாங்கிக் கல்வத்திலிட்டு-௫-விராகனெடைக்கெந்திசேர்த்து அறுவகைச்செயநீரால் ஒருமணிநேரமாட்டி வேறு குப்பிக்கேற்றிக்காடாக்கினியாய் ஒருஜாமமெரித்தெடுக்கச்சிந்தூரமாம், ஆகிய சிந்தூரத்தை அனுபானமறிந்துண்ண மேகம்-௨௪-ம்-நீங்கிவிந்தூறும்.

## திரிவங்கச்சிந்தூரம்.

சுத்திசெய்த நாகம் பலம்-௧, கருவங்கம் பலம் -௧, வெள்வங்கம் பலம் ௧, இவைகளைத் தனித்தனி அறுவகைச்செயநீரில் எவ்வேழு விசை உருக்கிச்சாய்த்து ஒன்று சேர்த்து மூசையிலிட்டுருக்கிக் கல்வத்திலிட்டு வாலைரசம்பலம் ஒண்ணரைத்தாக்கித்து-௫-பலம் கெல்லிக்கெந்தகஞ்சேர்த்து பொற்றலைக்கையான் சாற்றால் -௪- சாமமாட்டிச் சிறுவில்லைகளாகச்செய்துலர்த்தி நத்தைச்சூரியிலையரைத்துக்கவசித்து-௨௫-எருவில் புடமிட்டெடுத்துக் கல்வத்திலிட்டு அறுவகைச் செயநீரால் ஒருமணிநேரமாட்டி முன்போல் வில்லைசெய்து-௨௫-எருவில் புடமிட்டெடுக்கச்சிந்தூரமாம், ஆகியசிந்தூரத்தை அனுபானமறிந்தூட்ட மூலம்-பவுத்திரம் - நீங்கா வெள்ளை-பெரும்பாடு-இரத்தப்பிரமேகம்-மேகப்புடை - குன்மம்-குழிப்புண்-கிரந்தி-வாதரோகங்கள் முதலியவைநீங்கும்.

## கரியுப்புச்சிந்தூரம்.

கட்டின உப்பு பலம்-௧, குடுதாங்குக்கோப்பையில்வைத்து நாகஜெயநீர் உப்பு மிதக்கவிட்டு ஒரு விராகனெடைத் தங்கரேக்கைத்தூவி இலுப்பை நெய்யைக்கலசத்திலிட்டுகனத்தடுப்பேற்றி அடி கோப்பையைவைத்து பெரிக தங்கம் உப்புக்குள் பாய்ந்து சேர்த்துப்பூர்த்தபிறகு கல்வத்திலிட்டு அறுவகைசெயநீரால் ஒருமணிநேரமாட்டிச்சிறுவில்லைகளாகச்செய்துலர்த்தி பத்தெருவில்

புடம்போட்டெடுக்கச்சிந்தூரிக்கும், ஆகிய சிந்தூரத்தை அனுபானமறிந்துண்ண வாய்வு-குன்மம்-சத்தி-வாதரோகமுதலியவைநீங்கிதேகமிறுகும்.

### வேறு கரியுப்புச்சிந்தூரம்.

செய்பூர் உப்பு படி கால், ஆடுதீண்டாப்பாளைச்சார்விட்டுக் காய்ச்சி யெடுத்துக்கல்வத்திட்டு கற்றாழஞ்சாற்றாலாட்டிச் சிறுவில்லைகளாகச்செய்துலர்த்தி ௫௰-எருவில்-௨௫ - புடம்போட்டெடுத்து மேற்படி பாலாலாட்டி-௨௫ எருவில் புடம்போட்டெடுத்துக்கல்வத்திட்டு அறுவகைச் செயநீராலாட்டி-௨௫-எருவில் புடம போடச்சிந்தூரிக்கும், ஆகிய சிந்தூரத்தை அனுபான மறிந்தூட்ட மேற்படி வியாதிகள் நீங்கும்.

### கெந்தகச்சிந்தூரம்.

சுத்தித்த ஒருபலம் நெல்லி கெந்தகத்தை அறுவகைச்செயநீரில் தோய்த்து ஒரு விராகனெடை தங்கரேக்கைச்சுற்றி விளாங்காய்ப் பிரமாணமுள்ள விளாம்பிசினிக்குள்ளிட்டு தீபச்சுடரில் பிசினியெல்லாம் கருகும் வரையில் வாட்டி உள்ளிருக்கு மருந்தைக்கல்வத்திட்டு ஒருபலம் கெந்திசேர்த்து நிம்பழச்சாற்றாலாட்டிச் சிறுவில்லைசெய்துலர்த்தி லகுபுடமிட்டெடுத்து அறுவகைச்செயநீராலாட்டி யுணர்த்திப்பொடித்துக் குப்பிக்கேற்றி கமலாக்கினியாய்-௬-சாமமெரித்தெடுக்கச் சிந்தூரமாம், ஆகிய சிந்தூரத்தை யனுபானமறிந்தூட்ட பாண்டுவீக்கம்-மகோதரம்-காமாலை ரோகங்கள்-வாதரோகங்கள் முதலியவை நீங்கும்.

### கருப்பொன்சிந்தூரம்.

சுத்திசெய்த அயப்பொடி பலம் - ௯, வாலைரசம் பலம் - ௧, கெந்திபலம் ௨, கல்வத்திட்டு குமரிச்சாற்றால்-௮-ஜாமமரட்டி சிறு உருண்டைகளாகச்செய்து ஆமணக்கிலைசுற்றி ஒருநாள் ரவியுலர்த்தி நெல்லாவியிலிட்டெடுத்து மறுபடியும் ஆமணக்கிலைச்சுற்றி சாணசவுக்கக்குழியில் உமிபுடமிட்டெடுத்துப் பொடித்து - ௨ - பலம் கெந்திசேர்த்து பொற்றலைக்கையான் சாற்றாலாட்டிச் சிறுவில்லைகளாகச்செய்து ௱-எருவில்-௫௰-புடமிட்டெடுத்து அறுவ



கைச்செயநீராலாட்டி முன்போல்வில்லைசெய்து கெஜப்புடமிட்டெடுக்கச்சிந்தூரமாம், ஆகிய சிந்தூரத்தை அனுபானமறிந்தூட்ட வாதரோகம்-விஷப்பாண்டு-சுரம்-நாதநஷ்டமுதலிய மேகரோகங்கள் நீங்கும்.

### உருக்குச்சிந்தூரம்.

எஃகுஉளியை ஆவின்நீர் - வெள்ளாட்டுநீர் சமன்சேர்த்து உலையில் காய்ச்சிக்காய்ச்சித்தோய்க்க கருக்குகள் பொடிப்பொடியாய் உதிரும் உதிர்ந்தபொடி பலம்-௧, கெந்திபலம்-௧, சேர்த்துக்கையாந்தகரைச்சாற்றாலாட்டிச் சிறுவில்லைகளாகச்செய்து சட்டியிலிட்டுச்சிறுமேல் மேற்படி இலைகளைநிரப்பிமேல்மூடிச்சீலைசெய்துக் கெஜப்புடம்போட்டெடுத்து அந்தரத்தாமரைச்சாற்றாலாட்டிச் சட்டியிலிட்டு முன்போல் அந்தரத்தாமரையிலைபரப்பிக்கெஜப்புடம் போட்டு குமரிச்சாற்றாலாட்டியாட்டி முன்போல் வில்லைசெய்து ஓட்டிலிட்டுக்கெஜப்புடம்-௫-போட்டெடுத்து அறுவகைச்செயநீராலாட்டி முன்போல் கெஜப்புடம்போட்டெடுக்கச்சிந்தூரமாம், ஆகிய சிந்தூரத்தை அனுபானமறிந்தூட்ட அயச்சிந்தூரத்திற்குரிய குணங்களேயாம்.

### தாம்பரச்சிந்தூரம்.

சுத்தித்த தாம்பரத்தகட்டை-௭ - விசைச் சாரச்செயநீரில் காய்ச்சித்தோய்த்து ராவினபொடிபலம்-௧, சூதம்-மனோசிலைக்கெந்தி-அரிதாரம்-தாபி லிங்கம்-வாளம்-அக்ராகாரம்-நிர்விஷம்-வெண்காரம்வகைக்குப் பலம்-௧, காரீயம்பலம்-௧, இவைகளில் ரசமும் வங்கமுங்கொந்தித்து மற்றைய சரக்குகளையொன்றுபடுத்திக்கற்றாழைச்சாற்றால் ஒருஜாமமாட்டி அடைதட்டிப் புதுச்சட்டியிலிட்டு மேல்மூடி வாய்ப்புறஞ்சீலைசெய்து வாலுகையிலேற்றி இரண்டுசாமம் தீபாக்கினியாயும், இரண்டு சாமம் கமலாக்கினியாயும், இரண்டுசாமம் காடாக்கினியாயும் எரிக்கவும், இவ்வாறுகற்றாழஞ்சாற்றாலாட்டியாட்டி-௰-விசைச்செய்துக் கல்வத்திட்டுப்பொற்றலைக்கையான்சாற்றாலாட்டியாட்டி-௫௰-எருவில் புடமிட்டெடுத்து அறுவகைச்செயநீராலாட்டி-௫௰-எருவில்புடம்போட்டெடு

க்கக் களங்கமற்றச் சிந்தூரமாம், ஆகியச்சிந்தூரத்தில் அநுபானமறிந்தூட்ட அட்டகுன்மம்-செரியாமை-சூலை-சுரம்-மகோதரம்-வெப்புரோகம்-காமாலை கிரந்தி-வெண்குட்டம்-கருங்குட்டம்-கைகால்முகம்வெடிப்பு-வெடிச்சூலை-வண்டுகடி-பெரும்பாடு-இரத்தகாசமுதலிய மேகரோகங்கள் நீங்கும்.

சிவசத்திச்சிந்தூரம்.

சுத்தித்த சூதம் விராகனெடை-௧௰, கெந்தகம் - ௭௰, அரிதாரம்-௪, மனோசிலை-௨, லிங்கம்-௨, அப்பிரேகவெண்ணெய்-௨, இவைகளை ஒன்று சேர்த்துக் கல்வத்திட்டு எருக்கன்பாலால் ஜாமம்-௧, தும்பைச்சாற்றால் ஜாமம் ௧, செருப்படைச்சாற்றால் ஜாமம்-௧, புளிப்புமாதுளம்பழச்சாற்றால் ஜாமம் - ௧, செம்முள்ளிச்சாற்றால் ஜாமம்-௧, பொற்றலைக்கையான்சாற்றால் ஜாமம்-௧, நிம்பழச்சாற்றால் ஜாமம்-௧, அறுவகைச்செயநீரால் ஜாமம்-௧, ஆட்டிப்பொடித்துக்குப்பிக்கேற்றி தீபாக்கினியாயொருஜாமம், கமலாக்கினியாயொருஜாமம், காடாக்கினியாயொருஜாம மெரித்தெடுக்கச் சிந்தூரமாம், ஆகியசிந்தூரத்தை அநுபானமறிந்தூட்ட மந்தாரகாசம்-சுவாசகாசம்-சேத்துமகாசம்-எலிக்கடி-சில்விஷம் - சூலைப்புண்-குறைநோய்-பதினெண்சூலை-நெஞ்சக்குத்து-பீனிசம்-செவிநோய்-மண்டைசூலை-சூசிகாவாய்வுமுதலியவை நீங்கும்.

இலிங்கச்சிந்தூரம்.

கட்டினலிங்கம் அல்லது சுத்தித்த லிங்கம்பலம்-௧, சுத்தித்ததாளகம்-மிருதார்சிங்கி-வாலைரசம்-வகைக்குப்பலம்-௧, வீரம்-பூரம்-வெண்காரம் - சாரம் வகைக்குப்பலம்-௰, நெல்லிக்கெந்திப்பலம்-௫ சேர்த்துக்கல்வத்திட்டுப் பழச்சாற்றால் ௬-சாமமாட்டி உலர்த்திப்பொடித்துக்குப்பிக்கேற்றிக் கமலாக்கினியாய்-௬-சாமமெரித்துவாங்கி அறுவகைச்செயநீராலாட்டி மறுபடியுங் குப்பிக்கேற்றி முன்போல் யெரித்தெடுக்கச்சிந்தூரமாம், ஆகியச் சிந்தூரத்தை அநுபானமறிந்தூட்ட சுரம்-சன்னி-வலி-இசிவு-வாய்வு முதலியவைநீங்கும்.



வீரச்சிந்தூரம்.

கட்டினவீரம் அல்லது சுத்தித்த வீரம்பலம்-௧, கெந்தகம்பலம்-௨, அன்னபேதி பலம்-௭, இவைகளைக்கல்வத்திட்டுச்சம்பழச்சாற்றால்-௬-சாமமாட்டிச் சிறுவில்லைகளாக்கி ஓட்டிலிட்டுக்கவசிந்துச்சான்சவுக்கக்குழியில் உமிபுடமிட்டு அறுவகைச் செயநீராலாட்டிப்பொடித்துக்குப்பிக்கேற்றிக்கமலாக்கினியாய் இரண்டுச்சாமமெரிக்கச் சிந்தூரமாம், ஆகிய சிந்தூரத்தில் எள்ளெடை அநுபானமறிந்தூட்ட சுகச்சன்னி-முகவாதச்சன்னி- அலர்ச்சன்னி-வாதச்சன்னி-சர்வாங்கச்சன்னி முதலியவை நீங்கும்.

வேறு கரும்பொன் சிந்தூரம்.

இராவின நாட்டு அயப்பொடி பலம்-௰, தேசிச்சாற்றில் ௯-நாள் ஊரப்போட்டுக்கழுவி சாரத்திராவகத்தில் ஒரு ஜாமம் ஊரவைத்தெடுத்துக்கல்வத்திட்டுச் சுத்தித்த கெந்தி சமன்,வாலைரசம் அரை சேர்த்துக் கையாந்தகரைச்சாற்றாலாட்டிச் சிறுவில்லைகளாகச்செய்துலர்த்தி கெஜப்புடம் - ௫, சிறுசெருப்படைச்சாற்றில் புடம்-௫, போட்டு பூரகம் சமன் கூட்டி பொற்றலைக்கையான்சாற்றில் புடம்-௰, நிம்பச்சாற்றில் புடம்-௫, கற்றாழைச்சாற்றில் ௨ கெஜப்புடம்-௫,ஆடுதீண்டாப்பாளைச்சாற்றில் புடம்-௫,தொராயிலைச்சாற்றில் புடம் ௫, கோடாசூரியிலைச்சாற்றில் புடம்-௫, நாகமல்லிலைச்சாற்றில் புடம்-௫, அறுவகைச்செயநீரில் கெஜப்புடம்-௧, போட்டெடுக்கவும், ஒவ்வொருபுடத்துக்கும் மருந்தெடைக்கு நாலிலொருபங்கு கெந்தி சேர்த்துக்கொண்டு வரவும், ஆகிய சிந்தூரத்தை அநுபானமறிந்தூட்ட சகல மேகரோகங்கள் நீங்கும்.

மேற்கூறியச்சிந்தூரங்களொவ்வொன்றும் ஜெயநீர்களின்றியுஞ்செய்யப்படும். அப்படிச்செய்த சிந்தூரங்களுக்கு வர்ணபேதங்களும், காரங்களும், ரோகங்களைவெல்லுந்திறங்களும் குறைவுபடும்.

—*—

## லேகியங்கள்.

### ஆயுள்.

இப்புவியின்மாக்தருக்குப்பிணியகன்று விருந்துமனியிசைத்தறுது
ஒப்பியநெய்சீனிதேன்கூடியலேகியபதத்தைவுரைப்பதற்கு [ம்
தப்பிலைபாரொப்பியசெய்கைக்குரிதுவறுதிங்கள்சாற்றுமாயுள்
செப்பிடுபண்டிதர்முன்பூதிவரபக்குவமானதேரையோனே,

### சிவராஜலேகியம்.

| | |
|---|---|
| சீரகம் | அதிமதுரம் |
| சோம்பு | அரத்தை |
| சுக்கு | சிறுநாகப்பூ |
| மிளகு | தாளிசப்பத்திரி |
| திப்பிலி | சுத்தித்தகந்தா |

வகைக்குப்பலம்-உ,

லவங்கம்-ஏலம்-லவங்கப்பட்டை-சாதிப்பத்திரி-சாதிக்காய் வகைக்குப்பலம்-உ, இவைகளைச்சூரணித்து ஒருவீசை வெள்ளைச்சர்க்கரை-உ-வீசை இளநீர் சேர்த்துப் பசும்பால் பலம்-சு-விட்டு அடுப்பேற்றிப் பாகுபதத்தில் மேற்படி சூரணத்தைத்தூவி நெய் தேன் வகைக்குப்பலம்-ச கலந்து லேகியமாய்கிண்டி ஆறியபின் இரண்டு பலம் கசகசாவைச் சேர்த்துப் பிசைந்துக்கொண்டு கழற்சியளவு லேகியத்தை அந்தி சந்தி-வ-மண்டலமுண்ண இளைச்சல்-பசிமந்தம்-மூலக்கிரகணி - ஊஷ்ணபேதி - அதிசாரமுதலியவை நீங்கும்.

### கரிசாலைலேகியம்.

கரிசாலைச்சார்படி ஒன்றில் பனைவெல்லம் பலம்-ய-கரைத்து வடியிட்டு அடுப்பேற்றிப்பாகுபதத்தில்,

| | |
|---|---|
| சுக்கு | சீரகம் |
| திப்பிலி | ஏலரிசி |
| தான்றிக்காய் | நெல்லிக்காய் |
| மிளகு | கடுக்காய் |

வகைக்குப்பலம்-க.

சூரணித்து மேற்படி பாகிற்றூவிக்கிண்டி எரக்குஞ்சமயத்தில் ஒருவிராகனெடை அபச்சிந்தூரமும் முக்கால்வீசைதேனும் சே



ர்த்து லேகியபதமாய்க்கிண்டி எரக்கி கழற்சியளவு அரைமண்டலங்கொள்ள சோகை காமாலை வீக்கம்-மூலகணம்- ஊதுகாமாலை முதலியவைகள்நீங்கும்.பத்தியம்வியாதிகளுக்குத்தக்கவைகளாம்.

### சர்வசத்தி லேகியம்.

செம்பருத்தியிலைப்பிடி-க சீரகம் விராகனெடை-க, மிளகு-விராக-கால், இவைகளைப்பாண்டத்திலிட்டு எரித்து தீயிப்பின்ஒரு கிம்பழச்சாற்றைப்பிழிந்து கண்டினவுடன்-எ- ஏலக்காயைத்தோலுடன் பொடித்துப்போட்டு அரைப்படி ஜலம் விட்டு அ[illegible]ய மூக்காகச்சுண்டித்து பன்னீர் துலா-க, புநிறுபிடி - க, கற்கண்டு வீசை-கால், கடல்புளிப்பு துலா-க, தொந்தித்து காசினிவேர்-சோம்பு வகைக்குப்பலம்-க, அரைத்துப்போட்டு குங்குமப்பூ துலா-க-சேர்த்து லேகிய பதத்தில் தேன் வீசை - வ - விட்டுக்கிண்டி ஒருவிராகனெடைப்பிரமாணம் அரை மண்டலம் அக்கிசந்திபுண்ண எரிகுன்மம்-பித்தகுன்மம்-வாய்க்கைத்தல்-வாய்நீருறல்-தொண்டைவரட்டல்-வாயக்குமட்டல் சத்தி- வெள்ளோக்காளம்-கிறுகிறுப்பு அன்னத்துவேஷம் கை கால் கண் மெய்யெரிவு-ஆசனக்கடுப்பு-பயித்தியகுணம்போம்.

### தேத்தான்வித்துலேகியம்.

தோல் சீவிய தேத்தான் வித்து ஜலத்தில் ஊரவைத்து மைபோலாட்டி-ரு-பலமெடுத்து

| | |
|---|---|
| சாதிக்காய் | சாதிபத்திரி |
| தேசாவரம் | சோம்பு |
| அதிவிடயம் | கருவாய்ப்பட்டை |
| சிறுநாகப்பூ | வெந்தயம் |
| ஓமம் | லவங்கம் |

வகைக்குப்பலம்-அரை.

தாளிசப்பத்திரி-சுக்கு வகைக்குப்பலம்-வ, மல்லி சீரகம்- ஏலம் வகைக்குப்பலம்-உ, மதுரம்-வெண்மிளகு மாஞ்சில்- வகைக்குப்பலம்-க, சூரணித்துச் சீசில் சர்க்கரை-சிலாசத்துபற்பம் வகைக்குப்பலம்-க-சேர்த்து, சர்க்கரைப்பலம்-கஉ- தண்ணீரில்கரைத்து வடியிட்டு அடுப்பேற்றிப் பாகுபதத்தில் சூரணத்தைத்தூவி

மேற்படி அரைத்த தேத்தானையுஞ்சேர்த்து நெய்பலம் ௰சு-விட்டுக்கிண்டிலேகியபதத்திலிரக்கித் தேன்பலம்-அ-நுரைநீக்கிச்சேர்த்து கழற்சியளவு லேகியத்தில் வெள்வங்கச்சுண்ணம் - நாகச்சுண்ணம்-கல்நார்பற்பம்- சிங்கிபற்பம் இவைகளில் எதையாகிலு முபயோகிக்க இருபதுநாளையில்ஊஷ்ணம்-காந்தல்-மூலம்-கைகாலெரிவு-வாயிப்புண்-ஒழுக்குப்பிரமேகம்-இரத்தப்பிரமேகம் நீர்ச்சுருக்கு-நீர்ச்செரிப்பு முதலியவைநீங்கும்.

## தாளிசப்பத்திரி லேகியம்.

| | | |
|---|---|---|
| தாளிசப்பத்திரி | பலம்—க, | அரத்தை |
| வெண்மிளகு | | சிறுநாகப்பூ |
| திப்பிலி | | திப்பிலிமூலம் |
| ஆனைத்திப்பிலி | | லவங்கப்பட்டை |
| சாதிப்பத்திரி | | ஏலம் |
| சாதிக்காய் | | கிராம்பு |

வகைக்குச்சூரணம் பலம்-உ,

பொடுதலைச்சார் வல்லாரைச்சார் - முசுமுசுக்கைச்சார்- ஆடாதோடைச்சார்-பொற்கையானசார்-வகைக்குப்படி-வ,அரை வீசைசர்க்கரைக்கலந்து வடியிட்டுபாகுபதத்தில் மேற்படி சூரணத்தைத்தூவிஆவின் நெய்படி அரை, விட்டுக்கிளறி எரக்கி தேன்படி அரை, சேர்த்துப் புன்னைக்காயளவு லேகியத்தில் பவழபற்பம் வைத்துண்ண இருமல்-ஈளை-இரைப்பு-மேற்சுவாசம்-அஸ்திசுரம்-அஸ்திவெட்டை-மேககாங்கை- தேகச்சூடு-பித்தரோகமுதலியவைநீங்கும்.

## வாதமாருதலேகியம்.

மேற்பரணைச்சீவிய சுக்குபலம்-௰சு-துண்டு துண்டுகளாக்கிப்பாண்டத்திட்டு எட்டுப்படி செவ்விளநீர் விட்டு ஒருபடியாகச்சுண்டித்து வடித்துப்பசும்பால்படிகலந்துச் சர்க்கரைப்பலம்-உ௰-ஒக்கச்சேர்த்துவடித்து அடுப்பேற்றித் திராட்சிப்பழம் பலம்-க, பேரீச்சங்காய்ப்பலம்-அரை-அரைத்து



| | |
|---|---|
| சுக்கு | மதுரம் |
| மிளகு | ஏலம் |
| திப்பிலி | வங்கம் |
| லவங்கப்பட்டை | லவங்கப்பத்திரி |
| சாதிபத்திரி | இலுப்பைப்பூ |
| சோம்பு | அமுக்கராக்கிழங்கு |

வகைக்குப்பலம்-அரை.

இவைகளைச்சூரணித்து பாகிற்றூவி அரைத்தமருந்தையுஞ்சேர்த்துப் பசுவின்நெய்படி - க - சேர்த்துக்கிண்டி எரக்கித்தேன்படி அரை விட்டுப்புன்னைக்காயளவு லேகியத்தில் சிங்கிபற்பம் வைத்துண்ணப்பிரமேகம்-உட்சூடு-நீர்ச்செரிப்பு-காபிரோணம்- செரியாமந்தம்-வயிற்றுப்பிசம்-அடிவயிற்றுச்சூலை புளிப்பேப்பம்-அக்கினிமந்தம்-மார்நோய்-மேற்சுவாசம்-கைகாலெரிவுமுதலியவைநீங்கும்.

## இரத்தினகூழ்ப்பாண்டலேகியம்.

கலியாணப்பூசினிச்சார்படி-ச, தாழைவிழுதுச்சார்-தென்னம்பாளைப்பூச்சார்-தேசிச்சார்-பொன்னாங்கண்ணிச்சார் - மணத்தக்காளிச்சார் சிறுகீரைச்சார்-முள்ளங்கிச்சார்- விழுதிச்சார் வகைக்குப்படி அரை, நன்னாரிவேர் பொழும்படி-வ-ஒக்கச்சேர்த்து ஒரு வீசைச் சர்க்கரைக்கலந்து வடியிட்டு சுண்டக்காய்ச்சிப் பாகு பதத்தில்

| | | | |
|---|---|---|---|
| சோம்பு | பலம்—உ | கொற்றுமல்லிவிரை | பலம்—உ |
| மிளகு | உ | வால்மிளகு | உ |
| கசகசா | உ | ஏலம் | உ |
| லவங்கம் | உ | சாசிரா | உ |
| சாதிபத்திரி | க | மதுரம் | க |
| தாளிச்சப்பத்திரி | க | கோஷ்டம் | க |
| சாதிக்காய் | க | மாசக்காய் | க |
| நீர்முள்ளிவித்து | க | ஆவாரம்பூ | க |
| சீந்திற்சர்க்கரை | க | ரோஜாப்பு | க |
| சூரத்துநிலவாகை | க | கோரைக்கிழங்கு | க |
| கூகைநீர் | க | பரங்கிச்செக்கை | க |

பூசினிக்காய்வற்றல் பலம்-உ௰, இவைகளைச்சூரணித்துமேற்படி பாகிற்றூவி நெய்படி-அரை,தேன்படி-க-கூட்டி லேகியப்பதத்தில்

புன்னைக்காயளவு அக்கினிசந்தி அரை மண்டலங்கொள்ள கைகால் மெய்யெரிவு - மேகச்சூடு - பித்தச்சூடு கிறுகிறுப்பு-வரட்சி-பீலி. கை-இரத்தபித்தம்-இருமல் - பித்தகாசமுதலியவை நீங்கி தேகசு வுண்டாம்.

மதனசிந்தாமணி லேகியம்.

நாட்பட்டகாடிபடி - ரு, புளித்தமோர்படி - ரு, தேசிச்சார் படி - ரு, புளிப்பு மாதுளம்பழச்சார்படி அரை, கடல்புளிப்பு-து லா-க-சேர்த்துப் பாண்டத்திட்டு அரப்பொடிச்சிட்டம் பலம்-க, புளியிலைப்பலம்-ம், கொக்கிப்போட்டுக்கலக்கி அடுப்பேற்றி எட்டி லொன்றாய்க்காய்ச்சிவடித்து இஞ்சிரசம் பழச்சார்-நெருஞ்சிரசம் சிறுகீரைச்சார்-செருப்படைச்சார்-தென்னம்பாளைப்பூச்சார்-கீழ்க் காய்நெல்லிச்சார்-பொற்கையான்சார்-ஆடாதோடைச்சார் புளியா ரைச்சார் - புதீனச்சார் வகைக்குப்படி-வ-ஒக்கச்சேர்த்து ஆவின் பால்படி-க-கூட்டிப்பனைவெல்லம் பலம்-ம் கரைத்துச்சற்றுக்கொ திக்கவைத்து வடித்து வேறு பாண்டத்திட்டுப் பாகுபதத்தில்,

| | |
|---|---|
| சீரகம் | கருஞ்சீரகம் |
| மிளகு | வால்மிளகு |
| சுக்கு | திப்பிலி |
| ஓமம் | தான்றிக்காய் |
| நெல்லிக்காய் | கடுக்காய் |
| கோஷ்டம் | மாஞ்சில் |
| ஏலம் | கிராம்பு |
| தாளிசம் | லவங்கப்பட்டை |
| ஆனைத்திப்பிலி | திப்பிலிமூலம் |

வகைக்குப்பலம்-அரை.

சூரணித்து மேற்படி பாகிற்றூவி ஆவின் நெய்படி அரை சேர்த் துக்கிண்டி தேன்படி-வ-சேர்த்துப் பதப்படுத்தி கழற்சியளவுலே கியத்தில் சிமைக்கல்நார் பற்பம் வைத்துண்ண பித்தம் - கழலை- கிறுகிறுப்பு-சத்தி குமட்டல்-மயக்கம்-மகோதரம்-பீலிகை - சோ கை-கிரகணி-இருமல் வயிற்றுப்பிசம்-இரைச்சல் அக்கினிமந்தமு தலியவை நீங்கும்.



இந்திரியப்புஷ்டித்தம்பனலேகியம்.

| | |
|---|---|
| சீமைநீர்முள்ளிவிரை | முள்ளங்கிவிரை |
| பீஸ்பந்துவிரை | அதசன்விரை |
| துளசிவிரை | நாயுருவிவிரை |
| சிறியஆளிவிரை | நத்தைச்சூரிவிரை |
| அத்திவிரை | சந்தனவிரை |
| அத்திவிரை | செவ்வகத்திவிரை |
| ஆலம்விரை | மாதுளைவிரை |
| சிறுபூனைக்காலிவிரை | சிறுகாஞ்சோரிவிரை |
| சுருள்ளிவிரை | ஆவாரைவிரை |
| செண்பகவிரை | சமுத்திரஜோகிவிரை |
| அழிஞ்சல்விரை | அவுரிவிரை |

வகைக்குப்பலம்-அரை,

இவைகளைச்சலத்தில் ஊரவைத்துக் குழவியில் ருப்பிக்கறைந்து வடியிட்டுக்கொள்ளவும், நின்றதிப்பியை மறுபடியும் ருப்பிருப்பி மூன்றுவிசை முன்போல் வடிகட்டிக்கொள்ளவும், கடைசியில் நின்றதிப்பியை அப்புறப்படுத்தி விடவும்.

| | |
|---|---|
| பாதாம்பருப்பு | பிஸ்தாப்பருப்பு |
| அக்ரோட்பருப்பு | சாரப்பருப்பு |
| முருங்கைவிரைப்பருப்பு | தாமரைவிரைப்பருப்பு |
| பருத்திவிரைப்பருப்பு | பூசினிவிரைப்பருப்பு |

வகைக்குப்பலம் அரை,

இவைகளை ஆவின்பால் விட்டரைத்துக்கொள்ளவும்.

| | |
|---|---|
| தண்ணீர்விட்டான் கிழங்கு | பூமிச்சர்க்கரைக்கிழங்கு |
| நிலப்பனைக்கிழங்கு | கோரைக்கிழங்கு |
| கதலிக்கிழங்கு | சாரணைக்கிழங்கு |
| அமுக்கராக்கிழங்கு | மருட்கிழங்கு |

வகைக்குப்பலம்-அரை,

இவைகளைச்செவ்விளநீரால் மைபோலாட்டி யெடுக்கவும்.

| | |
|---|---|
| சாலாமிசிரி | வேலம்பிசின் |
| இலவம்பிசின் | முருங்கைப்பிசின் |
| ஆவாரம்பிசின் | வில்வப்பிசின் |
| விளாம்பிசின் | அத்திப்பிசின் |
| வேப்பம்பிசின் | ஆலம்பிசின் |

வகைக்குப்பலம்-அரை.

இவைகளைநிம்பழச்சாற்றில் ஊரவைத்துமை போலாட்டி யெடுக்க வும்.

| | |
|---|---|
| ரோசாப்பூ பலம்—உ, | சூரத்துநிலவாகை பலம்—உ |
| மதனப்பூ | மதன்மஸ்தகி |
| மகரப்பூ | சுக்கு |
| மிளகு | திப்பிலி |
| நெல்லிக்காய் | தான்றிக்காய் |
| கடுக்காய் | பற்பாடகம் |
| கிராம்பு | சாதிக்காய் |
| சாதிபத்திரி | சித்தரத்தை |
| வெட்டிவேர் | நன்னாரிவேர் |
| சுத்திசெய்தகோரக்கர்மூலி | தேத்தான்வித்து |

வகைக்குப்பலம்-அரை.

இவைகளையிடித்துச்சூரணித்துக்கொள்ளவும்.

செவ்விளநீர்படிஅரை, வெள்ளைச்சர்க்கரைவீசை, ௧-கலந்து வடியிட்டு மேற்கூறிய வித்துகளின் சாரத்தையுங்கலந்து அடுப் பேற்றித் தந்துபாகத்தில் அரைத்தப்பருப்பு தினுசுகளையும் பிசி ன்வகைகளையும் சேர்த்து கொஞ்சநேரங்கிண்டி உடனேசூரணங் களைத்தூவி லேகியம் முதிராப்பதத்தில் நெய்வீசை அரை, விட் டுக்கிளறி எரக்கி ஆறின பின் நீக்கிய தேன் வீசை கால், விட்டு எட்டி லொருபங்கு குல்கந்தும்சேர்த்து ரோசித்து கெச்சக்காயளவு லேகி யத்தில் தங்கச்சுண்ணம் அல்லது வெள்ளிச்சுண்ணம் அரிசியெ டைவைத்துக் காலை மாலை அரை மண்டலமுண்ண நாபிரோணம்- உட்சூடு-அஸ்திவெட்டை-சொரி மேகப்புடை-வெண்மேகம்-கரு ம்புள்ளிமேகம்-வெடிசூலை-குழிப்புண்-அசிரணம்-கைகால் மெய் யெரிவு கண்புகைச்சல்- எலும்புருக்கி - வெகுநாளைய பேடித்தன முதலியவைநீங்கி விந்துவிர்த்தி தேஜசுவுண்டாம், அன்றி மேற்படி லேகியத்தை வுண்ணுங்கால் இரவில் ஆவின்பாலுண்ணவும்.

மன்மதமனோரஞ்சித விரியவிர்த்திலேகியம்.

சுத்திசெய்தநெல்லிகெந்திபலம்-உ, வாலரசம்பலம் உ, கல் வத்திலிட்டுப்பொடித்து செம்மறிக்கோஜங்கள் பலம் ௫, நையவிடி த்துக்கலந்து கம்மாறு வெற்றிலைச்சாற்றால் இரண்டுசாமமாட்டி சம - குளிகைகள் கட்டி வாலிபக்கருஞ்சேவலுக்கு அந்திசந்தி



மேற்படி குளிகை நாலுவீதம் வெண்ணெயில் தோய்த்து கோ துமைமாவில் புரட்டி-௰-நாளூட்டி பன்னீர்க்குடிப்பிக்கச்செய்து ௰௧-வது நாள் தலை-கால் ரோமம் குடல்போக்கி

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | சீரகம் |
| ஏலரிசி | [illegible] |
| தான்றிக்காய் | கடுக்காய் |
| லவங்கப்பட்டை | லவங்கம் |
| மாசுக்காய் | ஏலக்காய்விதை |
| தாளிசம் | சோம்பு |
| குராசானி | மராட்டிமொக்கு |
| முள்ளங்கிவித்து | நீர்முள்ளிவித்து |
| பூமிச்சர்க்கரைகிழங்கு | வேலம்பிசின் |

வகைக்குச் சூரணம் பலம்-அரைக்கால்,

| | |
|---|---|
| வெள்ளிச்சுண்ணம் | அயச்செந்தூரம் |
| கல்நார்பற்பம் | வெள்வங்கச்சுண்ணம் |
| கல்மதபற்பம் | சிலாசத்துபற்பம் |

வகைக்கு விராகனெடை-அரை,

இவைகளை ஒன்றுபடுத்தி மேற்படி கோழிவயற்றினுள்வைத்து அபானம் - கழுத்து - வயர்முதலியதும் சந்தில்லாமல் தைத்து ஆவின்நெய்யில் வறுத்தெடுத்து உள்ளிருக்கும் மருந்துகளையும் தசையையும் எலும்புபோக்கி வெவ்வேறு உலர்த்திச்சூரணித்து ஒன்றுகலந்து செவ்விளநீர்படி-அ, வெள்ளைச்சர்க்கரை வீசை-வ- சேர்த்து வடியிட்டு அடுப்பேற்றிப் பாகுபதத்தில் மேற்படி சூர ணங்களைத்தூவி நெய்வீசை-வ, சேர்த்துக்கிண்டி லேகியப்பதத் திலெரக்கி நுரைநீக்கிய தேன்பலம்-௫, கூட்டி கோரோசனை-குங் குமப்பூ, கஸ்தூரி வகைக்கு விராகனெடை-வ, கலந்து கெச்சக்கா யளவு லேகியத்தை மண்டலம் அந்திசந்தியுண்ண மேகரோகங்க ள்நீங்கி விந்துவூறும்.

சுகபோகவிரியவிர்த்தி லேகியம்.

ஒருதேங்காயின் கண் திறந்து அதனுள் நீர்முள்ளி வித்து பலம்-உ, நெருஞ்சல்வித்து- முள்ளங்கி வித்து - வெட்பாலைவித்து

ஆகாயக்கெருடன்கிழங்கு பலம்-டுஉ, இவைகளையிடித்துப்பாண்டத்திலிட்டு ச-படி சலம் வார்த்து ஒ-படியாகச்சுண்டக்காய்ச்சி வடித்து ஈருள்ளிச்சார் அழாக்கு-க, விளக்கெண்ணெய்படி ஒ, ஒன்றுகலந்து மேற்படி யெழுஞ்செய்த திப்பிலியை ஆவின்பாலாலாட்டிக்கறைத்துப்பதமாய்க்காய்ச்சிவடித்து [illegible] ஒ, பலம் [illegible] எ-டு-நாளுண்ண பிரமேகம்-கிரந்தி-வெண்மேகம் இரணம் - மேகவூரல்-புழுவெட்டு மலச்சிக்கல் நீர்ச்சுருக்கு-மஞ்சள் மூத்திரமுதலியவை நீங்கும், இச்சாபத்தியம்.

## பிரம்மதண்டி எண்ணெய்.

பிரமதண்டிச்சமூலச்சார்படி-க, ஆவின்பால்படி - ௨, வெள்ளாட்டுப்பால்படி ௨, முத்தெண்ணெய்படி - முக்கால், சேர்த்துப் பாண்டத்திலிட்டு

| | |
|---|---|
| கழற்சிவேர் | முடக்கத்தான்வேர் |
| நற்சங்கன்வேர் | நல்வேளைவேர் |
| கருஞ்சீரகம் | சீரகம் |
| மதுரம் | வெந்தயம் |
| ஏலம் | திப்பிலி |

வகைக்குப்பலம்-க,

இவைகளை ஆவின்பாலாலாட்டி மேற்படி பாண்டத்திற் கரைத்துப்பதமாய்க்காய்ச்சிவடித்துச் சிறுகரண்டிவீதம் ரு-எ-நாளுண்ண கொறுக்குப்புண்-குழிப்புண்-யோனிப்புண் விரணப்புற்று-மேகவெள்ளை-கைகால்பிடிப்பு குத்துவாதம்- தாடைவாழை முதலியவைநீங்கும், கடும்பத்தியம்.



## சஞ்சீவி எண்ணெய்.

| | |
|---|---|
| கடுக்காய் | பிஞ்சுகடுக்காய் |
| கடுக்காய்ப்பூ | சீரகம் |
| வேப்பம்பட்டை | பரங்கிச்செக்கை |
| மிளகு | வெண்மிளகு |
| வெந்தயம் | நெல்லிவற்றல் |
| முள்ளி | கோஷ்டம் |
| மதுரம் | சுக்கு |

வகைக்குப்பலம்-க,

ஆவின்பாலிலாட்டி சித்தாமணக்கெண்ணெய் ஆவின்பால்-கற்றாழைச்சாறு-சிசவ்வல்லிக்கிழங்குச்சார்-செவ்விளநீர் வகைக்குப்படி-க, ஒன்றுசேர்த்துக்கறைத்து வாளம் பலம் முக்கால், கூட்டிப்பதமாய்க்காய்ச்சிவடித்து உச்சிக்கரண்டிவீதம் ௨-௦-மண்டலமுண்ண பெரும்பாடு-சூலை-பட்சவாதம்-மேகவெள்ளை-மதுமேகம்-இரத்தவெள்ளை-மஞ்சள்வெள்ளை - மேகச்சூடு முதலியவை நீங்கும், பத்தியம் கடுகெண்ணெய்-புளி-புகை-புலால் நீக்கவும்.

## மாந்தஎண்ணெய்.

நஞ்சசார்-ஈருள்ளிச்சார்-பொடுதலைச்சார்-முசுமுசுக்கைச்சார்-ஆடாதோடைச்சார் வகைக்குப்படி-ஒ, சிற்றாமணக்கெண்ணெய்ப்படி-க, ஒன்றுபடுத்தி அடுப்பேற்றி கொதிவருந்தருணத்தில் வில்வக்கொழுந்துபிடி-உ, கருஞ்சீரகம் விராகனெடை உ, கடுக்காய்த்தோல் விராகனெடை-ச, பொரித்தவெண்காரம்விராகனெடை-உ, நசுக்கிப்போட்டுச் சீனிச்சர்க்கரைப்பலம் - உஒ, சேர்த்துப்பதமாய்க்காய்ச்சிவடித்துக் குழந்தைகள் பெலமறிந்து ஒ-க-கஒ, கரண்டிவீதம் ரு-எ காளுண்ட அஜீரணமாந்தம்-பொருமல்- விம்மல்-கோழை இருமல் முதலியவை நீங்கும், பத்தியம்கைப்பு-புளிப்பு-இனிப்பு-புகையிலை முதலியவைகளை தாய் நீக்கவும்.

—()—

## தயிலங்கள்.

### ஆயுள்.

புவிதனில்யார்க்கருக்குப்பொருந்தியபோகந்தாலே
நவயிலம்பொறிதிளம்பிராடியச்சிரநோய்ப்போக்கும்
பவுயிலாப்பரிதிபோன்றபரிமளத்தயிலமாயுள்
ஆவளியிற்பண்டிதர்தாயகைதந்திடுத்திங்கள்பத்தே.

### மகாசந்தனாதித்தயிலம்.

| | | | |
|---|---|---|---|
| மலாக்காய் | பலம் — ௰, | சந்தனம் | பலம் — ௰, |
| சீதன்ஞெரி | | நத்தைச்சூரி | |
| நாயுருவிவேர் | | வெட்டிவேர் | |
| விலாமிச்சு | | சிந்தில் | |
| வெலிப்பருத்தி | | முத்தக்காசு | |
| மதுரம் | | அமுக்கராவேர் | |
| செஞ்சந்தனம் | | சதாவேரி | |
| கூவிளம்வேர் | | தேவதாரி | |
| சாரணைவேர் | | மருட்கிழங்கு | |
| கொட்டிமூலம் | | லவங்கப்பத்திரி | |
| கருவாய்ப்பட்டை | | தக்கோலம் | |

வகைக்குப்பலம் க,

இவைகளை அ-படி சலம்விட்டு க படியாகக்கண்டித்து எள்ளெண்ணெய்ப்படி-௩, முசுமுசுக்கை நெல்லிக்காய்-பொற்கையான்-கரிசலைச்சாறு வகைக்குப்படி-க, ஒன்றாயமித்தி

| | |
|---|---|
| வால்மிளகு | கோஷ்டம் |
| குக்கில் | லவங்கம் |
| வங்காளப்பச்சை | பூலாக்கிழங்கு |
| பச்சிலை | கிச்சிலி |
| சித்தரத்தை | சடாமாஞ்சில் |
| ஓமம் | வெளிச்சப்பிசின் |
| வெம்பாடம் | ஏலம் |
| கொற்றுமல்லிவிதை | சாதிக்காய் |
| கருஞ்சீரகம் | கார்போகவித்து |
| சாதிபத்திரி | மாசக்காய் |



| | |
|---|---|
| தாளிசம் | கஞ்சா |
| சிறுநாகப்பூ | அகத்திப்பூ |
| கிராம்பு | கிளியூரல்பட்டை |
| கோரைக்கிழங்கு | தகரைவேர் |
| சீரகம் | கஸ்தூரிமஞ்சள் |

வகைக்குக்கழஞ்சு உ,

ஆவின்பாலாலரைத்து மேற்படி எண்ணெயிற்கரைத்து அடுப்பேற்றித் தயிலபாகமாய்க்காய்ச்சி எரக்குஞ்சமயத்தில் புழுகு குங்குமப்பூ-கோரோசனை வகைக்குக்கழஞ்சு-க, பொடித்துப்போட்டு ஸ்நானஞ்செய்துவர வாய்நாற்றம்-தலைநோய்-மண்டையிடி-மண்டைக்குத்து-கண்ணோய் செவிநோய்-வியர்வை-நாவரட்சி பீனிசம்-சன்னி-சோகை-காமாலை-தலைசுழற்றல்-கைகால் வெப்பக்கண்ணெரிவு-ஆஸ்திசுரம்-ஒற்றைத்தலைவலி கண்ணில் நீர்வடிதல்முதலியபித்தரோகங்கள் நீங்கும், பத்தியம் கடுகெண்ணெய் புளிபுகை புலால் பகல் நித்திரை மடந்தையர்கலவி முதலியவை நீக்கவும்.

### அரக்குத்தயிலம்.

கொம்பரக்குசேர் க, ௬-படி சலம்வார்த்து உ படியாகக்கண்டித்து வடிகட்டி நல்லெண்ணெய் சேர்-௫, தயிர்-தண்ணீர்-சேர் உ, ஆவின்பால் சேர்-௫, கஞ்சிக்காடி சேர்-உ, ஒன்றுகலந்து

| | |
|---|---|
| சதகுப்பி | கடுகுரோகணி |
| கிளியூரல்பட்டை | பூஞ்சாந்து |
| பச்சிலை | பூலா |
| செவ்வள்ளி | லவங்கப்பத்திரி |
| லவங்கம் | மாஞ்சில் |
| கோஷ்டம் | கஸ்தூரிமஞ்சள் |
| மதுரம் | சந்தனம் |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| மெருகன்கிழங்கு | ஏலம் |

வகைக்குக்கழஞ்சு உ,

இவைகளை ஆவின்பாலாலரைத்து மேற்படி எண்ணெயிற்கரைத்துப் பதமாய்க்காய்ச்சிவடித்து தயிலத்தை ஸ்நானஞ்செய்துவர சுரம்-இருமல்-கபம்-பீனிசம்-சலதோஷம்-சேத்துமநோய்கள் முதலியவை நீக்கும், பத்தியம் வாய்ந்த பதார்த்தங்கள்ளவும்.

### கலப்பைத்தயிலம்.

எள்ளெண்ணெய்ப்படி க-ல், கலப்பைக்கிழங்குபலம்-க, அபின் விராகனெடை-உ, மஞ்சள்-கஸ்தூரிமஞ்சள்-மரமஞ்சள்-வலம்புரிக்காய்-இடம்புரிக்காய்-மிளகு-பூண்டு வகைக்குப்பலம் - ௨, பொடித்துப்போட்டுச்சிவந்தபதமாய்க்காய்ச்சிவடித்து ஸ்நானஞ்செய்ய சன்னி-சுரம்-மண்டையிடி வாய்வு-சீதளம்-மண்டைக்குடைச்சல முதலிய சேத்துமநோய்கள் நீங்கும், பத்தியம் மூழுகுநாள் புளி-புகை-புலால் தள்ளவும்.

### சந்தனாதித் தயிலம்.

எள்ளெண்ணெய்படி-க, கொடிப்பைச்சார்-கரிசாலைச்சார்-சிறுசிறைச்சார்-நெய்ச்சிட்டிச்சார்-வல்லாரைச்சார்-பொடுதலைச்சார்-மேனிச்சார்-முசுமுசுக்கைச்சார்-மணத்தக்காளிச்சார் வகைக்குப்படி ௨, அருகன்கட்டை பலம் ய, மிளகு பலம்-ரு, நையயிடித்துப்பாண்டத்தேற்றி ௬-படி சலம்வார்த்து ௨-படியாகச்சுண்டித்து வடித்த கியாழத்தை முன்சாறுகளும் எண்ணெயுங்கலந்து

| | |
|---|---|
| மஞ்சிட்டி | ஏலம் |
| செண்பகப்பூ | சிறுநாகப்பூ |
| கருவாய்ப்பட்டை | கோஷ்டம் |
| தேவதாரி | மல்லி |
| மரப்பூ | அன்னாசிப்பூ |
| வால்மிளகு | கஸ்தூரிமஞ்சள் |
| பச்சிலை | இச்சிலி |
| சாசீரா | கோரைக்கிழங்கு |

வகைக்குப்பலம்-க,

ஆவின்பாலலாட்டி மேற்படி எண்ணெயிற் கரைத்துப்பதமாய்க்காய்ச்சிக் கம்பளத்தால்வடித்து குங்குமப்பூ-புழுகு-கோரோசனம் வகைக்குக்கழஞ்சு-௨, பொடித்துப்போட்டு தானியத்தில் மண்டலஞ்சமாதிவைத்து பின் ஸ்நானஞ்செய்துவர கைகால்மெய்கண்ணெரிவு-புகைச்சல்-கண்ணில்நீர்வடிதல்-நீரிழிவு-நீர்க்குகல் குலை அஸ்திசுரம்-அஸ்திவெட்டை-கண்டமாலை இருமல்-பித்தமயக்கம்-மூர்ச்சை-தேகவாட்சி-காமாலை-கற்றுமைசாற்றம்-பீனிசமுதலியவைநீங்கும்.



### பூதண்டத்தயிலம்.

அருகன்கட்டை வீசை-க, மிளகு-௨, வெந்தயம் பலம் ௨௦-நையயிடித்துப்பாண்டத்திட்டு அ படிசலம்வார்த்து ஒருபடியாகச்சுண்டித்து வடித்து எள்ளெண்ணெய்ப்படி-க, சேர்த்து

| | |
|---|---|
| ஏலம் | கருவாய்ப்பட்டை |
| வெட்டிவேர் | விலாமிச்சு |
| சந்தனம் | கோஷ்டம் |
| இலிபூசல்பட்டை | பச்சிலை |
| இச்சிலி | கஸ்தூரிமஞ்சள் |
| தவனம்வேர் | கார்போகவரிசி |
| கோரைக்கிழங்கு | பளிங்குசாம்பிராணி |

வகைக்குப்பலம்-க,

ஆவின்பாலலாட்டி மேற்படி எண்ணெயிற் கரைத்துப்பதமாய்க்காய்ச்சி வடித்து குங்குமப்பூ-கோரோசனை-புழுகுவகைக்கு விராகனெடை-க, பொடித்துப்போட்டு ஸ்நானஞ்செய்துவர யதாகந்த...இதின் குணங்களிதற்குண்டு

### மரிசாதித்தயிலம்.

மிளகு பலம்-ய, அரைப்படி ஆவின்பாலில் ஒருநாளூறவைத்து மறுநாள் வேறு ஆவின்பாலொருபடி விட்டு அடுப்பேற்றி சுண்டக்காய்ச்சி பலகையிற்கொட்டிப்பரப்பி உலர்த்திப்பாண்டத்திட்டு எள்ளெண்ணெய்ப்படி ௨ வார்த்து அடுப்பேற்றியெரித்து ஏ-அ-மிளகு வெடிக்குஞ் சப்தங்கண்டால் இறக்கி வடித்து ஸ்நானஞ்செய்துவர பித்தச்சூடு-கைகால் மெய்கண்ணெரிவு-சோகை, பாண்டு-காமாலை-வீக்கம்-அழலைமுதலியவை நீங்கும், இச்சாபத்தியம்.

### சிறுசந்தநாதித்தயிலம்.

சந்தனத்தூள்-வெட்டிவேர்-வகைக்குப்பலம்-க, நையயிடித்துப்பாண்டத்திட்டு ௪-படி சலம்வார்த்து ௨-படியாகச்சுண்டித்து வடிக்கவும்

| | |
|---|---|
| வில்வவேர் | நீர்வள்ளிக்கிழங்கு |
| கண்ணுர்வேர் | சிந்தில்வேர் |

| | |
|---|---|
| முத்தக்காசு | சல்லிவேர் |
| கொட்டிக்கிழங்கு | நெய்தற்கிழங்கு |
| தாமரைக்கிழங்கு | சிலப்பலைக்கிழங்கு |
| விலாமிச்சுவேர் | குருந்தொட்டிவேர் |
| ஆலம்விழுது | பொன்னாங்கண்ணிவேர் |
| ஆவாரம்பட்டை | மணத்தக்காளிவேர் |
| கரிசாலைவேர் | பொடுதலைவேர் |

வகைக்குப்பலம்-உ,

நையயிடித்துப்பாண்டத்திட்டு அ-படி சலம் வார்த்து ஒருபடியா கச்சுண்டித்து வடித்து மேற்படி யெழுத்துடன் கலந்து

| | |
|---|---|
| மூடக்கத்தான் | விழி |
| நொச்சி | முருங்கிலை |
| கற்றாழை | பொன்னாங்கண்ணி |
| நீர்வள்ளிக்கிழங்கு | கையாந்தகரை |

சாறுகள் வகைக்குப்படி-க,

செவ்விளநீர்படி உ, ஒன்றுபடுத்தி மேற்படி யெழுத்துடன் கலந்து நல்லெண்ணெய்ப்படி உ, சேர்த்து ஆவின்பாலபடி-க,உ, ஒக்கக்கூட்டி

| | |
|---|---|
| அதிற்கட்டை | செஞ்சந்தனம் |
| சாதிக்காய் | சாதிபத்திரி |
| கிராம்பு | கச்சோலம் |
| ஏலம் | வைங்கம் |
| லவங்கப்பத்திரி | சித்தரத்தை |
| மஞ்சிட்டி | தக்காளப்பச்சை |
| பேரீச்சு | முந்திரிகை |
| சடாமாஞ்சில் | பூலாக்கிழங்கு |
| செவ்வள்ளிக்கொடி | தேவதாரி |
| சிறுசெண்பகப்பூ | தாளிசம் |
| இலிபூரல்பட்டை | குராசாணி |
| ஓமம் | மதுரம் |
| சிறுநாகப்பூ | சாத்திரபேதி |

வகைக்குக்கழஞ்சு-க,

இளநீராலாட்டி மேற்படி யெண்ணெயிற்கரைத்துப் பதமாய்க்காய்ச்சி எரக்குஞ்சமயத்தில் சாம்பிராணி-கோஷ்டம்- வகைக்குக்கழ



ஞ்சு-உ, குங்குமப்பூ-கோரோசனை-கஸ்தூரி-பச்சைகற்பூரம்-புழுகு வகைக்கு விராகனெடை ௨ - பொடித்துப்போட்டு வடித்து ஸ்நானஞ்செய்துவர மகாசந்தாதிக்குச்சொன்னகுணங்களுண்டு பத்தியம் முழுகுநாள் மோர்-தயிர்-பால்-புளிப்பு-இரைச்சிமுதலியவை நீக்கவும்.

## மதுராதித்தயிலம்.

| | |
|---|---|
| சிறுகீரை | பொன்னாங்கண்ணி |
| தாமரைவளையம் | ஆவாரையிலை |
| தாழைவிழுது | கையாந்தகரை |

வகைக்கு வீசை-௨,

அ-படி சலம் வார்த்து ௨ படியாகச்சுண்டித்து வடிக்கவும், வெட்டிவேர் பலம்-ரு, விலாமிச்சு-ச, சந்தனம்-ரு, செங்கழுநீர்மூலம் உ, இவைகளைச்செவ்விளநீராலாட்டி அ-படி சலம்வார்த்து ௨ படியாகச்சுண்டித்து முன்யெழுத்தோடு கலந்து எள்ளெண்ணெய்ப் படி-க, சேர்த்து

| | |
|---|---|
| இலவங்கப்பூ | ஏலம் |
| கோஷ்டம் | மதுரம் |
| செண்பகப்பூ | சாதிபத்திரி |
| மஞ்சிட்டி | சிறுநாகப்பூ |
| சாதிக்காய் | சடாமாஞ்சில் |
| கிராம்பு | சீரகம் |
| கல்நார்பற்பம் | கூவைநீர் |

வகைக்குக்கழஞ்சு-க,

செவ்விளநீராலாட்டி மேற்படி எண்ணெயிற்கரைத்துப் பதமாய்க்காய்ச்சி எரக்குஞ்சமயத்தில் பச்சைகற்பூரம்-புழுகு-கோரோசனை வகைக்குக்காலெடை-க, பொடித்துப்போட்டுக்காய்ச்சிஸ்நானஞ்செய்துவர சிறுசிரப்பு - சுழலைமூர்ச்சை கைகால் மெய்கன்னெரிச்சல்- புகைச்சல்-மண்டையிடி-மண்டைக்குத்து தலைநோய்-பிடரிசன்னி முதலியவைதீக்கும் இச்சாபத்தியம்.

## நேத்திரரோகம் ௯௬-க்குத் தயிலம்.

| | |
|---|---|
| நெல்லிச்சார் | கையான்சார் |
| முசுமுசுக்கைச்சார் | வெள்ளறுகுச்சார் |
| ஆவின்பால் | செவ்விளநீர் |
| கரிசாலைச்சார் | எள்ளெண்ணெய் |

வகைக்குப்படி-௧

இவைகளை யொன்றுபடுத்திப் பாண்டத்தேற்றி

| | |
|---|---|
| கடுக்காய் | தான்றிக்காய் |
| சிவதைவேர் | நெல்லி |
| விலாமிச்சு | இருவேலி |
| அகிற்கட்டை | நன்னாரி |
| கோரைக்கிழங்கு | பச்சிலை |
| மதுரம் | தேவதாரி |
| கச்சோலம் | சீரகம் |
| சித்தாமுட்டி | சாம்பிராணி |
| ஏலக்காய் | கோஷ்டம் |
| வலம்புரிக்காய் | இடம்புரிக்காய் |
| கருஞ்சீரகம் | சடாமாஞ்சில் |
| பூலாக்கிழங்கு | தண்ணீர்விட்டான் |

வகைக்குப்பலம்-வ,

இவைகளை முக்கன் கனிப்பாலாலாட்டி மேற்படி எண்ணெயிற்கறைத்துப்பதமாய்க்காய்ச்சிவடித்து ஸ்நானஞ்செய்துவர நேத்திரரோகம் ௯௬-ம், பிடரிவலி-சன்னிபாதம்-மயக்கம்-ஒண்டித்தலைநோய்-கபாலவலி-தலைகனப்பு-மந்தாரகாசம்-கண்கூச்சம் - கண்ணில் நீர்வடிதல்-குரல்கம்மல் முதலிய கண்டத்திற்கு மேற்பட்ட வியாதிகள் நீங்கும், பத்தியம் புளி-புகை-புலால்-பகல் நித்திரை தையலார்க்கலவி சீதளப்பண்டம் ஆகாது.

## வில்வாதித்தயிலம்.

வில்வப்பழச்சதை-விலாமிச்சன்வேர்-சீந்தில்வேர்-கோரைக்கிழங்கு சந்தனம்-வெட்டிவேர் கிறக்காய்நெல்லிவேர் வகைக்குப்பலம் இ, நையவிடித்துப்பாண்டத்திட்டு ௮-படி சலம் வார்த்து ஒருபடியாகச்சுண்டித்து வடிக்கவும், கொம்பரக்கு சேர் ௧, ௮-



படி சலம் வார்த்து ௨-படியாகச்சுண்டித்து மேற்படி கியாழத்துடன் கலந்து எள்ளெண்ணெய் ஆவின்பால் வகைக்குப்படி-௧, கூட்டி

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | கடுக்காய் |
| தான்றிக்காய் | நெல்லிக்காய் |
| கஸ்தூரிமஞ்சள் | மதுரம் |
| கோஷ்டம் | கருஞ்சீரகம் |
| மஞ்சள் | மரமஞ்சள் |
| சந்தனம் | கிளியூரல்பட்டை |
| செவ்வள்ளி | லவங்கப்பட்டை |
| பச்சிலை | கிச்சிலி |
| விளாம்வேர் | பூலாக்கிழங்கு |

வகைக்குப்பலம்-௧,

இவைகளை ஆவின்பாலாலாட்டி மேற்படி எண்ணெயிற்கறைத்துப்பதமாய்க்காய்ச்சிவடித்து குங்குமப்பூ-கழஞ்சு-௧, கோரோசனை விராகனெடை-௧, கஸ்தூரி விராகனெடை-வ, பொடித்துப்போட்டு மாதத்திற்கிரண்டுவிசை ஸ்நானஞ்செய்துவர கிறுகிறுப்பு-சுழலை-மூர்ச்சை-பித்தபீனிசம்-சிரரோகம்-மண்டைக்குத்து-மண்டைக்குடைச்சல்-ஒருதலைவாதம் வரட்சி-வாய்நீரூறல்- கைகால்மெய்கண்ணெரிவு முதலியவை நீங்கும், பத்தியம் முழுநாள் புளிதள்ளவும்.

## குமரித்தயிலம்.

குமரிச்சார்-ஆவின்பால்-எள்ளெண்ணெய்- கரிசலைச்சார்-தும்பைச்சார்-இஞ்சிச்சார் வகைக்குப்படி-௧ ஒன்றுபடுத்திப்பாண்டத்தேற்றி

| | |
|---|---|
| மாஞ்சில் | ஏலம் |
| சுக்கு | சீரகம் |
| திப்பிலி | கோஷ்டம் |
| மிளகு | பூஞ்சாந்து |
| நெல்லிவற்றல் | பச்சிலை |
| கிச்சிலி | தான்றிக்காய் |
| லவங்கப்பத்திரி | கடுக்காய் |

| | |
|---|---|
| லவங்கப்பட்டை | செவ்வள்ளி |
| அப்ளாகாரம் | கஸ்தூரிமஞ்சள் |
| இராம்பு | சந்தனம் |
| அகுரோகணி | பீதரோகணி |
| செண்பகப்பூ | [illegible] |
| மஞ்சிட்டி | சோம்பு |
| மஞ்சள் | ஓமம் |

வகைக்குப்பலம்-௧

இவைகளை ஆவின்பாலாலாட்டிப்பதமாய்க்காய்ச்சிவடித்து-வ-மண்டலம் கான்னியத்தில் சமாதிவைத்து வெய்யற்காலத்தில் மாதத்திற்கிரண்டுவிசை ஸ்நானஞ்செய்துவர அஸ்திசுரம்-அஸ்திவெட்டை-பித்தரோகம்-தேகவரட்சி-ஊரல்-பாண்டு- உஷ்ணரோகமுதலியவை நீங்கும்.

மிருகாமலத்தயிலம்.

| | |
|---|---|
| மிருகாமலச்சார் | காணிச்சார் |
| குமரிச்சார் | சிறுபீளைச்சார் |
| கையாந்தகரைச்சார் | ஆவின்பால் |

வகைக்குப்படி-௧,

செவ்விளநீர்படி-௪, எள்ளெண்ணெய்படி - ௧௨, மேற்படி சாருகளோடுகலந்து பாண்டத்தேற்றி

| | |
|---|---|
| ஏலம் | கோஷ்டம் |
| மதுரம் | குராசானி |
| பச்சிலை | பூலா |
| திரிமஞ்சள் | சாதிபத்திரி |
| சாதிக்காய் | லவங்கப்பத்திரி |
| லவங்கப்பட்டை | திரிகடுகு |
| திரிபலை | பூஞ்சாந்து |
| சோம்பு | வால்மிளகு |

வகைக்குக்கழஞ்சு-௧௨,

இவைகளை ஆவின்பாலாலாட்டி மேற்படி எண்ணெயிற்கரைத்துப்பதமாய்க்காய்ச்சிவடித்து ஸ்நானஞ்செய்துவர கணபுகைச்சல்-எரிச்சல்-நீர்வடிதல்-அந்திக்காமாலை-பித்தவெட்டை-அஸ்திவெட்டை-பித்தமயக்கம்-கபாலசூலை-கைகால்மெய்யெரிவு-தலைகனப்பு-உஷ்ணரோகமுதலியவை நீங்கும்.



ஆதண்டைத்தயிலம்.

ஆதண்டைவேர் - நொச்சிவேர்-நச்சங்கன்வேர் - எருக்கன்வேர்-சித்தாமுட்டிவேர்-கற்றாழைவேர் வகைக்குப்பலம்-௫, நையவிடித்துப்பாண்டத்திட்டு ௮-படி சலம்வார்த்து ௨-படியாகச்சுண்டித்து வடித்து எருக்கிலைப்பழுப்புச்சார்-பழச்சார்-ஆதண்டைச்சார்-வேப்பெண்ணெய் வகைக்குப்படி-வ, எள்ளெண்ணெய்ப்படி ௧, இவைகளையொன்றுசேர்த்து திரிகடுகு-ஓமம்-பூண்டு-வசம்பு-மஞ்சள்-ஏலம் வகைக்குப்பலம் - வ, ஆவின்பாலாலாட்டிக்கரைத்துப்பதமாய்க்காய்ச்சிவடித்து ஸ்நானஞ்செய்துவர சிரச்சூலை மண்டைவாதம்-வாதசூலை-இசிர்வாதம்-நேத்திரவாய்வு சொரி-சிரங்கு-கரப்பான்-இளைப்பு-பித்தவாய்வு - சேத்துமம் இரணமுதலியவை நீங்கும், பத்தியம் புளிப்பு-கைப்பு-புகை-புலால் காய்வுபதார்த்தம் நீக்கவும்.

கீழ்க்காய்நெல்லித்தயிலம்.

கீழாநெல்லிவேர் பலம்-௰, அருகன்கட்டை - ௫, கரிசாலைவேர்-௨௦, இடித்துப்பாண்டத்திட்டு ௮-படி சலம்வார்த்து ௨-படியாகச்சுண்டித்து வடித்து மேற்படி மூலிகைகளின் சாருகள் வகைக்குப்படி-வ, எள்ளெண்ணெய்படி-௨, ஆவின்பால்படி - ௧, ஒன்றுசேர்த்துச் சீரகம்-மிளகு கார்போகவரிசி- கோரைக்கிழங்கு வகைக்குப்பலம் ௧, ஆவின்பாலாலாட்டிக்கரைத்துப் பதமாய்க்காய்ச்சிவடித்து ஸ்நானஞ்செய்துவர உட்சுரம்-மஞ்சள்காமாலை- பாண்டுரோகம்-பித்தவெட்டை-தலைமயக்கம்-சுழலைமூர்ச்சை-வாய்நீரூரல்-சத்தி-மூலாக்கினி-கைகால்மெய்கண்ணெரிவு முதலியவை நீங்கும்.

## பொன்னாங்கண்ணித்தயிலம்.

| | | | |
|---|---|---|---|
| காணிச்சார் | படி—௨, | கரிசாலைச்சார் | படி—௧, |
| நெல்லிச்சார் | ௨ | முலைப்பால் | வ |
| ஆவின்பால் | ௧ | எள்ளெண்ணெய் | ௨ |

இவைகளைப்பாண்டத்திலிட்டு அதிமதுரம்-சீரகம்-ஏலரிசி-கோரைக்கிழங்கு-சந்தனம்-பச்சிலை-பூலாக்கிழங்கு-கிரிமஞ்சள் வகைக்குப்பலம்-௧, முலைப்பாலாலாட்டிக்கரைத்துப்பதமாய்க்காய்ச்சிவடித்து ஸ்நானஞ்செய்துவர பித்தகாசம்-அஸ்திவெட்டை-உஷ்ணத்தலைவலி-நாசிஇரணம்-விந்துக்குற்றம் கை கால் மெய்கண்ணெரிச்சல் நீங்கும்.

—*—



## மேற்பூச்சுத்தயிலங்கள்.

### ஆயுள்.

மேற்பூச்சுத்தயிலங்கண்மேவுமூவாண்டென்றுக்
கூறகத்திசேர்வாய்ச்சொல்.

### புண்புரைகளுக்குத்தயிலம்.

நொச்சிவேர்-அழிஞ்சல்வேர்-விழுதிவேர் புங்கன்வேர்-பூவரசன்வேர்-சிவன்வேம்புவேர் வகைக்குப்பலம்-௰, கையபிடித்துப்பாண்டத்திலிட்டுக் குழித்தயிலமெரக்கிப் புண்புரைகளுக்குப் பூச ஆறும்.

### ஆறாத இரணங்களுக்குத் தயிலம்.

கெல்லிக்கெந்தகம் பலம்-௨, மனோசிலை-கௌரி வகைக்கு விராகனெடை-௨, இவைகளை ஆவின் நெய்பாலாட்டி துல்லியசீலையில் தடவி திரிகளாக்கி நெய்யில் தோய்த்து கதிர்க்கம்பியில் கோர்த்துக்கொளுத்திப்பிடித்து அடியில் பீங்கான்கோப்பை வைக்கத் தயிலமிறங்கும் தயிலத்தை மூக்கு இரணம் காது இரணம்-புரையோடிய இரணம் மேக இரண முதலியவைகளுக்கு உபயோகிக்கவும் அன்றி குன்றியெடைக் கம்மாறுவெற்றிலையில்வைத்து ௫-நாள் உள்ளுக்குத்தாக்க கொறுக்குப்புண்-யோனிப்புற்று- லிங்கப்புற்று-கிரந்தி இரணங்கள் முதலியவை நீங்கும்.

### [illegible]வாதகோடாரித்தயிலம்.

தேங்காயெண்ணெய்-வேப்பெண்ணெய்- எள்ளெண்ணெய்-புங்கெண்ணெய் வகைக்குப்படி-வ, இல்லைப்பால்-பிரம்மதண்டிப்பால்-புங்கம்பால்-முருங்கைவேர்ச்சார்-காட்டுவாகைச்சார்- வெள்ளெருக்கன்பால் - வெள்ளைக்காட்டாமணிப்பால் வகைக்கு ஆழாக்கு-௨, தேங்காய்ப்பால்படி-௨, ஒன்றுசேர்த்துப்பாண்டத்தேற்றிக் கற்கடசம்-கரியுப்பு-இந்துப்பு-வெள்ளுள்ளி-கடுகு-காயம்-மிளகு-மாவிலிங்கன்வேர்-வசம்பு-திப்பிலி வகைக்குக்கழஞ்சு-௧, இவைகளைதேங்காய்ப்பாலாலாட்டி மேற்படி எண்ணெயிற் கலந்து சிவந்தபதமாய்க்காய்ச்சிவடித்துக் கீல்வாதம்-சச்சுவாதம்- நரித்தலைவாதம்-முடக்குவாதம் கடுக்குவாதம்வீக்கமுதலியவைகளுக்கு மேற்பூச நீங்கும்.

குடைச்சல் வாதத்திற்குத் தயிலம்.

எள்ளெண்ணெய்-வேப்பெண்ணெய்-எருக்கன்பால்- புளியிலைச்சார்-நொச்சிச்சார்-வெள்ளாட்டுப்பால் வகைக்குச்சேர்-௨, அபின் துலா-௨,ஒன்றுசேர்த்துக்காய்ச்சி வடிந்து மேற்பூசக் குடைச்சல்வாதம் நீங்கும்.

சன்னிக்குத்தயிலம்.

மாவிலிங்கன்வேர் புனல்முருங்கைவேர்- கூவிளம்வேர்-நொச்சிவேர்-எருக்கன்வேர்-வாதமடக்கிவேர் கருவாய்ப்பட்டை - வெட்டிவேர்-அழிஞ்சல்வேர்-புங்கன்வேர் வகைக்குப்பலம்-ரு, இவைகளையொன்றுசேர்த்து மையயிடித்துப்பாண்டத்திட்டுப்புங்கெண்ணெய்-வேப்பெண்ணெய்-எள்ளெண்ணெய்ச் சமன்சேர்த்து மேற்படி சாக்கில்வார்த்துப்பிசரி குழித்தயில மெரக்கிச்சன்னிகளுக்கு மேற்பூசநீங்கும்.

காதுநோய்க்குத்தயிலம்.

கொள்ளுக்காய்த்தோல்-கொழுஞ்சிவேர்த்தோல்-வலம்புரிக்காய்-இடம்புரிக்காய்-கடல்நுரை- மருதம்பட்டை- கண்டிநாச்சி வகைக்குப்பலம்-௨, ஆவின்பாலாலாட்டி எள்ளெண்ணெய் - வேப்பெண்ணெய்ச் சமன்சேர்த்துக்காய்ச்சிவடித்துக்காதில் ரு-துளிவிடக்காதுக்குத்து [illegible] தில்சீழ்வடிதல்-காதிரைச்சல்முதலியவை நீங்கும்.

சகலசன்னிக்குத்தயிலம்.

வேப்பெண்ணெய்-புங்கெண்ணெய்-எள்ளெண்ணெய்- ஆவின்நெய்-ஆமணக்கெண்ணெய் வகைக்குப்படி-௩, பாண்டத்திட்டுக்கோழிமுட்டை வெண்கரு-௨ரு, உடைத்துவார்த்து

| | | | |
|---|---|---|---|
| இலிங்கம் | பலம்—க, | கெந்தி | பலம்—௨, |
| திமுருகல் | விரா—௮ | ரூதம் | ௩ |
| பாஷாணம் | பலம்—௩ | நாபி | ௩ |
| மிளகு | க | திப்பிலி | ௨ |
| ஆனைத்திப்பிலி | ௩ | லவங்கம் | ௩ |

இவைகளைக்கொடிவேலிக்கியாழத்தாலாட்டி மேற்படி எண்ணெயிற்கலந்து அடுப்பேற்றிக்கொதிவருஞ்சமயத்தில்



| | |
|---|---|
| எருக்கன்பால் | கொடிக்கள்ளிப்பால் |
| சதுரக்கள்ளிப்பால் | முசல்செவிக்கள்ளிப்பால் |
| திருகுகள்ளிப்பால் | இலைக்கள்ளிப்பால் |
| முள்ளுகள்ளிப்பால் | முலைப்பால் |
| கேசரிப்பால் | தேசிச்சார் |

வகைக்குஆழாக்கு-௨,

சொரத்து காட்டெருமைப்பால் பலம்-க, ஆற்றலரியிலை வெள்ளுள்ளி வகைக்குப்பலம்-௩, ஒக்கக்கலந்துப் பதமாய்க்காய்ச்சிவடித்துக்கோரோசனம்-குங்குமப்பூ-கஸ்தூரி பச்சைக்கற்பூரம் வகைக்கு விராகனெடை-௧,பொடித்துப்போட்டுக்கலந்து தயிலத்தை மேற்பூச முடக்குவாதம்-சரித்தலைவாதம்-சச்சுவாதம்- இல்வாதம்-குடைச்சல்வாதம் குத்துவாதம் - வீக்கம் - ஜன்னிரோகமுதலியவை யாவும் நீங்கும் அன்றி பரங்கிப்பட்டைச்சூரணத்தில் ரு-துளிவீதம்வைத்தும் உண்ணலாம். கடும்பத்தியம்.

ஜன்னிக்குவயிரவச்சுடர்த்தயிலம்.

[illegible]ரவின்மாங்கிஷம்-இரசம்-கெந்தசம்-[illegible] துத்தம்-மனோசிலை-கௌரி-அரிதாரம்-படிகாரம்-வெண்காரம் வகைக்கு விராகனெடை-க, பொடித்து துல்லிய சீலையில்பொட்டணங்கட்டிவேப்பெண்ணெய் விட்டெரித்து மூட்டையை யப்புறப்படுத்தி தயிலத்தை பிரலாபசன்னிக்குமேற்பூச நீங்கும்.

வேறு ஜன்னிக்குத்தயிலம்.

வேப்பம்பட்டை-அதிமதுரம்- வேப்பம்வித்து - துராவேர்-ஊமத்தன்வேர்-மேனிவேர்-குன்றிவேர்-இந்துப்பு வகைக்கு விராகனெடை-க, இவைகளை ஆடாதோடைச்சாற்றாலாட்டி மேற்படிசார் எள்ளெண்ணெய்-தேங்காய்ப்பால் வகைக்குப்படி-௩, கலந்து காய்ச்சிவடித்து மேலுக்குப்பூச சன்னிசுர முதலியவைபோம் அன்றி உள்ளுக்கும் [illegible]கிக்கலாம்.

நுரையுப்புத்தயிலம்.

கடல்நுரை-கோஷ்டம் மஞ்சள்-கெந்தி-சந்தனம்-சதகுப்பி-தேன்மெழுகு-விலாமிச்சு-முத்தக்காசு-மஞ்சிட்டி -இலுப்பைப்பூ கடுகுரோகணி-வேலம்பிசின்-பெருங்குரும்பை அவுரிவேர்-வெட்டிவேர் கொடிக்கள்ளிவேர் - எருக்கன்வேர் வகைக்குக்கழஞ்சு-௩, பிரம்மதண்டிப்பாலாலாட்டி. வேப்பெண்ணெய் நல்லெண்ணெய் நெய் வகைக்குப்படி-௩, ஒன்றுகலந்து பதமாய்க்காய்ச்சிவடித்து மேற்பூச சகலவாதரோகஜன்னி சுரங்கள் நீங்கும்.

—()—

## மெழுகுகள்.

### ஆயுள்.

அட்டமாசித்திபெற்ற வந்தரச்சித்தர்சொன்னக்
கட்டளையவுடநங்கள் கணக்கிலேத்தனையின்மீது
சட்டையைச்சித்திசெய்த சமர்த்துளப்புலத்தியரேள
மட்டிலாமெழுகினுயுள் வருத்திவெருடமூன்றே.

### சகலமேகரோகநிவாரண மெழுகு.

| | |
|---|---|
| சதுரக்கள்ளிவேர் | திரிமூலக்கள்ளிவேர் |
| இலைக்கள்ளிவேர் | கொம்புகள்ளிவேர் |
| சிறுசின்னிவேர் | சீந்தில்வேர் |
| பூவரசன்வேர் | சிவன்வேம்புசமூலம் |
| சிவகரந்தைச்சமூலம் | நிம்பவேர் |
| அரசன்வேர் | புங்கன்வேர் |
| நுணாவேர் | வெள்ளெருக்கன்வேர் |
| நச்சங்கன்வேர் | மாவேர் |
| சித்திரமூலம்வேர் | அழிஞ்சல்வேர் |
| வெள்ளறுகுசமூலம் | கழற்சிவேர் |

வகைக்குச்சூரணம் பலம்-க,

| | |
|---|---|
| கார்ப்போகவரிசி | வாலுளுவையரிசி |
| பரங்கிச்செக்கை | தேவதாரி |
| கடுக்காய்த்தோல் | சிறுதேக்கு |
| சித்தரத்தை | கஸ்தூரிமஞ்சள் |
| தாளிசப்பத்திரி | கிராம்பு |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| கோஷ்டம் | வசம்பு |
| மாசக்காய் | சாதிக்காய் |
| காட்டுச்சீரகம் | முந்திரிகை |
| மிளகு | சோம்பு |
| ஓமம் | ஏலம் |
| அரிசித்திப்பிலி | எட்டிவிரை |
| தேத்தான்வித்து | வாய்விளங்கம் |

வகைக்குச்சூரணம் பலம்-உ,



| | | | |
|---|---|---|---|
| கெந்தி | பலம்-க, | சூதம் | பலம்-உ |
| பூரம் | உ | மனோசிலை | வ |
| தாரம் | வ | வீரம் | அரைக்கால் |
| ஊசிக்காந்தம் | வ | படிகாரபற்பம் | க |

இவைகளை யொன்றாக்கலந்து கல்லுரவிலிட்டு உ௰ - கோழிமுட்டை உடைத்து வார்த்துப் பதமாய்ப் பனைவெல்லஞ்சேர்த்துப்பூணில்லா உலக்கையால் மெழுகாகும் வரையில் இடிப்பரக்க ஜாதிகொட்டைபாக்குப்பிரமாணம்தேகபெலமறிந்து வ-உ-மண்டலமுண்ணகைகால்வெடிப்பு-சூலை-அரைக்கால்-குடைச்சல்-விப்புருதி கண்டமாலை-குலைநோய்-தடிப்பு யோனிப்புற்று-லிங்கப்புற்று துடைவாழை கருங்கிரந்தி செங்கிரந்தி- நுணாக்கிரந்தி - வெடிக்கிரந்திதட்டைக்கிரந்தி-கொறுக்குப்புண்-குழிப்புண்-இரணம்- கீல்வாதம்-தமரகவாதம்-குத்துவாதம் சச்சுவாதம்- குடைச்சல்வாதம்-சீத்தலைவாதம் வீக்கமுதலியவை நீக்கும் இச்சாபத்தியம்.

### மேகரோகச்சண்டமாருத மெழுகு.

| | |
|---|---|
| வெள்ளறுகுச்சமூலம் | சிவன்வேம்புச்சமூலம் |
| நச்சங்கன்வேர் | முத்தினதேங்காய்கெற்று |
| கெருடன்கிழங்கு | குமுளன்வேர் |
| அமுக்கனாங்கிழங்கு | விளாம்வேர் |
| அத்திவேர் | சீந்தில்வேர் |
| வெட்பாலைவேர் | மிளகரணைவேர் |
| செங்கத்தாரிவேர் | குன்றிமணிவேர் |
| நீர்முள்ளிவேர் | கருஞ்சீரகம் |
| பிரப்பங்கிழங்கு | சித்திரமூலம் |
| நற்சீரகம் | கரப்பன்பட்டை |
| பூவிருட்சப்பட்டை | கூவிளம்வேர் |

வகைக்குச்சூரணம் பலம்-க,

| | | | |
|---|---|---|---|
| கெல்லிக்கெந்தி | பலம்—க, | சூதம் | பலம்—உ, |
| அத்தங்கழஞ்சு | க | துருசு கழஞ்சு | க |
| பூரம்பலம் | வ | இலிங்கம்பலம் | உ |
| பரங்கிச்சூரணம் பலம் | ௱ | செங்கொட்டைப்பலம் | உஉ |

இவைகளை யொன்றுபடுத்தி முன்சூரணத்தோடு கலந்து கல்லுரலிலிட்டுக் கோழிமுட்டை ௰-உடைத்துவார்த்துப் பதமாய்ப்ப

ஊவெட்டிச்சேர்த்துப் பூணில்லா உலக்கையால் திப்பரக்கச்சாடி க்கொட்டைப்பாக்களவு தக்கப்பெலமதிந்து வ-௰ மண்டலந்தாக்க குஷ்ட கிரந்தி-புண்-கொறுக்கு-முடக்கு-சொரிசிரங்கு-புழுவெட்டு வெடிப்புண்முதலிய மேகரோகங்கள் நீங்கும்.

## உப்புமெழுகு.

பசும்பால்-தும்மட்டிக்காய்ச்சார் வகைக்குப்படி-௨, பாண்டத்திட்டு

| | |
|---|---|
| வெடியுப்பு | இந்துப்பு |
| மூங்கிலுப்பு | வளையலுப்பு |
| கருப்புப்பு | அமுரியுப்பு |
| உவருப்பு | வெண்காரம் |
| சவுட்டுப்பு | சோத்துப்பு |
| பூநீர் | சீனப்புப்பு |
| பாறையுப்பு | படிகாரம் |

வகைக்குப்பலம்-வ,

பொடித்து மேற்படி பாண்டத்திற்கரைத்து ஆத்திவேரால் துழாவிக்கொண்டே கண்டக்காய்ச்சிக் கல்வத்திட்டு

| | | | |
|---|---|---|---|
| பூரம் | பலம்—௧, | வீரம் | பலம்—அரைக்கால், |
| வாளம் | ௰ | சுக்கு | வ |
| மிளகு | ௩ | திப்பிலி | ௨ |

சேர்த்துதிரிபலைக்கியாழத்தால் ௨-ஜாமம் முலைப்பாலால் ௨ ஜாமம் மலைத்தேனால் அரைச்சாமம் ஆட்டி மெழுகுபோற் செய்து கடலைப்பிரமாணம் அந்தி சந்தி ரு-எ-நாள் சுக்கு குடிநீரிலுண்ண பித்தவாய்வு-குன்மம்-புளியேப்பம்-அக்கினிமந்தம்- அசீரணபேதி-வயற்றிரைச்சல்-உப்பிசம் பரிமந்தம்-வாய்நீரூறல்-வாந்தி- பித்தவெரிச்சல் முதலியவைபோம் இச்சாபத்தியம்.

## சாரமெழுகு.

ஒருபலம் நாட்டுச்சாரத்தை கொடிக்கள்ளிச்சாற்றில் ஒரு ஜாமம் வேளைச்சாற்றில் ஒருஜாமம் வெள்ளெருக்கன்பாலில் ஒரு ஜாமம்-கொடிக்கள்ளிப்பாலில் ஒருஜாமம் சுருக்கிய்ந்து மேற்படி பாலலாட்டி சிறுகண்டக்காய் விதம் காலைமாலை ரு-எ-நாளுண்



ண நடுக்குவாதம்-முடக்குவாதம்-பட்சவாதம்-நரித்தலைவாதம்-குடைச்சல்வாதம்- குன்மக்கட்டி- மகோதரம்-நீராம்பல் வாய்வுக்கட்டி-அன்னியதேயஜலக்கட்டி முதலியவை நீங்கும், பேதியதிகரித்தால் பழச்சாருண்ணவும் பத்தியம் வியாதிகளுக்குத்தக்கவைகளாம்.

## சாதிலிங்கமெழுகு.

கட்டினலிங்கம் அல்லது சுத்தித்தலிங்கம்பலம் ௧-பீங்கான் கோப்பையிலிட்டுச்சாரஜெயநீர் அல்லது சாரத்திராவகம் நிரம்பவிட்டு மேல்கோப்பையால்மூடி வாய்புறம் உளுந்துமாவ் சீலைசெய்து சட்டியில் பீங்கான் கோப்பையின் பாதம் பிடிக்கும்படி துவாரமிட்டு மேற்படி கோப்பைவைத்து மேற்சட்டிக்கொண்டு மூடிக் கல் அடுப்புவைத்து தீபமேற்றி மேற்படி சட்டியைவைத்து ஒரு ஜாமமெரித்து மருந்தைக்கல்வத்திட்டு திப்பிலி-வெண்மிளகு வகைக்குப்பலம்-வ, பூரம்-கழஞ்சு-௧, சேர்த்து மலைத்தேனாலாட்டிக் கடலைப்பிரமாணம் ௩-ரு - வேளையுண்ணக் கைகால்வலி பிரவிச்சு நாட்பட்டசுரம்-சன்னி-இசிவு-கிரகணி-வாதரோகங்கள் மகாசன்னிமுதலியவை நீங்கும்,

## பஞ்சசூதமெழுகு.

கட்டினவீரம்-அல்லது சுத்தித்த வீரம் பலம்-௧, சட்டியிலிட்டுச் செப்புநெரிஞ்சிச்சார்-முலைப்பால் - கொடிக்கள்ளிப்பால் வகைக்கு ஒருஜாமஞ்சுருக்கிய்ந்து சாரஜெயநீர் அல்லது சாரத்திராவகம் ஒருமணிநேரஞ்சுருக்கிட்டுக் கல்வத்திட்டு இலிங்கச்சித்தூரம்-சுத்திக்தபூரம் வகைக்குக்கழஞ்சு-௧, மிளகு-திப்பிலி- சிறுமுஷலிவேர்த்தூள் வகைக்குப்பலம்-வ, சேர்த்து மலைத்தேனலாட்டி மிளகுப்பிரமாணம் அரைத்த மிளகில் வைத்துண்ண ஊழிப்பேதியெனும் வாந்திபேதி-உருத்திரசன்னி- விஷச்சன்னி-அலர்ச்சன்னி பிடாரிசன்னி-முகவாதசன்னி-சர்வசுரம் - ஆனந்தவாய்வு-கைகால்முடக்கு-பாரிசவாய்வு-பவுத்திரம்-துடைவாழை அரையாப்பு-கண்டமாலை-கிரந்திப்புண்- குன்மம் - சூலை-பாரிசவாய்வு-யோனிப்புற்று-மருட்கொறுக்குமுதலிய மேகரோகங்கள் நீங்கும்.

### கெந்தகமெழுகு.

சுத்தித்த கெந்திபலம்-க, சட்டியிலிட்டுப் பிரம்மதண்டி எண்ணெய்க்கொஞ்சங்கொஞ்சமாய் விட்டுக்கிளறிக்கொண்டே தீபாக்கினியாய் எரிக்கமெழுகாகும் அம்மெழுகைச் சுண்டக்காயளவு ருி-நாளிருபோதுண்ணக் குடல்வாய்வு-விரைவாதம்- பாண்டு வீக்கம்-சொரி சிரங்கு-இரணம்-குன்மமுதலியவை நீங்கும்பத்தியம் வியாதிக்குத்தக்கவைகளாம்.

### வீரமெழுகு.

| | |
|---|---|
| பூநீர் | அமுரியுப்பு |
| கல்லுப்பு | பாறையுப்பு |
| இந்துப்பு | வளையலுப்பு |
| சோற்றுப்பு | வெடியுப்பு |
| மூங்கிலுப்பு | முள்ளங்கியுப்பு |
| கருப்புப்பு | சிகப்புப்பு |
| [illegible]ளையுப்பு | [illegible] |

வகைக்குப்பலம்-வ,

இவைகளைப்பொடித்துப்பாண்டத்திட்டுப் பேய்த்தும்மட்டிச்சாறு ஆவின்பால் வகைக்குப்படி-உ, வார்த்து துத்திவேரினால் கிளரி மணல்களை அப்புதப்படுத்தி அடுப்பேற்றிச் சுண்டயெரித்துக்கல்வத்திட்டுச்சுத்திக்க வீரம் பலம்-க, பூரம் பலம் - உ, திரிகடுகு வகைக்குக்கழஞ்சு-உ, வாளம் பலம்-வ, கூட்டித் திரிபலைக்கியாழம் முலைப்பால் வகைக்கு ஒரு சாமமாட்டி மலைத்தேனால் உ-மணிநேரமரைத்து மிளகுப்பிரமாணம் அந்தி சந்தி ௬-ருி-நாள் பனைவெல்லத்தில்வைத்துண்ண சூலை-மகோதரம்-கிரந்தி- குன்மம் - நீர்க்கோவை-வாதரோகம்-முடக்குவாதம்-வலி அண்டவாதம்-தமரகவாதம்-தந்திவாதம்-குதகவாய்வு- வட்டகுன்மம் - ஜன்னி இவைபோம், பத்தியம் சிறுகீரை-முருங்கைப்பிஞ்சு-பொன்னாங்கண்ணி துவரை-காண்ட-கோழி-சிற்றண்டம்-ஆவின்பால்-[illegible]- வென்னீர்சாதம் வறுத்தஉப்பு-சுட்டபுளி ஆகும்.

### சகலரோகச்சண்டமாருதமெழுகு.

| | | | |
|---|---|---|---|
| சுக்கு | கழஞ்சு—உ, | மிளகு | கழஞ்சு—உ, |
| திப்பிலி | உ | நெல்லிக்காய் | உ |



| | | | |
|---|---|---|---|
| தான்றிக்காய் | உ | கடுக்காய் | உ |
| வட்டத்திரிவேர் | ௰க | கொடிவேலி | ௰க |
| பரங்கிச்செக்கை | ௰க | நன்னாரி | ௰க |
| சாதிக்காய் | க | குங்குமப்பு | க |
| கோரோசனை | க | பச்சைகற்பூரம் | க |

இவைகளைச்சூரணித்து சுத்தித்த வீரம்-பூரம்-லிங்கம்-அரிதாரம் மனோசிலை வகைக்குக்கழஞ்சு க, சேர்த்து தான்றிக்காய் - மிளகு- சமன்கொண்டு பொடியிட்டு அக்கியாழத்தால் ஒருஜாமமாட்டித்தேன்விட்டரைத்துக் கடலைப்பிரமாணம் தக்க வனுபானங்களில் தாக்க சூலை-குடல்வாய்வு-திமிர்வாய்வு-சுரோணிதவாய்வு- கரப்பன்பாண்டு-தலைச்சுழட்டல்-பித்தவாய்வு-புடை-சொரி- சிரங்கு-இரணம்-மந்தாரகாசம்-சுவாசகாசம்-வலி-கால்கரவாதம்- பிரவிச்சுநீர்ப்புற்று-குடைச்சல்வாதம்-பிடிப்புவாதம்- யோனிச்சூலை முதலியவை நீங்கும், பத்தியம் வியாதிக்குத்தக்கவைகளாம்.

### கட்டுவாதிமெழுகு.

| | |
|---|---|
| சாதிக்காய் | சாதிபத்திரி |
| அதிவிடயம் | கூளத்தி |
| லவங்கம் | காட்டாத்தி |
| சீனப்பட்டை | ஓமம் |
| கற்கடகசிருங்கி | சூராசாணி |
| சுக்கு | புளியந்தோல் |
| காசுகட்டி. | காஞ்சா |
| காயம் | அசமதாகம் |

வகைக்குப்பலம்-க,

இவைகளைச்சூரணித்துச் சம்பழச்சாற்றால் ஒருஜாமமாட்டிபின் விளாம்பிசினிபலம்-உ, அபின்பலம்-வ, கெந்திப்பலம்-உ, சேர்த்து மேற்படிசாற்றால் மூன்றுநாள் விடாதாட்டி நான்காவதுநாள்கற்கடகசிருங்கி-மாதுளம்பழத்தோல் சமன்சேர்த்து எரக்கிய கியாழத்தால் ஒருஜாமமாட்டி குங்குமப்பூ-கோரோசனை- பச்சைக்கற்பூரம் வகைக்குப்பலம் - முக்கால் - சேர்த்து தேன்விட்டுமெழுகுபோற்செய்து சுண்டக்காயளவுகொடுக்க ஆமபேதி சீதரத்தபேதி ஊஷ்ணபேதி-மந்தபேதி கிரகணி-அதிசாரம்- மூலக்கழிச்சல் முதலியவைநீங்கும்.

### நாகரசமெழுகு.

| | | | |
|---|---|---|---|
| நாகம் | பலம்—க, | சூதம் | பலம்—க, |
| வீரம் | | கௌரி | |
| இலிங்கம் | | அரிதாரம் | |
| அயம் | | காந்தம் | |
| சாரம் | | பூரம் | |
| துத்தம் | | துருசு | |
| காரம் | | சிலை | |

வகைக்குப்பலம்-வ,

நாகத்தையுருக்கிசூதங்தொங்கித்துமற்றையசரக்குகளையொன்றுபடுத்தி மருந்துகளெடைக்கு இரட்டிப்பு மிளகு சேர்த்து லிம்பழச்சாற்றால் மூன்றுநாள் மிளகுகியாழத்தால் மூன்றுநாள் மலைத்தேனால் ஒருச்சாமமாட்டி ரவியில் நவநாள் வைத்து குன்றிமணியளவு ரு-நாள் இருவேளை புண்ணை கிரந்தி-புற்று இரணம் - வாதரோகங்கள் முதலியவைபோம், இம்மருந்தை வாதரோகிகளுக்கு பெலமறிந்து சர்வஜாக்கிரதையுடன் கையாடவும் மருந்துண்டவுடன் மிளகு கியாழம் குடிப்பிக்கவும்.

### இலிங்கமெழுகு.

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | தான்றிக்காய் |
| நெல்லிக்காய் | கடுக்காய் |
| பரங்கிச்செக்கை | சீரகம் |
| ஏலரிசி | தேத்தான்வித்து |

வகைக்குச்சூரணம்பலம்-க,

இலிங்கம் பலம்-க, பூரம்-வ, அரிதாரம் விராகனெடை-க, வீரம் வ, வெண்காரம் பலம்-க, படிகாரம் பலம் - க, கௌரிவிராகனெடை-வ, இவைகளை பொன்றுபடுத்தி சம்பிரச்சாற்றால் கூ-நாள் விடாதாட்டிக் குன்றிப்பிரமாணம் அநுபானமறிந்துண்ண சகலவாதசுரஜன்னிகள் நீங்கும்.

### சூதகவாய்வுக்கு மெழுகு.

எரிக்கும்மட்டிச்சார்-வெள்ளுள்ளிச்சார்-நொச்சிச்சார் வகைக்குப்படி-க, பாண்டத்திலிட்டு இலிங்கம்-ஓமம் - பொரித்தகாயம்-



வெண்காரம்-மிளகு-வாளம் வகைக்குப்பலம் - க, ஆர்க்கப்பொடித்து மேற்படி பாண்டத்திற்கரைத்துச் சுண்டவெரித்துக் கல்வத்திட்டு மலைத்தேனால் ஒரு ஜாமமாட்டி சிறுசுண்டைக்காயளவுண்ண சூதகவாய்வு குன்மமுதலியவாதரோகங்கள் நீங்கும்.

### வேறுகெந்தகமெழுகு.

நெல்லிக்கெந்தியை ஓட்டிவிட்டு ஆடுப்பேற்றி சிறுசின்னிச்சார்-காட்டுள்ளிச்சார் சமன் சேர்த்து மேற்படி கெந்திக்குக்கொஞ்சங்கொஞ்சமாய்க் கிளரிக்கொண்டே ஒருநாள் சுருக்கியெடுத்துக் கல்வத்திட்டுச்சமன் திப்பிலி சேர்த்து மலைத்தேனலாட்டி உ-குன்றிப்பிரமாணம் தக்கவநுபானங்களில் தாக்கசகலவாதசிதளரோகங்களும் நீங்கும்.

### பூரமெழுகு.

திரிபலை- திரிகடுகு - திரிசந்திரி வகைக்குப்பலம்-க, பூரம் பலம்-ஹ, இலிங்கம் விராகனெடை-க, ஒன்றுசேர்த்துக் கழற்சியிலைச்சார்-வெள்ளுள்ளிச்சார்-மலைத்தேன் இவைகளில் வகைக்கொருசாமமாட்டிக் கடலைப்பிரமாணம் ரு-எ-நாள் பெலமறிந்தூட்டகுடல்வாதம்-ஒருவிரைநோய் பக்கச்சூலை-வாதக்குடைச்சல்-வாதசுரமுதலியவை நீங்கும் பத்தியம் உப்பு புளி-புகை-புலால் நீக்கவும்.

### பாஷாணமெழுகு.

வெள்ளைப்பாஷாணம்-கழஞ்சு-க, சுக்கு-திப்பிலி-பரங்கிச்செக்கை-மதுரம்-ஏலரிசி-மிளகு வகைக்குப்பலம்-க, ஒன்றுசேர்த்து சிறுகீரைச்சாற்றால் உ-ஜாமம் மிளகு கியாழத்தால் ஒருநாள் நிம்பழச்சாற்றால் ங-ஜாமம் மலைத்தேனால் ஒருஜாமமாட்டிக்குன்றிப்பிரமாணம் தக்கவநுபானங்களில் பெலமறிந்து தாக்க வெப்பிப்பேதிகண்டசிதளம்-மலைச்சுரம்-விஷச்சுரம்-ஜன்னிதோஷம் நீங்கும், பத்தியம் வியாதிக்குத்தக்கவைகளாம்.

—()—

## மாத்திரைகள்.

### ஆயுள்.

பாடாணத்துசேர்குளிகைக்களவாதபலமெனக்கூ
றீடாருனக்குப்புலி.

### சர்வசுரசஞ்சம்மாரி மாத்திரை.

| | | | |
|---|---|---|---|
| நிம்பத்தோல் | ௰ | சீவிவேர் | ௭௨ |
| இருவேலி | ௫ | வெள்ளெருக்கன்பூ | ௫ |
| தும்பைப்பூ | ௫ | புளியந்தோல் | ௫ |
| சிவன்மூலி | கூ | நிலவேம்பு | ௨ |
| வெள்ளைப்பரிகாரி | ௭௨ | வச்சநாபி | ௧ |

இவைகளைச்சூரணித்து, வெள்ளைச்சுண்ணம்-௨, பிரவாளபற்பம்-௨-௨, ஒக்கச்சேர்த்துக்கல்வத்திலிட்டு தேசிச்சாற்றில் [illegible] ஒருசாமம் அரைத்து தெளிவாலாட்டி சிறுகண்டைவிதம் அனுபானமறிந்தூட்டச் சுரம் சுசாம் நீக்கும்.

### வாதராக்ஷத மாத்திரை.

| | |
|---|---|
| வாய்விளங்கம் | அக்ராகாரம் |
| திப்பிலி | தான்றிக்காய் |
| மிளகு | சாதிக்காய் |
| கிராம்பு | வசுவாசி |
| இலவங்கம் | ஏலம் |
| மஞ்சிட்டி | இருவி |
| திப்பிலிமூலம் | கச்சோலம் |
| கஸ்தூரிமஞ்சள் | சித்தரத்தை |
| சீரகம் | கருஞ்சீரகம் |
| வாலுளுவை | கார்போகவரிசி |
| வெளிச்சப்பிசின் | சடாமாஞ்சில் |

வகைக்குச்சூரணங்கழஞ்சு-க,

வாலைரசம்-தாரம்-வெண்காரம்-கெந்தி-மனோசிலை-லிங்கம் - பொன்னரிதாரம் வகைக்குக் கழஞ்சு-க, வாளம் பலம்-௨, ஒக்கச்சேர்த்தாக்குமரிச்சாற்றால் ௬-ஜாமமாட்டி பட்டாணிப்பிரமாணம் மாத்திரைசெய்து தேன்-இஞ்சி-நிம்பமுச்சாற்றில்தீட்டவாதச்சுரரோகங்கள் நீக்கும்.



### வாதசிந்தாமணி மாத்திரை.

| | |
|---|---|
| உத்தாமணிவேர் | ஊமத்தன்வேர் |
| சங்கங்குப்பிவேர் | பிரம்மராக்ஷசிவேர் |
| நல்வேளைவேர் | வாதமடக்கிவேர் |
| வெண்சாரணைவேர் | வெள்ளறுகுவேர் |
| தும்பைவேர் | கள்ளிவேர் |
| எருக்கன்வேர் | சமுத்திவேர் |

வகைக்குப்பலம்-க,

| | |
|---|---|
| மரமஞ்சள் | பூண்டு |
| சுக்கு | காட்டுச்சீரகம் |
| கார்போகம் | திப்பிலி |
| மிளகு | காயம் |
| வாளம் | கடுக்காய் |
| சித்திரமூலம் | கஸ்தூரிமஞ்சள் |
| சன்னராஷ்டகம் | செங்கெல்லரிசி |
| கருஞ்சீரகம் | வெண்கடுகு |
| அமுக்கரா | பரங்கிப்பட்டை |
| கெந்தி | மனோசிலை |
| தாரம் | சூதம் |
| பொரிகாரம் | இலிங்கம் |
| கௌரி | வெண்ணாபி |

வகைக்குப்பலம்-வ,

இவைகளை பொன்று சேர்த்து நிம்பழச்சார் தும்பைச்சார்-கரிசாலைச்சார்-மிளகுக்கியாழம் வகைக்கு ஏ-சாமமாட்டி மிளகுப்பிரமாணக்குளிகையை தக்கவனுபானங்களில் தீட்ட வாதசுரம்-கைகால்குடைச்சல்-சூலை-பித்தவாய்வு-வயிற்றுப்பொருமல் - அண்டவாதம்-வெள்ளோக்காளம்-குதிவாதமுதலியவைநீக்கும், பத்தியம் வியாதிக்குத்தக்கவைகளாம்.

### சுரமணி மாத்திரை.

| | |
|---|---|
| வெண்காரம் | இலிங்கம் |
| சிவதைவேர் | வசம்பு |
| சுக்கு | சயிந்தியலவணம் |
| வாய்விளங்கம் | ஓமம் |
| காயம் | காட்டாமணக்கன்பருப்பு |

வகைக்குப்பலம்-க,

வாளஞ்சமன்சேர்த்து நிம்பழச்சாற்ருல் ஈ-ஜாமமாட்டிக் குன்றிப் பிரமாணம் மாத்திரை கட்டி அனுபானமறிந்தூட்ட வாதச்சுரம்-மந்தச்சுரம்-குடைச்சல்வாதம்-குழந்தைகள் மாந்தச்சுரம்- வயிற்றுப்பிசம் மலக்கட்டு முதலியவை நீக்கும்.

சுரசாந்த மாத்திரை.

| | |
|---|---|
| முந்திரிகை | இலுப்பைப்பூ |
| திப்பிலி | பேரீச்சு |
| கோஷ்டம் | முத்தக்காசு |
| வெட்டிவேர் | பன்னீர்ப்பூ |
| தாமரைப்பூ | நன்னாரி |
| சூரத்திலவாகை | சந்தனத்தூள் |

வகைக்குப்பலம்-க,

இலிங்கம்-ரசகற்பூரம்-தாரம்- வகைக்கு விராகனெடை-க, நாபி உ, இவ்வகளை யொக்கச்சேர்த்துத் தண்ணீர்விட்டான் கிழங்குச்சாற்ருல் மூன்றுநாளாட்டி உளுந்தளவு மாத்திரைசெய்து அனுபானமறிந்து கையாட சளிர்ச்சுரம்-விடாச்சுரம்-முறைச்சுரம்-மாந்தச்சுரம் மந்தச்சுரம் மலபந்தச்சுரம்- வாதரோகமுதலியவை நீங்கும், பத்தியம் வியாதிக்குத்தக்கவைகளாம்.

சுரக்கொய்னமாத்திரை.

| | |
|---|---|
| அக்ராகாரம் | சுக்கு |
| மிளகு | திப்பிலி |
| தான்றிக்காய் | கடுக்காய் |
| வெள்ளிலை... | வேப்பந்தோல் |
| திலவாகைத்தோல் | சிவன்வேம்பு |

வகைக்குச்சூரணங்களஞ்சு-க,

கொய்ன-களஞ்சு-ச, கல்வத்திட்டு இஞ்சிச்சாற்ருல் உ-சாமமாட்டி வேலன்கோத்துவூரவைத்த தெளிவால் பிசைந்து கடலைப்பிரமாணம் மாத்திரைசெய்து தேகபெலமறிந்து ..-(ரு) எ-நாள் அனு...றிந்துகாக்க சகலவாதபித்த சிலேஷ்மச்சுரங்களும் நீங்கும்.

சகலபாந்தரோகமாத்திரை.

| | |
|---|---|
| வில்வம் | விளா |
| காய்வேளை | கஞ்சாங்கோரை |



| | |
|---|---|
| சின்னி | மொச்சை |
| சப்ஜா | தும்பை |
| சிறுதும்பை | கண்டங்கத்திரி |
| அகவகெந்தி | சங்கங்குப்பி |
| நுணா | வேலிப்பருத்தி |
| முடக்கத்தான் | கொள்ளுக்காய்வேளை |
| நெருஞ்சி | சாரணை |
| பிநாரி | புண்ணாக்குப்பூண்டு |
| பிரமி | சித்திரமூலம் |
| மணத்தக்காளி | கோவை |
| கையாந்தகரை | கீழ்க்காய்நெல்லி |

வகைக்குவேர்ச்சூரணம் பலம் க,

| | |
|---|---|
| வசம்பு | ஓமம் |
| சுக்கு | சதகுப்பி |
| தான்றிக்காய் | நெல்லிக்காய் |
| கடுக்காய் | தேசாவரம் |
| ஆனைத்திப்பிலி | அரத்தை |
| கருஞ்சீரகம் | காட்டுச்சீரகம் |
| வாலுளுவை | போஸ்தக்காய் |
| புரசம்வித்து | பரங்கிச்செக்கை |

வகைக்குச்சூரணம் பலம் உ,

பூரம் விராகனெடை-க, வாளம் பலம் - க, கல்வத்திட்டு ஜானகிப்பூண்டுச்சார்-அப்புகோவைச்சார்-வேளைச்சார் - அத்திச்சார் சயக்கொழுந்துச்சார்-...-தலைச்சார்-முசுமுசுக்கைச்சார்-கையாந்தகரைச்சார்-குப்பைமேனிச்சார் திலவாகைச்சார்- சிவதைக்கியாழம் இவைகளில் வகைக்கு ஒருஜாமமாட்டி துவரைப்பிரமாணம் குளிகைசெய்து அனுபானமறிந்தூட்ட அள்ளுமாந்தம்-வயிற்றுப்பிசம் இசிவு-வலி-கோழைக்கட்டு இருமல் - பொருமல்- கணமாந்தம்-ஊதுமாந்தம்-வாதச்சுரம்-மலபந்தமுதலிய மாந்தரோகங்கள் நீங்கும் பத்தியம், வியாதிக்குத்தக்கவைகளாம்.

வாலசஞ்சீவி மாத்திரை.

| | |
|---|---|
| சுக்கு | மிளகு |
| திப்பிலி | கடுக்காய் |

| | |
|---|---|
| தான்றிக்காய் | நெல்லிக்காய் |
| ஓமம் | கிராம்பு |
| கடுகுரோகணி | பிதரோகணி |
| வெண்மிளகு | கருஞ்சீரகம் |
| நிலவாகை | பன்னீர்ப்பூ |

வகைக்குச்சூரணம் பலம்-௧,

இலிங்கம்-கழஞ்சு-௨, பூரம்-௧, வெண்காரம் பலம்-௩, படிகாரம்-௨, இவைகளை யொன்றாய்ச்சேர்த்துச் சம்பீரச்சாற்றால் ௮-ஜாமமாட்டி உளுந்துப்பிரமாணம் மாத்திரைசெய்து அநுபானமறிந்தூட்ட வாதரோகம்-மாந்தம் சுரமுதலியவை நீங்கும்.

வாதரோகநிவாரணமாத்திரை.

| | |
|---|---|
| சடாமாஞ்சில் | மிளகு |
| லவங்கம் | கடுகுரோகணி |
| ஓமம் | வாய்விளங்கம் |
| கருஞ்சீரகம் | சிவதைவேர் |
| தக்கோலம் | கோஷ்டம் |
| மதூரம் | சன்னராஷ்டகம் |
| லவங்கப்பட்டை | அஜாருன் |
| ருமஸ்தகி | குங்குமப்பூ |
| சுக்கு | வாளம் |
| பூரம் | இரசகற்பூரம் |

வகைக்கு விராகனெடை-௧

கஸ்தூரி விராகனெடை-௪, கோரோசனை-௨, பச்சைக்கற்பூரம்-௨, மூசாம்பரம்-௫, கல்வத்திலிட்டு துளசிக்கியாழம்- ஆடாதோடைக்கியாழம் இவைகளில் வகைக்கு இருஜாமமாட்டிக் குன்றிப்பிரமாணம் மாத்திரையை அநுபானமறிந்தூட்டச் சகல வாதபித்தரோகங்கள் நீங்கும்.

சாரங்கிஷமாத்திரை.

| | |
|---|---|
| நிர்விஷம் | வாலேரசம் |
| நாபி | அரிதாரம் |
| இங்கிலிகம் | கெந்தி |
| வெண்காரம் | அக்கல்காரம் |



| | |
|---|---|
| இருலி | கடுக்காய் |
| தான்றிக்காய் | நெல்லிப்பருப்பு |
| மிளகு | திப்பிலி |
| வேற்கொம்பு | வெண்மிளகு |

வகைக்குக்கழஞ்சு-௧.

வாளம் பலம்-௪, இவைகளை தேசிச்சாற்றால் ௨௧-நாள் அரைத்து மிளகுப்பிரமாணக்குளிகைசெய்து ஒருமாதத்திற்குப்பின் அநுபானமறிந்து கையாட சகல வாதசீதள சுரரோகங்கள் நீங்கும், பத்தியம் வியாதிக்குத்தக்கவைகளாம்.

சுரசஞ்சீவி மாத்திரை.

| | | | |
|---|---|---|---|
| சூதம் | ௧ | கெந்தி | ௧ |
| கருவூமத்தன்விதை | ௮ | சுக்கு | ௪ |
| திப்பிலி | ௫ | வெண்மிளகு | ௮ |

கல்வத்திலிட்டு இஞ்சிச்சார்-பழச்சார் இவைகளில் வகைக்கு-௪, ஜாமமாட்டிக் கடலைப்பிரமாணம் மாத்திரைசெய்துவெந்நீர் புதினா-பழச்சார்-புளியாரைச்சார் இஞ்சிச்சார் தேன் அநுபானத்திலூட்ட சகல [illegible]

சுரசிந்தாமணிமாத்திரை.

வாளம் பலம் ௪, பூரம்-௪, பாஷாணம் விராகனெடை-௫, அழிஞ்சல்பட்டை சித்திரமூலவேர்ப்பட்டை வகைக்குப்பலம்-௪, வெண்மிளகுபலம்-௧, கல்வத்திலிட்டு நிம்பழச்சார்-முலைப்பால் கையாந்தகரைச்சார் மிளகுகியாழம் இவைகளில் வகைக்கு ஒருஜாமமாட்டி துவரைப்பிரமாணம் மாத்திரை செய்து அநுபானமறிந்தூட்டச் சுரவாதரோகங்கள் நீங்கும்.

சுரபூபதிமாத்திரை.

| | |
|---|---|
| திப்பிலி | சுக்கு |
| மிளகு | கடுக்காய் |
| வாய்விளங்கம் | கடுகுரோகணி |
| கோஷ்டம் | நெல்லி |
| முள்ளி | பரங்கிச்செக்கை |
| சீரகம் | பூண்டு |

வகைக்குப்பலம்-௧,

| | |
|---|---|
| தாளகம் | கெந்தி |
| சூதம் | பூரம் |
| வாளம் | ரசச்சிந்தூரம் |

வகைக்கு விராகனெடை-௧,

கல்வத்திலிட்டு நிம்பழச்சார்- இஞ்சிச்சார்-சீவிக்கியாழம்-மிளகுக்கியாழம் இவைகளில் வகைக்கு இருஜாமமாட்டி மிளகுப்பிரமாணம் மாத்திரைசெய்து அனுபானமறிந்தூட்டசுரம்-வாதரோகம்-சேத்துமரோகமுதலியவைபோம்.

ஜெயரசக்கற்பூராதிமாத்திரை.

பூரம்-வெண்மிளகு வகைக்குப்பலம்-௧, விட்டத்தாரிவேர்-௫, இவைகளை தேசிச்சாற்றால் இருஜாமமாட்டி பணிப்பயரளவு- மாத்திரைசெய்து அனுபானமறிந்தூட்ட வாய்வு-சூலை-குத்தல்-குடைச்சல்-அண்டவாதமுதலியவை நீங்கும்.

வாதசாந்த மாத்திரை.

| | | | |
|---|---|---|---|
| பூரம் | விராகனெடை-௰ | வெண்காரம்விராகனெடை-௨௰, | |
| சூடன் | ௧ | வாய்விளங்கம் | ௨ |
| சுக்கு | ௨ | ஜெவ்வயம் | ௧ |
| திப்பிலி | ௨ | மிளகு | ௨ |
| கருஞ்சீரகம் | ௧ | மோடி | ௨ |
| ஏலரிசி | ௧ | வாளம் | ௪ |
| சாம்பிராணி | ௧ | கச்சோலம் | ௨ |

இவைகளைச்சுக்குக்கியாழத்தால் ௪-சாமமாட்டிக் குன்றிப்பிரமாணம் மாத்திரைசெய்து அனுபானமறிந்தூட்ட சகலவாதரோகங்கள் சாந்தப்படும்.

பூரமாத்திரை.

பூரம் விராகனெடை-௫, பூண்டுவிராகனெடை-௨௰, மிளகு விராகனெடை-௩௰, கம்மாறுவெற்றிலை விராகனெடை-௪௰, கொடிவேலிவேர்ப்பட்டை விராகனெடை-௨௰, கல்வத்திலிட்டுக் கம்மாறுவெற்றிலைச்சாற்றால் ௮-சாமமாட்டி சிறுசுண்டைக்காய்பிரமாணம் மாத்திரைசெய்து அனுபானமறிந்தூட்ட கிரந்தி-கொறுக்குப்புண்-மருள்கொறுக்கு-யோனிலிங்கப்புற்று-குழிப்புண் முதலியவை நீங்கும், பத்தியம்-உப்பு புளிப்பு-புகை-இளைச்சிநீக்கி ஆவின்பால் சாதமுண்ணவும்.



சாம்பிராணிப்பூ மாத்திரை.

சாம்பிராணிப்பூ பலம்கால், கிராம்புபலம் காலேஅரைக்கால் கோரோசனை-அரைக்கால், பச்சைகற்பூரம்-௯, கஸ்தூரிவிராகனெடை அரைக்கால், இவைகளைக்கம்மாறுவெற்றிலைச் சாற்றாலாட்டிக் குன்றியளவு மாத்திரைசெய்து அனுபானமறிந்தூட்ட உஷ்ணசீதள கடரோகங்கள் நீங்கும்.

தாம்பரமாத்திரை.

இராவின தாம்பரப்பொடியைச்சட்டியிலிட்டு [illegible] கிளை ஜாமத்திற்கு ஒவ்வொருபிடியாய் ௪-ஜாமம்போட்டு வறுத்தெடுத்தபொடி கழஞ்சு-௩, வாலைரசம்-௫, கெந்தி-௰, ஒன்றுபடுத்திவேளைச்சாற்றில் ௪-ஜாமமாட்டி அடைதட்டி யுலர்த்தி, நிம்பழச்சாற்றாலாட்டியெடுத்த காக்காசிப்பிளையை ரசலிங்குபோல்மேற்பூசியுலர்த்தி மணலில்வைத்து ௪-ஜாமமெரித்துக் கல்வத்திலிட்டு கெந்தி பலம்-௨, சேர்த்து சிறுசெருப்படைச் சாற்றால் ௪-ஜாமமாட்டி மிளகளவு மாத்திரைசெய்து நிழலுலர்த்திக்குப்பியிலிட்டுச் சீலைசெய்து ௨-ஜாமம் வாலுகையில் கமலாக்கினியாயெரித்துக் கல்வத்திலிட்டு இஞ்சிச்சாற்றால் ௨-சாமமாட்டிப்பருத்திவிதைப்பிரமாணம் மாத்திரைசெய்து அனுபானமறிந்தூட்ட வெண்குட்டம்-மகோதரம்-பாண்டுவீக்கம்-சில்விஷம்-கருமேகம்-சுரம்-சன்னி ௰௩-ம்போம்.

சிவராஜபூபதிமாத்திரை.

| | |
|---|---|
| உத்தாமணி | வெள்ளைப்பரிகாரி |
| வெள்ளெருக்கன் | கருவூமத்தை |
| வாதமடக்கி | பிரமராக்காசி |
| கல்லேனை | சங்கங்குப்பி |

வேர்வகைக்குச்சூரணம்பலம்-௧,

| | |
|---|---|
| திப்பிலி | பரங்கிச்செக்கை |
| கஸ்தூரி | சோம்பு |
| வாலுளுவை | வெண்மிளகு |
| சூராசாணி | ஓமம் |

வகைக்குச்சூரணம்பலம்-௧,

கல்வத்திலிட்டு தங்கச்சுண்ணம் விராகனெடை அரைக்கால் வெள்ளிச்சுண்ணம்-க, அயச்சிந்தூரம்-க, கருவங்கச்சிந்தூரம்-வ, நாகச்சிந்தூரம்-வ, பூரச்சுண்ணம்-உ, சேர்த்துநிம்பழச்சாற்றால் உக நாள் ஆட்டிக்குன்றிப்பயரளவு மாத்திரைசெய்து அநுபானமறிந்தூட்ட வாதம்-அ௰, பித்தம்-ச௰, குன்மம்-அ, மூலம்-கூ, மேகம் உக-ம், நீங்கும், பத்தியம் வியாதிகளுக்குத்தக்கவைகளாம்.

மகாகுருமாத்திரை.

காந்தச்சிந்தூரம்-சூதச்சிந்தூரம்-கெந்தகச்சிந்தூரம் - அரிதாரச்சுண்ணம்-காம்பாரச்சிந்தூரம்-இலிங்கச்சிந்தூரம் வகைக்கு விராகனெடை-க, திப்பிலிமூலம் சாதிபத்திரி- கடுகுரோகணி வகைக்குப்பலம்-க, காயம்-வெள்ளுள்ளி வகைக்குப்பலம்-வ, பரங்கிச்சூரணம்-நன்னாரிச்சூரணம் வகைக்குப்பலம்-கஉ, ஒன்றுசேர்த்து அண்டவெண்கருவால் ச-ஜாமம் நிம்பழச்சாற்றால் க, ஜாமமாட்டி குன்றிப்பிரமாணம் மாத்திரைசெய்து அநுபானமறிந்தூட்ட ஜன்னி-௰கூ, சுரம்-வாதரோகமுதலியவை நீங்கும்.

உருக்குமாத்திரை.

இலிங்கம்-வீரம்-பூரம்-சூதம்-லிங்கத்தொட்டி வகைக்கு விராகனெடை-க, அண்டவெண்கருவில் மஞ்சள் தூளிட்டு தெளிந்தநீரால் மேற்படி சரக்குகளை ச-ஜாமமாட்டி கோதுமை அரிசியைப்போல் மாத்திரைகள் செய்துலர்த்தி சிறியவெற்றிலைத்துண்டில் ஒவ்வொருமாத்திரையாய் மடித்து நூல்கயத்தால் தனித்தனிக்கட்டி ஓலைச்சுருளுக்குள்வைத்து மணல்மூடி விறகுளருவில் புடமிட உருக்குமாத்திரையாகும் அநுபானமறிந்தூட்ட சுரம்- சன்னி-வாதரோக முதலியவை நீங்கும், பத்தியம் வியாதிகளுக்குத் தக்கவைகளாம்.

சுவாசகாசமாத்திரை.

வாலைரசம்-கெந்தி-வெண்காரம்-கலப்பைக்கிழங்கு- மனோசிலை-தாரம்-பற்பாடகம் வகைக்குப்பலம் - க, திப்பிலி - உ, ஒக்கச்சேர்த்து நொச்சிச்சார்-கண்டங்கத்திரிச்சார் - ஆடாதோடைச்சார்-மேனிச்சார் இவைகளில் வகைக்கு ஒருநாளாட்டிப்பயரளவுமாத்திரைசெய்து அநுபானமறிந்தூட்ட மேற்சுவாசம்-மந்தாரகாசம்-சேத்துமகாசம்-சுவாசகாசமுதலியவை நீங்கும்.



மலஜலவிரேசனமாத்திரை.

பூரம்பலம்-௩, பூநீக்கிபலவங்கம்முக்கால் ஓமப்பொட்டுமுக்கால், வெண்காரம்-படிகாரம் வகைக்குப்பலம்-க, பரங்கிச்சூரணம்-வ, ஒக்கச்சேர்த்து தும்மட்டிக்காய்ச்சாற்றால்-உ-ஜாமமாட்டி பட்டாணிப்பிரமாணம் மாத்திரை செய்து இராகுதிப்பழம்-சோம்பு சமன்சேர்த்துக்கொழுமிட்டு மேற்படி மாத்திரையிழைத்துண்ண மலசலம் பிரியும், உடனே பிரியாவிடில் செவ்விளநீரில் மாத்திரைப்பொடித்துப்போட்டுக் கலக்கியுண்ணவும்.

கணசஞ்சீவிமாத்திரை.

கஸ்தூரி-குங்குமப்பூ-பச்சைகற்பூரம்-கோரோசனை வகைக்கு விராகனெடை-வ, மதுரம்-கோஷ்டம்-வேலிப்பருத்தி-திப்பிலி-மிளகு வகைக்குப்பலம்-க, பூரம்-வ, ஒன்றுசேர்த்துப் பாலையர் பாலாலாட்டிப் பனிப்பயர்ப் பிரமாணம் மாத்திரை செய்து அநுபானமறிந்தூட்ட சகல கணமாந்தங்களும்போம்.

கோரோசனைமாத்திரை.

| | |
|---|---|
| கருஞ்சீரகம் | சாதிபத்திரி |
| திப்பிலி | ஓமம் |
| நன்னாரி | மதுரம் |
| சாதிக்காய் | சூடன் |
| ஏலக்கம் | கோஷ்டம் |
| அக்கல்காரம் | பரங்கிச்செக்கை |

வகைக்குப்பலம்-அரைக்கால்,

கோரோசனை-௩, ஒன்றுபடுத்தி மணத்தக்காளிச்சாற்றால் ஒருசாமமாட்டி பச்சைப்பயரளவு மாத்திரைசெய்து அநுபானமறிந்தூட்ட சிலேத்துமரோகங்கள் நீங்கும்.

குங்குமப்பூமாத்திரை.

| | |
|---|---|
| சுக்கு | திப்பிலி |
| மிளகு | நெல்லிக்காய் |
| கடுக்காய் | தான்றிக்காய் |
| சாதிக்காய் | கிராம்பு |
| ஏலம் | சந்தனத்தூள் |

| | |
|---|---|
| தேவதாரம் | கடுகுரோகணி |
| தாளிசம் | வாய்விளங்கம் |

வகைக்குச்சூரணம்பலம்-வ,

குங்குமப்பூபலம்-க, ஒக்கச்சேர்த்துப் பழச்சார்-இஞ்சிச்சார் கண்டங்கத்திரிப்பழச்சார் இவைகளில் வகைக்கு இரண்டுசாமமா ட்டிப்பயறளவு குளிகைசெய்யவும்.

கஸ்தூரிமாத்திரை.

வாயவிளங்கம்-கடுகுரோகணி பீதரோகணி - குராசாணி-வ லம்-திப்பிலி-கருஞ்சீரகம்-ஓமம் வகைக்குச்சூரணம்பலம்-உ, கஸ் தூரி விராகனெடை-க, பச்சைகற்பூரம்-உ, ஒன்றுசேர்த்துக்க ம்மாறு வெற்றிலைச்சார்-துளசிச்சார்-கையாந்தகரைச்சார்-இஞ்சிப்பழச் சார் வகைக்கு ஒருசாமமாட்டிக் கடுகளவு மாத்திரைசெய்யவும்.

விரேசனமாத்திரை.

| | | | |
|---|---|---|---|
| வாலேரசம் | க | இலிங்கம் | க |
| இந்துப்பு | ௬ | வெண்காரம் | க |
| கடுக்காய் | ௬ | ரோகணி | ௬ |
| வாளம் | ௮ | வெள்ளைக்காக்கணம்வேர் | ௬ |

ஒக்கச்சேர்த்துப் பிரண்டைச்சார் சிவதைவேர்க்கியாழம் - நிலவா கைக்கியாழம் இவைகளில் வகைக்கு ஒருஜாமமாட்டி கடலைப்பிர மாணம் மாத்திரைசெய்து தேகபெலமறிந்து உ-௩-௪-வீதம் இஞ் சிச்சுரசம்-சுக்குகியாழத்திலிட்டுபேதியாகும்.

விரேசனபூபதிமாத்திரை.

வாளம்பலம்-க, லிங்கம்-பூரம் வெண்காரம்-ரசபற்பம் வகை க்குவிராகனெடை முக்கால்-சுக்குத்தூள்பலம்-வ, சொட்டிசேர் பலம்-க, ஒன்றுபடுத்தி வென்னீரால் இரண்டுசாமமாட்டி கடலை ப்பிரமாணம் மாத்திரைசெய்து தேகபெலமறிந்து உ-௩-௪-வீதம் சுக்குத்தூள்-சுக்குக்கியாழத்திலிடவும்.

ஆயரதமாத்திரை.

லவங்கம்-திப்பிலி வகைக்கு விராகனெடை-உ, வாலேந்திர போளம்-க, குங்குமப்பூ-௩ இரசபற்பம்-௨, ஒன்றுசேர்த்து மோ



ர்விட்டாட்டி இளக்காய்ப்பிரமாணம் மாத்திரைசெய்து அநுபா னமறிந்தூட்ட உதரச்சிக்கல்-சூதகவாய்வு-குன்மம்-பிரசவித்தவ ர்களுக்கு அழுக்கு முதலியவைபோம் பத்தியம்-புளி - புகை-பு லால் நீக்கவும்.

ஆநந்தவயிரவமாத்திரை.

| | |
|---|---|
| சாதிலிங்கம் | வெண்காரம் |
| சூத்திராபி | சுக்கு |
| மிளகு | திப்பிலி |

வகைக்குப்பலம்-அரைக்கால்,

ஒன்றுசேர்த்து முலைப்பால் - சம்பீரச்சார் இவைகளில் வகைக்கு ஒரு சாமமாட்டி சிறுபயறளவு மாத்திரை செய்து திரிகடுகுச்சூ ரணம் இஞ்சிச்சார்-தேன் அநுபானமறிந்தூட்ட சுரம்நீங்கும், அ ன்றி மேற்படி மாத்திரையில் கெந்தி ஒரு எடைசேர்த்தால் வாத ரோகப்பாண்டு நீங்கும், இரண்டெடை வாளஞ்சேர்த்தால் சுரத் தின்மேல் மலச்சிக்கல் நீங்கும், பத்தியம் - சுட்டப்புளி வறுத்தவு ப்புக்கூட்டவும்.

இலகுபுன்னைவேர் மாத்திரை.

| | |
|---|---|
| கோஷ்டம் | இந்துப்பு |
| வெள்ளுள்ளி | ஊசிக்காந்தம் |
| கருஞ்சீரகம் | திப்பிலி |
| சந்தனம் | மரி... |
| முத்தக்காசு | சீனக்காரம் |

வகைக்குக்களஞ்சு-க,

புன்னைவேர்ச்சூரணம் பலம்-க, பிட்டாவிலைத் துச்சேர்த்துக்கொ டிவேலிக்கியாழத்தாலாட்டி சிறுகுண்டைக்காய்வீதம் அநுபான மறிந்துண்ணச் சகல வாதசீதள ரோகங்கள் நீங்கும்.

அமிர்தசஞ்சீவிமாத்திரை.

| | |
|---|---|
| கன்னாரி | விலாமிச்சு |
| இருவேலி | சாத்திரபேதி |
| முத்தக்காசு | பேரீச்சு |
| மூஞ்சிரிகை | கோஷ்டம் |
| ஏலம் | லவங்கப்பத்திரி |

| | |
|---|---|
| சந்தனம் | கடுகுரோகணி |
| இலுப்பைப்பூ | திப்பிலி |

வகைக்குச்சூரணம் பலம் க,

இவைகளைக்கருப்பஞ்சாற்றாலாட்டிக் கடலைப்பிரமாணம் மாத்திரைசெய்து முலைப்பால் வெந்நீரில் தாக்க கணம்-சுரம்-தாகமுதலியவை நீங்கும்.

சிந்தாமணிமாத்திரை.

| | |
|---|---|
| துளசி | முசிழ் |
| காரைவேர் | மதுரம் |
| விடயம் | சீரகம் |
| ஓமம் | பெருமரப்பட்டை |
| குராசானி | மாதுளம்பிஞ்சு |
| மாயிர்க்கு | வில்வம் |
| விளா | வில்வப்பிசின் |
| தென்னம்பூ | வேர்க்காய் |
| சாதிபத்திரி | வால்மிளகு |
| உள்ளி | திப்பிலி |

வகைக்குப்பலம்-உ,

இவைகளைக்கெந்தாக்கியாழத்தாலாட்டி சாதிக்காயளவுமாத்திரை செய்து தயிரில் அருந்த நீர்க்கடுப்பு நீர்ச்சுருக்கு-ஆசனக்கடுப்பு-மூலக்கடுப்பு-இரத்தசீதக்கடுப்பு பேதிமுதலியவை நீங்கும்.

மாந்தமாத்திரை.

சீரகம்-காயம்-கருஞ்சீரகம்-உள்ளி-ஓமம்-சுக்கு-மிளகு-திப்பிலி வகைக்கு விராகனெடை-அ, வசம்பு-ந, கடுக்காய்விராகனெடை, சாரணைவேர் பொடுதலைக்கொழுந்து-வேலிப்பருத்தி-தும்பைக்கொழுந்து வகைக்கு விராகனெடை-இ, கல்வத்திலிட்டு தும்பைச்சார்-பொடுதலைச்சார்-முசுமுசுக்கைச்சார்-மேனிச்சார்-கையாந்தகரைச்சார் இவைகளில் வகைக்கு ஒரு சாமமாட்டிச் சிறுகண்டையளவுமாத்திரைசெய்துக்குழந்தைகள் பெலமறிந்து வ-உ, விதம்-முலைப்பால்-வெந்நீரில்-தாக்க மாந்தம்-பொருமல்-வலிப்பு-இசிவு முதலியவை நீங்கும்.

வேலுமாந்த மாத்திரை.

வசம்பு-சீரகம்-அதிவிடயம்-மாசிபத்திரி - தாளிசப்பத்திரி-மாசக்காய் லவங்கம்-ஏலம்-திப்பிலி-வெண்மிளகு வகைக்குப்பலம்.



வ, பூரம்-உ, கல்வத்திலிட்டு விஷ்ணுக்கரந்தைச்சார் - மாசிபத்திரி வேர்க்கியாழம் இவைகளில் வகைக்கு ஒருசாமமாட்டி தொம்பமல்லிவிதைப்பிரமாணம் மாத்திரை செய்து குழந்தைகள் பெலமறிந்துதக்கவனுபானத்திலூட்டச் சகலமாந்தரோகங்களும் நீங்கும், பத்தியம் வியாதிக்குத்தக்கவைகளாம்.

நவமூலமாத்திரை.

தாரம்-பூரம்-கல்நார்பஸ்பம்-கௌரிசிலை- வெண்காரம் வகைக்குப்பலம்-க, இவைகளைக்கொடிக்கள்ளிப்பாலாலாட்டிக் குகையிலிட்டு மேல்மூடிச்சீலைசெய்து வருபுடமிட்டெடுத்துக் கல்வத்திலிட்டு ஆவின்பால் நிம்பழச்சார் - குமரிச்சார் - கையாந்தகரைச்சார் இவைகளில் வகைக்கு ஒரு சாமமாட்டி மிளகுப்பிரமாணம் மாத்திரைசெய்து அனுபானமறிந்த நவமூலங்களும் நீங்கும்.

பஞ்சபாஷாணமாத்திரை.

| | |
|---|---|
| கிராம்பு | சாதிபத்திரி |
| மாசிபத்திரி | ஏலம் |
| சுக்கு | மிளகு |
சிறுமல்லிச்சார்-கையாந்தகரைச்சார் - வெள்ளெருக்கன்சார் வகைக்குப்படி-வ, சட்டியிலிட்டு இட்டம்-அயப்பொடி-மிளகு-சுக்கு-உள்ளி வகைக்குப்பலம் - வ, வெள்ளாட்டுப்பாலலாட்டி மேற்படி பாண்டத்திற்கரைத்து அரைவாசி சுண்டியபின் வடித்து கழஞ்சு உ-க-விதம்கொள்ளவும்.

## மூலத்திற்கு.

சயிந்தியலவணம்-கல்லுப்பு-வெடியுப்பு-விளையலுப்பு-கருஞ்சீரகம் மதூரம்-கோஷ்டம்-வசம்பு-குராசாணிவகைக்குவிராகனெடை-க, காட்டுக்கரணை-காராக்கரணை-காருக்கரணை - இந்திரணிப்பட்டை-மெருகன்கிழங்கு - மணிப்பிரண்டைக்கிழங்கு - ஆப்புகோவைக்கிழங்கு-மருளான்கிழங்கு வகைக்குப்பலம் - உ.உ, வெள்ளுள்ளி பலம் ங, சாதிபத்திரி - காளிசப்பத்திரி வகைக்கு விராகனெடை-உ, இவைகளைச்சூரணித்து திரிகடிப்பிரமாணம் ஆவின்வெண்ணெய்-சீனிசர்க்கரையில் உ - மண்டல மிருவேளையுண்ணவும்.

## வேறுமூலத்திற்கு.

பன்றிநெய்யில் வெள்ளுள்ளி பலம் க, சீரகம் சேர்த்து வறுத்து ரு-நாள் இருவேளை யுண்ணவும்.

## வேறுமுளைமூலத்திற்கு.

வெள்ளெருக்கன்பஞ்சில் சேங்கொட்டைப்பாலைத்தடவிமுளையில் கட்டி வேரறுந்தவுடன் சொரிகிலையை வதக்கி ஒத்தடஞ்செய்து தயிர்சாதம் வைத்துக்கட்டவும்.

## கிரகணிக்கு.

சாதிபத்திரி-சாதிக்காய்-சீரகம்-சுக்கு-லவங்கம் - இலவம்பிசின்-அத்திப்பிசின்-ஆவாரம்பிசின்-இந்துப்பு-கழற்சிப்பருப்பு-ஊமத்தைவித்து-அபின்-இலிங்கம் இவைகளைச்சமன்கொண்டு தேசிச்சாற்றிலாட்டி மாதுளங்காய்க்குள்வைத்து அவிபுடம்போட்டெடுத்து மேதித்தயிரால் ஒருமணி நேரமாட்டி தேன்விட்டுக்குழப்பி-குன்றிப்பிரமாணம் கதலிப்பூச்சாற்றிலுண்ணவும்.

## வேறு கிரகணிக்கு

அத்திப்பிஞ்சு வாழைப்பிஞ்சு-மல்லி-பேராமுட்டி- முத்தக்காசு-வில்லவோடு-சீரகம்-கற்கடகசிருங்கி-மாம்பருப்பு-சுக்கு-திப்பிலி வகைக்குக்கழஞ்சு க, இடித்துப்பாண்டத்திட்டு உ படி சலம்வார்த்து உ-ஆழாக்காகச்சுண்டக்காய்ச்சிக்கொடுக்கவும்.



## வேறு கிரகணிக்கு.

இந்திரணிக்கொட்டைத்தோல் வெள்ளைக்குன்றிப்பருப்பு-கடுக்காய்ப்பிஞ்சு-சாதிக்காய்-சுட்டவசம்பு வகைக்குப்பலம் ய, சூரணித்து இரண்டுகோசெடைப்பிரமாணம் மேதிவெண்ணெயில் இருவேளை ரு-நாள் உண்ணவும்.

## உஷ்ண அதிசாரத்திற்கு.

இலந்தைப்பிஞ்சு கொன்றைப்பிஞ்சு இலவம்பிஞ்சு-ஆவாரம்பிஞ்சு-முருங்கைப்பிஞ்சு-வில்வப்பிஞ்சு அத்திப்பிஞ்சு-ஆலம்பிஞ்சு இத்திப்பிஞ்சு-பருத்திப்பிஞ்சு-அகத்திப்பிஞ்சு-கோவைப்பிஞ்சு வேப்பம்பிஞ்சு விளாம்பிஞ்சு-நாகமல்லிப்பிஞ்சு-மாம்பிஞ்சு- தாமரைப்பிஞ்சு-முசுட்டைப்பிஞ்சு கதலிப்பிஞ்சு-அழிஞ்சல்பிஞ்சு- சீரகம் மதூரம்-திப்பிலி வகைக்குப்பலம் - அ, இவைகளை ஆவின்பாலாலாட்டி நெய் சருக்கரை-தேன் கூட்டிலேகியமாய்ச்செய்துகொட்டைப்பாக்குப்பிரமாணமுண்ணவும்.

## குன்மத்திற்கு.

வரிக்குமட்டிச்சார்-முள்ளங்கிச்சார்-நிம்பழச்சார்- பத்திராட்சிக்கிழங்குச்சார்-ஆவின்கோமயம்-வெள்ளாட்டுக்கோமயம்- சிறுவர்கள் சிறுநீர்-வாழைக்கட்டைச்சார் வகைக்குப்படி-ய, சட்டியிலிட்டு இந்துப்பு-வெடியுப்பு சவுட்டுப்பு-விளையலுப்பு- கல்லுப்பு-துவரையுப்பு நாட்டுச்சாரம் சோற்றுப்பு படிகாரம் வகைக்குப்பலம் க, பொடித்து மேற்படி பாண்டத்திற்கரைத்து வடியிட்டுச்சுண்டவெரித்துக்கல்வத்திட்டு மிளகு சமன் சேர்த்து மலைத்தேனலாட்டி சிறுசுண்டக்காய் வீதமுண்ணவும்.

## விக்கலுக்கு.

செருப்படைச்சாம்பல்-மிளகுச்சாம்பல் - திப்பிலிச்சாம்பல்-நெல்லிப்பருப்பு-நெற்பொரி ஏலம்-முத்தக்காசு-தாமரைவிதைப்பருப்பு-தூதுளைவேர்-பச்சைகற்பூரம்-இலந்தைவிதை-சிறுதேக்கு-பூசினிவித்து-திரிகடுகு வில்வவேர்-பருத்திவிதைப்பருப்பு-சித்தத்தை-விளாம்பழக்கரி அமுக்கராவேர்க்கரி-கடுக்காய்விதை-வெங்கயம்-கருங்குங்கிலியம்-சிறுநாகப்பூ-நன்னாரி-மயிலிறகுச்சுட்டசாம்

பல்-கருப்புப்பட்டைச்-தாளிசபத்திரி-சீரகம் இவைகளைச்சமன்கொண்டு சூரணித்து உ-கூ-காசெடை தேனில்குழைத்துண்ணவும்.

## தீராதவாதத்திற்கு.

வாய்விளங்கம்-கடுரோகணி-திரிகடுகு-இந்துப்பு-வளையலுப்பு-அசமதாகம்-நற்சீரகம் சிவதைவேர்-மதுரம்-திப்பிலிக்கட்டை-ஏலரிசி-கூவிளம்-சித்தாமுட்டி-நன்னாரி வகைக்குப்பலம்-வ, இடித்துச்சூரணித்துக்கல்வத்திலிட்டு கிம்பழச்சார்-புளியாரைச்சார் புதினச்சார்-பழையகாடி-இஞ்சிச்சார் இவைகளில் வகைக்கொரு சாமமாட்டி யுலர்த்திப் பொடித்து உ-கூ-காசெடைகிம்பழச்சார் அல்லது சீனிசருக்கரையிலுண்ணவும்.

## பிடிப்புவீக்கத்திற்கு.

குங்கிலியம்-சாம்பரம்-வசம்பு-மிளகு கடுகு-சாம்பிராணி-வளையலுப்பு-கஸ்தூரிமஞ்சள் கருஞ்சீரகம்-உள்ளி-சூதம்-வாளம்-கெந்தகம்-அரிதாரம் சாதிலிங்கம்-கடுக்காய் இவைகளைச்சமன்சேர்த்து வாதமடக்கிச் சாற்றாலாட்டிக் கள்ளிச்சாற்றில் கரைத்துச் சேருபழமாய்க்காய்ச்சி மேற்பூசவும்.

## கண்டமாலைக்கு.

கெந்தகம்-மனோசிலை-சூதம்-காசுக்கட்டி-துருசு-குக்கில்-மிருதார்சிங்கி தாரம்-வேப்பம்பட்டை-செந்தோன்றிக்கிழங்கு இவைகளைச்சமன்கொண்டு சதுரக்கள்ளிச்சாற்றால் உ-சாமமாட்டியுலர்த்திக் களிப்பாக்குச்சொரூபமாய் வேப்பெண்ணெயாலரைட்டி கட்டிக்கு மேற்பூசவும்.

## வேறு கண்டமாலைக்கு.

வெள்ளை-சிலை-சூதம்-கருவங்கம்-கண்டு-குங்கிலியம்-கஸ்தூரிமஞ்சள் கடுகு மிளகு-சமன்சேர்த்துச சதுரக்கள்ளிப்பாலாலாட்டியுலர்த்தி தேங்காயெண்ணெய் விட்டு மத்தித்து கட்டிமேற்பூசவும்.

## வயிற்றுவலிக்கு.

இந்துப்பு-சுக்கு-திப்பிலி-உள்ளி சீரகம்-மிளகு-ஓமம்-கருப்புக்கட்டி புங்கன்கொழுந்து-வேப்பன்கொழுந்து இவைகளைச்சமன்சேர்த்து மிளகு கியாழத்தால் ஒருமணிநேரம்-இஞ்சிச்சாற்றில் ஒருமணிநேரமாட்டியுலர்த்திப் பொடித்துப்பிரண்டைச்சூரணம் சமன்சேர்த்து திரிகடிப்பிரமாணம் அநுபானமறிந்துண்ணவும்.



## சூலை ரோகணி சோகைக்கு.

சூரத்துக்கடுக்காய்-ரு,௬-நாள் காடியில் ஊரவைத்துலர்த்தி விதைபோக்கி கல்லுப்பு-கோரைக்கிழங்கு-குராசானி-சுக்கு-கொடிவேலிவேர்-திப்பிலி-செவியம் வகைக்கு விராகனெடை-உ, மிளகு-ஓமம்-இந்துப்பு வகைக்குப்பலம்-வ, ஒன்று படுத்தி கல்லுரலில்சாடி-புளித்தமோர்-தேசிச்சார்-இஞ்சிச்சார்-காடி இவைகளில் தனித்தனிப்பிசரி யுலர்த்திச்சூரணித்துத் திரிகடிப்பிரமாணம்-சீனிசருக்கரை-தேன்-நெய் அநுபானங்களிலுண்ண வாத்தி-குன்மம்-அரோசகம்-வயிற்றுவலி-சோகை-சூலை-ரோகணி அதிசாரம் நீங்கும்.

## தந்தரோகத்திற்கு.

ஒரு பலம் கரியுப்பை எருக்கன்பால்-குப்பைமேனிச்சார் இவைகளில் வகைக்கு ஒரு சாமமாட்டி வில்லை தட்டிக் காயவைத்துக் குகைவைப்பிலிட்டு கீழ்மேல் வெள்ளெருக்கனிலைகளைப் பொதித்து மேல்மூடி சீலைசெய்து ௰-எருவில் புடமிட்டெடுத்து தேங்காய்ச்சிரட்டைச் சுட்டகரி பலம்-க, பாதாம் கொட்டைக்கரி பலம்-௨, காசுக்கட்டி கருஞ்சீரகம்-களிப்பாக்கு-துருசு-படிகாரம்-கண்டங்கத்திரியிலை வகைக்குக்கழஞ்சு-க, இவ்வைமருந்துகளையொன்றுசேர்த்துப் பல்விளக்கி கடுக்காய்-காசுக்கட்டி-முடக்கத்தான்-கருவேலம்பட்டை-நீர்ப்பூலா-காட்டாமணக்கன்வேர் சமன்சேர்த்துக்கியாழ மொரக்கி கொப்பளிக்கவும்.

## வேறு தந்தரோகத்திற்கு.

சேங்கொட்டை-சித்திரமூலவேர்பட்டை வகைக்குப்பலம்-ம, கரியுப்பு பலம்-ஐ, குகைவைப்பிலிட்டு வெள்ளெருக்கன்சார் விட்டுக்கவார்த்து சீலைசெய்து முழப்புடம்போட்டெடுத்து பல்தேய்க்கவும்.

## காதில் சீழ்வடிதலுக்கு.

சத்திச்சாரணைக்கிழங்கு-கிளாவேர்-நெல்லிவேர்- செப்புநெரிஞ்சில்வேர்-வேளைவேர் தண்டூரைச்சி-துரையுப்பு சமன்சேர்த்து வேப்பெண்ணெயில் காய்ச்சி வடித்து ௪-௫-துளி வீதம் காதில் விடவும்.

## காதுநோய்க்கு.

பெருங்காயம்-உள்ளி-வசம்பு எருக்கன்வேர் - கள்ளிவேர் மஞ்சளிலை-வில்வப்பழச்சதை-முருங்கைவேர்ப்பட்டை - எருக்கன் பழுப்பு-கரையான்-பூநாகம் இவைகளை வேப்பெண்ணெயில் காய்ச்சிவடித்து ௬-துளிவீதம் காதில் விடவும்.

## செவிப்புழுவுக்கு.

செப்புநெரிஞ்சில்வேர்-பேய்ப்பீர்க்கன்வேர்- பெருங்காயம்-சுருகுசா-வசம்பு இவைகளைவேப்பெண்ணெயிற்போட்டு ஆடுதீண்டாப்பாளைச்சார் முருக்கிலைச்சார்-வெள்ளிலைச்சார்- வெள்ளுள்ளிச்சார்-கள்ளிச்சார்-ஆவின்பால் - வேலிப்பருத்திச்சார் சமன் சேர்த்து மேற்படி எண்ணெயிற் கலக்கி காய்ச்சி வடித்து ௫-௬-துளிவீதம் செவியில் விடவும்.

## முழங்கால் வாதத்திற்கு.

வீழியிலை-புண்ணாக்குப்பூண்டு-ஆவாரையிலை இவைகளைச்சமன்கொண்டு கிரியலை சரியெடைகூட்டி முட்டைகட்டி வேப்பெண்ணெயில் காய்ச்சியெடுத்து முழங்கால்மீதில்பூசி மலையவரியிலையை அருமிளியிட்டு வதக்கிக்கட்டவும்.

## அரையாப்புக்கட்டிக்கு.

கொடிவேலிச்சூரணம் எடை-௧, வெள்ளைப்பாஷாணம் ௨, தேன் மெழுகு-௨, கீர்ப்பூலாக்கிழங்கு-௨, அவுரியிலை - ௨, வெள்ளைப்பூண்டு-வெள்ளருகு-முடக்கத்தான்-ஆதளைவேர் வகைக்கு-௨, கற்சுண்ணாம்புநீர்-௧ இவைகளையொன்றாய்ச்சேர்த்தரைத்து வில்லைதட்டி ஓட்டிவிட்டு அனல்காட்டி கட்டிக்குமேல் வைத்துக்கட்டவும்.



## விரேசனத்திற்கு.

பிரமியிலை பிடி-௧, கடுக்காய்-கழஞ்சு-௩, களிப்பாக்கு - கழஞ்சு-௨, சுக்கு-௧, மூங்கிலுப்பு-௨, இந்துப்பு-௨, இவைகளைநசுக்கிப்பாண்டத்திலிட்டு ஒருபடி சலமும் - ௨, ஆழாக்கு இஞ்சிச்சாறும் வார்த்து ஆழாக்காகச்சுண்டவடித்து பெலமறிந்து தாக்கவும்.

## வேறு விரேசனத்திற்கு.

தேங்காய்ப்பூ-முடக்கொத்தான் வகைக்குச்சாறு ஆழாக்கு இந்துப்பு விராகனெடை-௧, களிப்பாக்கு விராகனெடை-௨, கடுகுரோகணி-௨, கடுக்காய் விராகனெடை - ௨, நிலவாகை-௩, கருவேலங்கொழுந்து-௩, பிரமியிலை பிடி-௧, இவைகளை நசுக்கி மேற்படி சாற்றில் கலக்கி மூன்றுழாக்கு நல்லசலஞ்சேர்த்து முக்காலாழாக்காகச்சுண்டக்காய்ச்சவும்.

## வேறு விரேசனத்திற்கு.

சிறுநாகப்பூ-ஏலம்-லவங்கப்பட்டை-வாய்விளங்கம்- திரிகடுகு-திரிபலை-கடுகுரோகணி-மறாம்-சீரகம்-மூங்கிலுப்பு - இந்துப்பு-கரிவேப்பிலை-நிலவாகை-பன்னீர்ப்பூ-சேவல்சின்னி- சிவதைவேர் இவைகளைச் சமன்சேர்த்துச் சூரணித்து தேகபெலமறிந்து ௧-௨-விராகனெடை வீதம் கொள்ளவும்.

## கிருமி விரேசனம்.

சிறியாநங்கை-பேய்த்துமட்டிவேர் - வெள்ளருகுவேர்- நிலவேம்பு-நீலி-பன்வேர்-சோம்பு-இந்துப்பு-திரிகடுகு- இருசீரகம் வகைக்குப்பலம்-௨, பன்னீர்ப்பூ-௧, நிலவாகை - ௫, சிவதைவேர்-௭, சேவல்சின்னி - ௨, இவைகளையொன்றாய் சேர்த்துச்சூரணித்துக் கள்ளிப்பால் விட்டுப்பிசரி ரவியுலர்த்திச் சூரணித்து தேகபெலமறிந்து ௧ ௨-விராகனெடை சுக்குக்கியாழத்தில் கொடுக்கவும்.

## வெள்ளைக்கு.

வெந்தயம்-சீரகம் சிறுபூளைவேர்-விஷ்ணுகிரந்தி-வாய்விளங்கம் ஏலம் சோம்பு-வாலுளுவை கோரைக்கிழங்கு- தேத்தான்வித்து-நன்னாரி-வில்வவேர் நெற்பொரி வெள்ளைக்குங்கிலியம்-நெரிஞ்சில்

வேர்-நாயுருவிவேர்-மதூரம்-வெட்பாலைவித்து-கோஷ்டம்-சென்பகப்பூ-வாய்விளங்கம்-திரிபலை சுடைகீர்-சிற்றிருக்கை-வெள்ளரிவித்து-சுருள்ளிவித்து-ஆவாரைவித்து - கடலாஞ்சிப்பட்டை வகைக்குப்பலம்-௨, இவைகளைச்சூரணித்து நெய்-சருக்கரை-தேன்கூட்டி லேகியமாய்க்கிண்டி கொட்டைப்பாக்களவு வேளையத்தில் சிலாசத்து பற்பம்-சங்கீர்பற்பம் - சிங்கிபற்பம் - கருடக்கல்பற்பம்-சுமதபற்பம்-வெளவங்கபற்பம் வெள்ளிபற்பம் சமன்கூட்டி ௨-௩-அரிசியெடைப்பிரமாணம் வைத்துண்ணவும்.

வேறு சகல பீனிசத்திற்கு.

சன்னடை-சமுத்திரசோகி-சுக்கு-மதூரம்-அக்கல்காரம்-விடங்கம்-ஓமம்-அரிசித்திப்பிலி-திப்பிலிமூலம்-குராசானி வால்மிளகு-சித்திரமூலம்-கருஞ்சீரகம்-கஸ்தூரிமஞ்சள்-கடுகுரோகணி-காயம் ஆனைத்திப்பிலி-சாமப்ராணை-பேராத்தை - அறிஞ்சில்வேர்ப்பட்டை-கடுகு-வேப்பரிசி-எருக்கிலை வகைக்குக்கழஞ்சு-க, தூதுளை-கண்டங்கத்திரி-மிளகரணை-வெள்ளைச்சாரணை-புங்கம்பாளை-உத்தாமணி-கடலாஞ்சி தைவேளை-குப்பைமேனி இவைகளின்வேர் வகைக்குக்கழஞ்சு-௨, உலர்த்திச்சூரணித்து அத்திப்பால் - வெள்ளாட்டுக்கோமயம் சரிசேர்த்து மேற்படி சரக்குகளை யெல்லாம் பொட்டி யுலர்த்திப்பொடித்து பணவெடைத் தூள் நாசிக்கேத்தவும் அல்லது மருந்தை கடுதாசியில் வைத்துச்சுருட்டி நிம்பெண்ணெயில் தோய்த்துக்கொளுத்தி ஆற்றி புகைபிடிக்கவும்.

மேக இரணங்களுக்கு.

அரிதாரம்-இலிங்கம்-ரசகற்பூரம்- கொடிக்கள்ளிப்பட்டை - கழுதைலத்திசமன்சேர்த்துப்பொடித்து மேற்படி பீனிசமருந்து சமன்சேர்த்து புங்கன்கட்டை புளியன்கட்டை கொளுத்திய நெருப்பின்மேல் மேற்படி மருந்தை ஒருவிராகனெடைபோட்டுக்கண்ணுள்ள தேங்காய்ச்சிரட்டைக் கவிழ்த்து துவாரவழியாய் வரும் புகையை இரணங்களுக்குப் பிடிக்கவும்.

சகல விஷரோகங்களுக்கு.

எட்டிவேர்-அழிஞ்சல்வேர்-வன்னிவேர்-புங்கன்வேர் சங்கங்குப்பிவேர்-சின்னிவேர்-ஆயில்பட்டை-ஆனிவேர்- வெள்ளெருக்க



ன்வேர் மருக்காரைவேர் சென்னாயுருவிவேர்-குன்றிமணிவேர்-ஆவாரைவேர்-கருங்கண்ணரிவேர்-சிவன்வேம்பு - முள்ளிவேர் - மருதோன்றிவேர்-கருங்காலிவேர்-புரசன்வேர்-இருவைவேர்-வாகைவேர்-கொட்டைக்கரந்தைவேர் மத்தன்வேர் கொடிவேர்- அழுக்கராவேர்-தேக்குவேர்-விடத்தலைவேர்- குமரிவேர் - அரசன்வேர்- கொன்றைவேர் செங்கத்தாரிவேர்-சிறியாநங்கைவேர்-நிம்பவேர்-நீலிவேர்-வெள்ளருகு-[illegible] மலைவேம்பு இவைகளை சமனாகக்கொண்டு பாண்டத்தேற்றி குழித்தயிலமா[illegible] அண்டங்காக்கை-கழுகு-ஆமை ஆந்தை-தேவாங்கு-பச்சோந்தி-முசல்-பசுந்தவளை-பெருவிரியன்-பச்சையரவம் கழுதைலத்தி- ஆனைலத்தி கரிக்கொம்பு-மேழிக்கொம்பு தலைமண்டையோடு- முயல்புழுக்கை-வவ்வால்-எலிப்புழுக்கை ஒட்டைலத்தி - வெள்ளாட்டுப்புழுக்கை-மான்புழுக்கை இவைகளைச் சமன்சேர்த்துக் குழித்தயிலமெடுக்கவும் இவ்விரண்டு தயிலங்களுமொன்றாய்க்கலந்து தேங்காயெண்ணெய்-௨ கூட்டிகருங்குங்கிலியம் கருஞ்சீரகம் - தேவதாரி-கஸ்தூரிமஞ்சள்-ரசகற்பூரம் வகைக்குக்கழஞ்சு-அ, அரைத்துப்போட்டுக்கலக்கி மயிலெண்ணெய் வேப்பெண்ணெய்- புங்கெண்ணெய் நாலிலொன்றுசேர்த்துசொரி சிரங்கு-ஜன்னி-விஷபாண்டுவிஷரோகமுதலியவைகளுக்கு மேற்பூசி ஆவாகீயிடவும்.

மேகரோகத்திற்கு.

ஆவாரம்பூ-புங்கம்பூ-முருங்கைப்பூ வகைக்குப்படி - க, பதமாய் நெய்விட்டுப்பொரிவதக்கி கழஞ்சுவீதம் ௧ மண்டல மிருவேளையுண்ணவும்.

அட்டகுன்மங்களுக்கு.

முடக்கொத்தான்-சித்திரமூலவேர்-பிரண்டை-மிளகு இவைகளைச்சமன்சேர்த்துச்சூரணித்து மூத்திரிகையுப்பு-முள்ளங்கியுப்பு இராகூயுப்பு-இந்துப்பு-வெண்காரம் சீனக்காரம்- வெடியுப்பு மேற்படி மருந்துக்கு நாலிலொரு பங்கு சேர்த்து வெள்ளுள்ளிச்சாற்றில் மருந்துகளைப்போட்டு இருதமாய்ச்செய்துவைத்துக்கொண்டு கழஞ்சுவீதம் உட்கொள்ளவும்.

## மூலரோகத்திற்கு.

பிரண்டை-கார்த்திகைக்கிழங்கு-கருணைக்கிழங்கு-அமுர்தவள்ளிக்கிழங்கு நிலப்பனைக்கிழங்கு-அப்புகோவைக்கிழங்கு இவைகளைச்சமன்சேர்த்து ஆவின்பாலிலவித்துக்குரணித்து கோவைவித்து-அரசன்வித்து-ஆவாரன்வித்து-அக்கிவிக்து- மாதுளைவித்து முளை...வெடுத்துச் சமன்சேர்த்துச்சூரணித்து முன்சூரணத்தோடுகலந்து இரா...........ரத்தகாயம்-தக்கோலம்- மாசக்காய்-விடயம்-ஓமம்-திரிகடுகு-சீரகம்-வாலுளுவை- முக்கிரிகை-பேரீச்சு சமன் சேர்த்த சூரணமுங்கலந்து திரிகடிப்பிரமாணம் ஆவரம்பஞ்சாங்கத்தில் வைத்துண்ணவும்.

## இரத்தமூலத்திற்கு.

மாதுளை பருத்திப்பிஞ்சு-சுண்டைவேர்- சுரைக்கொடி-கோவைக்கிழங்கு வகைக்குப்பலங்கால் திரிபலை-சாதிக்காய்- இராம்புபத்திரி-ஓமம்-வெந்தயம்-திரிகடுகு-ஏலம்-இலவங்கம்-மாஞ்சில் குராசாணி-மதுரம்-விளங்கம்-கொத்துமல்லிவிதை-சீரகம் வகைக்குக்கழஞ்சு-க, நன்னாரி பரங்கிச்செக்கை-ஆவாரம்வேர்- தேத்தான்வித்து வகைக்குப் பலம் க, இவைகளை யொன்று சேர்த்து நையயிடித்துப்பாண்டத்திட்டு கஉ படி சலம் வார்த்து வ-படியாகச்சுண்டித்து வடித்து முக்காலாழாக்கு வீதங்கியாழத்தில் சீந்திற்சர்க்கரை கூகைநீர்-பனங்கற்கண்டு வகைக்குவிராகனெடை-க, ஆவின்வெண்ணெய் நேசிக்கனியளவு கூட்டியுண்ணவும்.

## வாதரோக விரேசனத்திற்கு.

திரிபலை-திரிகடுகு-முத்தக்காசு-வாய்விளங்கம்-ஓமம்- சோமனுப்பு கடுகுரோகணி-விடயம் வகைக்குப்பலம்-க, நிலவாகை-சிவதைவேர்-பன்னீர்ப்பூ வகைக்குப்பலம் - வ, இவைகளைச்சூரணித்து ஆமணக்கெண்ணெயில் லேகியம்போற் கிளரிக்களஞ்சுவீதமுட்கொண்டு மாலையில் மிளகு-கடலையிட்டு-சுக்குதட்டிப்போட்டுக்கியாழம்வைத்துண்ணவும்.

## இரத்தசிழ்மூலத்திற்கு.

மணிப்புங்கன்பட்டை பலம்-உ0, ஓமம்- எரழிஞ்சல்வித்து-கிழ்க்காய்நெல்லிவேர்-சுக்கு-செவ்வல்லிக்கொடி-விடயம்-பற்பாட



கம்-பரங்கிப்பட்டை-சாதிக்காய் வகைக்குப்பலம் - வ், நையயிடித்து வெள்ளாட்டுப்பாலில்பிசரி கிழலுலர்த்திச் சூரணித்து நெய் தேன் சர்க்கரைசேர்த்து லேகியபாகமாய்க்கிளரி புன்னைக்காயளவு லேகியத்தில் சிற்கிபற்பம் வைத்துண்ணவும்.

## இரத்தவெள்ளைக்கு.

ஓரிதழ்-தாமரைக்கிழங்கு-பூமிச்சருக்கரைக்கிழங்கு- அப்புகோவைக்கிழங்கு-தேத்தான்வித்து வகைக்குச்சூரணம் பலம்-க, தேங்காய்ப்பால்-புங்கம்பால்-ஆவின்பால்-தண்ணீர்விட்டான்சார்-கலியாணப்பூசினிச்சார்-நிம்பழச்சார் - செவ்விளநீர் வகைக்கு ஆழாக்கு க சேர்த்து நெய் தேன்-சீனிகற்கண்டு பதமாய்க்கட்டி மேற்படி சூரணங்களைப்போட்டுக்கிளரி புன்னைகாயளவு லேகியத்தில் கல்நார்பற்பம் வைத்துண்ணவும்.

## பக்கச்சூலைக்கு.

கெச்சக்காய்ப்பருப்பு-உள்ளி-கடுகு-வசம்பு - சுக்கு- மிளகு-வெண்காரம் சமன்கொண்டு ஆவின்பாலாலாட்டி சமன் நிம்பழச்சார் இரட்டி நெய்சேர்த்து பதமாய்க்காய்ச்சியடித்து உட்கொள்ளவும்.

## தொண்டைகம்மலுக்கு.

சுக்கு கடுக்காய் திப்பிலி-வாலுளுவை-தாளிசப்பத்திரி-அக்கல்காரம்-சித்தரத்தை-வாய்விளங்கம் வகைக்குப்பலம்-வ, சூரணித்து பச்சைகற்பூரம்-கோரோசனை-குங்குமப்பூ வகைக்கு விராகனெடை உ-சேர்த்து பணவெடை வீதம் உட்கொள்ளவும்.

## சத்திக்கு.

சுக்கு-கடுக்காய்-நெற்பொரி சீரகம்-ஏலம்-திப்பிலி-தாளிசம்-கொத்துமல்லிவிதை-கூவிளம்-சித்தாமுட்டி-முத்தக்காசு வகைக்குப்பலம்-க, சூரணித்து தேசிச்சாற்றால் உ-ஜாமமாட்டி யுலர்த்திப்பொடித்து திரிகடிப்பிரமாணம் இஞ்சி - நிம்பழச்சார் அனுபானங்களிலுண்ணவும்.

## சேத்துமகாசத்திற்கு.

ஈயக்கொழுந்துவேர்-தூதுளைவேர்-கற்சங்கன்வேர்- கண்டங்கத்திரிவேர்-சுக்கு-திப்பிலி-தாளிசம்-தேத்தான்வித்து - பரங்கிச்

செக்கை-நன்னாரி இவைகளைச்சமன்கொண்டுசூரணித்து தக்க வனுபானங்களிலூட்டவும்.

கபாலஜன்னிக்கு.

பச்சைமஞ்சள்சார்-ஆடுதொண்டைச்சார்-நொச்சிலைச்சார்-சவுரிப்பழச்சார் வகைக்கு ஆழாக்கு-க, நல்லெண்ணெய்படி-உ, ஒன்றுசேர்த்து அரத்தை சதகுப்பி வகைக்குப்பலம் - க, ஆவின்பாலாலாட்டிக்கரைத்துப் பதமாய்க்காய்ச்சி வடித்து ஸ்நானஞ்செய்யவும்.

விக்கல் ஜன்னிவாய்வுக்கு.

இரசச்சிந்தூரம்-இலிங்கச்சிந்தூரம் சுத்தித்தநாபி-அப்பிரேகபற்பம்-காந்தச்சிந்தூரம் வகைக்கு விராகனெடை - க, மிளகு-வாய்விளங்கம்-கடுகுரோகணி கருஞ்சீரகம்-சுக்கு-திப்பிலி-தாளிசம்-ஏலம் வகைக்குப்பலம்-க, சூரணித்து மேற்படி மருந்தோடு சேர்த்து நிம்பழச்சாற்றால் ச-ஜாமமாட்டி கடலைப்பிரமாணங்குளிகை கட்டி தேகபெலமறிந்து தக்க அளவாயுண்ணவும்.

இடுப்புவாதத்திற்கு.

பொடுதலைக்காய்-முடக்கத்தாளிலை-வாதமடக்கிவேர்-மிளகு-சுக்கு-கடுகு-உள்ளி சமன்சேர்த்து உள்ளிச்சாற்றாலாட்டிக்கழற்சியளவுண்ணவும்.

மார்வலிக்கு.

முட்காவேளைவேர் மிளகுதாரணைவேர் - புளியாரணைவேர் சிறுபூளைவேர்-நாதாளைவேர்-மிளகு-சுக்கு-வெள்ளுள்ளி நன்னாரி-பன்னீர்ப்பூ சமன் சேர்த்து வென்னீராலாட்டிக் கழற்சிக்காயளவு ஆவின்பாலிலுண்ணவும்

நீரிழிவுக்கு.

குட்டிவிளாயிலை - கோவைக்கிழங்கு - கீழ்க்காய்நெல்லியிலை வகைக்குப்பிடி-க, ஆவாரன்பட்டை-மாம்பட்டை-கருவேலம்பட்டை வகைக்குப்பலம்-க, இவைகளைக்கியாழமிட்டெட்டாக்கி - க, ஆழாக்குக்கியாழம் வெள்ளாட்டுப்பால் படி-வ, ஒக்கச்சேர்த்து மேற்படி இவைகளைக்கலந்து அண்டக்காய்ச்சி யிறக்கி யுண்ணவும்.



இரணங்களுக்கு.

புங்கம்பால்-தேங்காய்ப்பால்-வேப்பெண்ணெய் - புங்கெண்ணெய்-தேங்காயெண்ணெய் வகைக்கு ஆழாக்கு-க-ல், வீரம்-கெந்தகம் ரசகற்பூரம் வகைக்கு விராகனெடை - க, நிம்பழச்சாற்றாலாட்டிக்கரைத்து ஆவின்வெண்ணெய்படி-வ, சேர்த்துப் பதமாய்க்காய்ச்சி யிறக்குஞ்சமயத்தில் காவிக்கல் பலம்-க, பொடித்துப்போட்டு இரணங்கள்மேல் தூவாலையிடவும்.

உஷ்ணவாயுவுக்கு.

குராசானி-நற்சீரகம்-சதகுப்பி திப்பிலிகாயம் - விளங்கம்-கிராம்பு-மிளகு சித்தரத்தை-ஓமம்-கருஞ்சீரகம்-சாதிக்காய் வெள்ளைப்பூண்டு-கடுகுரோகணி வசம்பு இவைகளைச் சமன்கொண்டு சூரணித்துப் பதமாய்ப் பனைவெட்டுசேர்த்துக் கல்லுரலில்சாடி மெழுகுபோற்செய்து வேளையொன்றுக்குக் கழற்சிக்காய் விதமுண்ணவும்.

வேறுசூலைரோகத்திற்கு.

பேய்த்தும்மட்டிவேர் பலம்-உ, கழற்சிவேர்-உ, வாதமடக்கிவேர் க, திரிகடுகு-திரிபலை பஞ்சலவணம் வகைக்குப்பலம் - வ, சூரணித்து அயச்சிந்தூரம்-சிங்கிபற்பம்-சிலாசத்துபற்பம் வகைக்குவிராகனெடை-ந, சேர்த்துப்பணவெடை தேனிலுண்ணவும்.

தலைவலிக்குப்புகை.

இலிங்கம்-பூரம்-அரிதாரம்- சாம்பிராணி - சூதச்சிந்தூரம்-குன்றிமணி-மஞ்சள் இவைகளைச் சமன் சேர்த்து தேசிச்சாற்றால் ஒருநாள் பாவையர்பாலில் ஒருநாளாட்டிச் சீலையில் தடவி திரியாக்கிப் பதமாய்ப் புகை பிடிக்கவும்.

க்ஷயரோகத்திற்கு.

சீரகம்-பேய்ப்புடல்-பேய்ப்பீர்க்கு-நெரிஞ்சில்-நீர்முள்ளிவித்து வகைக்குப்பலம்-வ, சூரணித்துச் செவ்விளநீரிலிட்டுச்சுண்டக்காய்ச்சி பச்சைகற்பூரம்-கோரோசனை-கலைக்கொம்பு பற்பம்-சாம்பிராணிப்பதங்கம்- சந்தனம் - பவழபற்பம் வகைக்கு விராகனெடை-உ, ஒக்கச்சேர்த்து மலைத்தேனாலாட்டிப் பட்டாணிவிதமுண்ணவும்.

### சகலநேத்திரநோய்க்கு.

இலக்கைச்சார்-செவ்விளநீர்-எள்ளெண்ணெய்- ஆவின்பால் வகைக்குப்படி-க, பாண்டத்தேற்றி சாதிக்காய் ஏலம்-மிளகு-சாதிபத்திரி வகைக்குப்பலம்-க, ஆவின்பாலாலாட்டி மேற்படி பாண்டத்திற் கரைத்துக் காய்ச்சி எரக்குஞ்சமயத்தில் குங்குமப்பூ-கோரோசனை வகைக்கு விராகனெடை-க, பொடித்துப்போட்டு வடித்து ஸ்நானஞ்செய்யவும்.

### வேறு மேகரோகங்களுக்கு.

ஆமணக்கெண்ணெய்-விழுதிச்சார்-மயிர்மாணிக்கச்சார்-சிறுசெருப்படைச்சார்-கீழாநெல்லிச்சார்-சிந்திற்சார்-தாழைச்சார்-கோவைச்சார்-அருகஞ்சார்-ஆவின்பால் செவ்விளநீர் வகைக்குப்படி-க, பாண்டத்திட்டு மிளகு-சீரகம்-சுக்கு வகைக்குப்பலம்-ரு, ஆவின்பாலாலாட்டிக்கரைத்துப் பதமாய்க்காய்ச்சிவடித்து வ-உ-பலம் வீதமுண்ணவும்.

### மேகக்குடைச்சலுக்கு.

அருகன்கட்டை-வேப்பம்பட்டை-சங்கன்வேர் வகைக்குப்பலம்-ரு, சுக்கு-வால்மிளகு-ஓமம்-வாய்விளங்கம்-நற்சீரகம்- பாக்கிப்பட்டை-திப்பிலி-குராசாணி-மிளகு-கடுகுரோகணி-பூலா- அக்கரகாரம்-அரத்தை வகைக்குப்பலம் க, சிறுதேக்கு- கருஞ்சீரகம்-இராம்பு-லவங்கப்பட்டை-சாதிக்காய்-சாதிபத்திரி-ஏலம் - கோஷ்டம் வகைக்குக்கழஞ்சு - க, இவைகளைச்சூரணித்து திரிகடிப்பிரமாணம் சீனிசர்க்கரையிலுண்ணவும்.

### அழுக்கு உதிரச்சிக்கலுக்கு.

கதலிச்சாறு-ஓட்டடை-வெண்காரம்-இந்துப்பு- சுண்ணநீர் சமன்சேர்த்துப் பனைவெட்டு இரட்டிசேர்த்து கொட்டைப்பாக்களவு கொடுக்கவும்.

### விந்தூறும் பாயாசம்.

தண்ணீர்விட்டான்கிழங்குச்சார் - நிலப்பனைக்கிழங்குச்சார்-ஆவின்பால்-தேங்காய்ப்பால் வகைக்கு ஆழாக்குரு, பாண்டத்திட்டு ஒருபலம் பாதாம்பருப்பை அரைத்துக் கரைத்து உ - பலம் சீனிக்கண்டு சேர்த்துக் காய்ச்சியுண்ணவும்.



### தந்தவாய்வுக்கு.

சோற்றுப்பு பலம்-ம, சேங்கொட்டை பலம் - உ, படிகாரம் பலம் க, வெள்ளெருக்கன்பழுப்பு-ரும, இவைகளைக் குகைவயிலிட்டுப்புடம்போட்டெடுத்து பல் தேய்க்கவும்.

### முடக்கு குத்துக் குடைச்சலுக்கு.

வேலிப்பருத்தி மத்தை-சங்கங்குப்பி - பிரம்மராக்காசி- வேளை-வாதமடக்கி வெண்சாரணை வெள்ளருகு-தும்பை- கள்ளி வெள்ளெருக்கன் இவைகளின்வேர் வகைக்குப்பலம்-க, மஞ்சள்-பூண்டு-சுக்கு-காட்டுச்சீரகம்-கார்போகம்-அரிசித்திப்பிலி-மிளகு-சதகுப்பி காயம்-கடுக்காய் தொடி, வேலி-கஸ்தூரிமஞ்சள்- சன்னராஷ்டகம் சென்னெலரிசி-கருஞ்சீரகம்-வெண்கடுகு-அமுக்கரா வகைக்குப்பலம்-வ, ஒன்றுசேர்த்து இடித்துச் சூரணித்து நிம்பழச்சாற்றால் எ-சாமமாட்டி கெந்தி-மனோசிலை-தாரம் சூதம்-வெண்காரம் இலிங்கம்-கெவுரி-வெண்ணாபி வகைக்குக்கழஞ்சு - க, ஒக்கச்சேர்த்து தும்பைச்சார்-கரசாலாங்கண்ணிச்சார் தேங்கிச்சார் இவைகளில் வகைக்கு எ-சாமமாட்டி புடமிட்டு தேன்விட்டு மெழுகுபோற்செய்து தேகபெலமறிந்து குன்றி வீதம் கொடுக்கவும்.

### வேறு வீக்கத்திற்கு.

புற்றுமண்-பழையசுண்ணாம்பு மூசாம்பரம்-காயம்-கடுகு சமன்சேர்த்து குஞ்சாலத்திச்சாற்றாலாட்டி சுடவைத்து கொதிப்பித்து மேற்பூசவும்.

### பாரிசவாய்வு மேகசூலைக்கு.

சிறுசெருப்படைச்சார்-அந்தரத்தாமரைச்சார் - கட்டுக்கொடிச்சார்-வெள்ளருகுச்சார்-கழற்சிச்சார்-வாதமடக்கிச்சார்- முத்தெண்ணெய் வகைக்குப்படி-க, ஒன்றுகலந்து பாண்டத்தேற்றி நெல்லிப்பட்டை-அருநெல்லிப்பட்டை-திரிபலை திரிகடுகு வகைக்குப்பலம்-க, பால்விட்டரைத்துக்கரைத்து கால்உரோமம்-குடல்-தலைகழிச்சுபோக்கிய கள்ளிக்காக்காயை உரலில் மைபோலிடித்துமேற்படி பாண்டத்திற்சேர்த்து பதமாய்க்காய்ச்சிவடித்து தேகஅளவுகண்டு வ-உ-பலம் வீதம் வ-உ-மண்டலமுண்ணவும்.

### வேறு மேகரோகங்களுக்கு.

கெந்தகத்தை எள்ளெண்ணெயாலாட்டிச் சீலையிலூட்டித்திரித்து கதிர்கம்பியிலகோர்த்துச் சுடர்த்தயிலமெரக்கவும், சீரகம்-தாளிசம்-லவங்கப்பூ-லவங்கப்பட்டை-ஏலம் வகைக்குப்பலம்-க, சாதிக்காய்-பரங்கிச்செக்கை-நன்னாரி வகைக்குப்பலம் - உ, சூரணித்துக்கல்வத்திட்டு மேற்படி சுடர்த்தயிலத்தால் அரைச்சாமமாட்டி மிளகுப்பிரமாணம் கொள்ளவும்.

### உதிரவெள்ளைக்கு.

விராலியிலை-நன்னாரியிலை-வெள்ளருகுயிலை - வில்வயிலை-ஆவாரம்பூ-முருங்கைப்பூ-வெள்ளைகலியாணமுருக்கனிலை- சிமைசப்பாத்திப்பூ-மயிர்மாணிக்கம் பொன்னாங்கண்ணியிலை தேத்தான்வித்து-வால்மிளகு மதுரம்-பரங்கிச்செக்கை-பச்சரிசிமாவ் வகைக்குச்சூரணம்பலம்-வ, வெள்ளைக்குங்கிலியம்-கூகைநீர் - சித்திரச்சர்க்கரை-சிலாசத்துபற்பம் கலைக்கொம்புபற்பம்- சிமைக்கிலுகார்பற்பம் வகைக்குக்கழஞ்சு-க, ஒன்று சேர்த்து திரிகடிப்பிரமாணம் ஆவின்வெண்ணெய் அல்லது குமரிச்சாதத்திலுண்ணவும்.

### வேறு மூலத்திற்கு.

தாதுளைவேர்-ஆவாரைவேர்-பிரண்டை கருணைக்கிழங்கு-அருகன்கட்டைசமன்சேர்த்து பன்றிநெய்பால் குழம்புபோலாட்டி க-உ-கழஞ்சிவிதம் உட்கொள்ளவும்.

### நீர்க்கடுப்புக்கு.

செண்பகப்பூ-கூவிளம்வேர்-நிலப்பனைவேர்- நிலப்பனைக்கிழங்கு-நன்னாரி-மதுரம் கிராம்பு-வில்வமரப்பிசின் வகைக்குப்பலம்-க, இடித்துப்பாண்டத்திட்டு உ-படி சலம் வார்த்து அழாக்காகச்சுண்டித்து வடித்து தாழைவிழுதுச்சார்-அரைக்காலாழாக்கு சேர்த்து சீனிசர்க்கரைபலம்-உ, கூட்டி கோப்பையிலிட்டுச் சீலையால் வாய்மூடி பனியில் வைத்து அதிகாலையிலுண்ணவும்.

### உட்குத்துக்கு.

சுக்கு-வெண்காரம்-திப்பிலி-கடுகு-சீனக்காரம்-மிளகு-காயம் அரத்தை-கருஞ்சீரகம் வகைக்குப்பலம்-க, கெந்தகம்-கழஞ்சு-உ,



ஒன்றுசேர்த்து பழச்சாற்றாலாட்டி சிறுசுண்டக்காய் விதங்கொள்ளவும்.

### வேறு ஜன்னிகளுக்கு.

சுக்கு மிளகு கருஞ்சீரகம்-கார்போகம் - அரத்தை-மஞ்சள்-சதகுப்பை-இந்துப்பு கஸ்தூரிமஞ்சள்-கொடிவேலி - வசம்பு- உள்ளி முன்னை-அமுக்கரா-சாரணைவேர்-மிளகுசாரணைவேர்- ஆம்பற்பூ-மருகம்வேர் இவைகளைச்சமன்கொண்டு வெள்ளுள்ளிச்சாற்றாலாட்டி. வேப்பெண்ணெயிலிட்டுக்காய்ச்சி மேற்பூசவும்.

### சகலவாய்வுகளுக்கு.

கோஷ்டம்-திப்பிலி-வெண்காரம்-அக்கல்காரம்-வாய்விளங்கம்-தான்றிக்காய் மிளகு-சாதிக்காய் கிராம்பு-வசுவாசி-ஏலம்- மஞ்சிட்டி-கச்சோலம் திப்பிலிமூலம்-மஞ்சள் இருசீரகம் வாலுளுவை-கார்போகம்-வெளுத்தப்பிசின் வகைக்குச்சூரணம் பலம்-க, சூதம்-கெந்தி-தாரம்-காபி-மனோசிலை-இலிங்கம்-பொன்னரிதாரம்-பூரம் வகைக்குக்கழஞ்சு-க, கல்வத்திட்டு குமரிச்சாற்றால் எ-ஜாமமாட்டி க உ மிளகுப்பிரமாணம் அனுபானமறிந்து கொடுக்கவும்.

### கபாலஜன்னிக்கு.

எருக்கன்சார்-நிம்பழச்சார்-முருங்கைச்சார்-தேங்காய்ப்பால் எள்ளெண்ணெய் வகைக்குப்படி-க, வேப்பெண்ணெய் படி - வ, ஒன்றுசேர்த்துப்பாண்டத்தேற்றி கிராம்பு-வசுவாசி-செவ்வல்லிக்கிழங்கு-சாதிக்காய் ஏலம்-சீரகம்-அசமதாகம்-மதுரம்- திப்பிலிமூலம்-அமுக்கரா வகைக்குப்பலம்-உ, இளநீராலாட்டிப் பாண்டத்திற்கரைத்துப்பதமாய்க்காய்ச்சி வடித்து சிரசின்மேற்பூசவும்.

### பெரும்பாட்டுக்கு.

ஆலங்கொழுந்து-பூனைவணங்கிவேர் - ஆவாரைவேர்ப்பட்டை-விடயம்-மிளகு-சுக்கு-கடுக்காய்-திப்பிலி-தான்றிக்காய்-நெல்லி-முள்ளி காயம்-இந்துப்பு வெடியுப்பு-கூவிளம்-சவுக்காரம்-கடுகுரோகணி-கல்லுப்பு-வெண்காரம்-சீனக்காரம்-நவாச்சாரம்- எவாச்சாரம் கடுகு வகைக்குப்பலம் வ, இவைகளில் கற்கவகைகளைச்சூரணித்து உப்புகளைச்சேர்த்து நெரம்மட்டிச்சார் படி-க-ல், கலந்து

கண்டக்காய்ச்சிவடித்து பச்சரிசிமாவ் காரரிசிமாவ் வகைக்குப்பலம்-உ, சேர்த்து வ-பலம் விதமுண்ணவும்.

வேறு அதிசாரத்திற்கு.

விடயம் மாதுளம்வேர்-மாதுளம்பிஞ்சு-முத்தக்காசு-பெருமரப்பட்டை-சுக்கு-விளாவேர்-சாதிக்காய் வாழைப்பூ- மாம்பருப்பு விடதாரிக்கொழுந்து இலவம்பிசின்-அத்திவேர்-தென்னம்பாளை வித்து சமன்சேர்த்து கற்கடகசிருங்கிக்கியாழம்-கெஞ்சாக்கியாழம் இவைகளில் வகைக்கு ஒருசாமமாட்டியுலர்த்திப்பொடித்து க-உ-விராகனெடைப்பிரமாணம் உட்கொள்ளவும்.

தாதுநட்டத்திற்கு.

சாதிக்காய்-கிராம்பு-ஏலம்-மராட்டிமொக்கு - லவங்கப்பட்டை- குராசானி-வால்மிளகு-சாதிபத்திரி மிளகு-சிரகம்-கஞ்சு - முருங்கைப்பிசின்-சாலாம்பிசின்-அக்ராகாரம்-அத்திப்பிசின்-ஆவாரம்பிசின்-திப்பிலி-பாக்கிச்செக்கை-கஸ்தூரி-சூரத்திலவாஜக- பன்னீர்ப்பூ இவைகளைச் சமன்கொண்டு சூரணித்து நெய் சீனி - தேன் கூட்டிலேகியபதமாய்க்கிண்டி கோரோசனை குங்குமப்பூ-பச்சைக்கற்பூரம் சேர்த்து புன்னைக்காயளவு லேகியத்தில் கல்நார்பற்பம் வைத்துண்ணவும்.

எலிக்கடிக்கு.

கடற்கரைக்கு நூறு மயிலுக்கு மேற்பட்ட நிலத்தில் உற்பவிக்கும் ஆண் தும்பைச்சாறும் கூவெள்ளெண்ணெயும் சமன்கொண்டு கால் ஆழாக்குவீதம் மூன்றுநாளுண்டு உப்பில்லாப்பத்தியம் காத்து ஐந்தாவது நாள் வெண்மிளகையறைத்து ஸ்நானஞ்செய்விக்கவும்.

வேறு தேள்கொட்டலுக்கு.

நிலாவேரைச் சூரணித்து வைத்துக்கொண்டு திரிகடிப்பிரமாணம் கொட்டியவுடன் உள்ளுக்கீய்ந்து கொட்டு வாய்க்கு சாரத்திராவகம் இரண்டு துளி விடவும்.



## பாலரோகச் சிகிச்சை.

நண்ணிலாமுகத்தையல்கருப்பையில்
பண்டுவந்தநற்பாலர்க்குறுநோய்க
ளண்டிடாப்பரிகாரசிகிச்சையை
விண்டுசொன்னேம்விளங்கும்புவியோர்க்கே.

மாந்தத்திற்கு.

குராசானி-சிரகம்-ஓமம்-திப்பிலிசுக்கு கொற்றுமல்லிவிதை உள்ளி-காயம்-கருஞ்சீரகம்-வசம்பு-அரிதகி செண்பகப்பூ- விலாமிச்சன்வேர்-ஏலம்-கோஷ்டம்-சாத்திரபேதி-மதூரம்-வெட்டிவேர்-மாசிப்பத்திரி வகைக்குப்பலம்-வ, சூரணித்து பூரம்-கழஞ்சு-க, சேர்த்து இருவேலிக்கியாழத்தாலாட்டிக் குன்றிப்பிரமாணம் மாத்திரைசெய்து குழந்தைகள் தேகபெலமறிந்து க-உ-வீதம் இஞ்சி-முலைப்பால்-தேன்-முசுமுசுக்கைச்சார்- ஆடாதோடைச்சார்-கவ் குகியாழமிவைகளிலூட்டவும்.

வேறு மாந்தத்திற்கு.

ஆவின்நெய்படி-உ, பாண்டத்திட்டு - ஓமம்-பலம் க, உத்தாமணியிலை கம்மாறுவெற்றிலைக்காம்பு வகைக்குப்பிடி-க, சுக்கு-வசம்பு-உள்ளி வகைக்கு விராகனெடை-க, வெந்நீராலாட்டி மேற்படி பாண்டத்திற்கரைத்துப் பதமாய்க்காய்ச்சி வடித்து வ-உ-பலம் வீதம் கொடுக்கவும்.

அள்ளுமாந்தத்திற்கு.

அகத்திச்சார்-மிளகுசாரணைச்சார்- வேலிப்பருத்திச்சார்-இஞ்சிச்சார்-சங்கங்குப்பிச்சார்-சின்னிச்சார்-காணிச்சார்-கொட்டைக்கரந்தைச்சார்-சித்தாமணக்கெண்ணெய் வகைக்குப்படி-வ, பாண்டத்திட்டு உள்ளி-வசம்பு வகைக்கு விராகனெடை - க, வெந்நீராலறைத்துக்கரைத்துப் பதமாய்க்காய்ச்சிவடித்து உ-விராகனெடை-பூரங்கலந்து உச்சிக்கரண்டி வீதம் அளவறிந்து கொடுக்கவும்.

வேறு அள்ளுமாந்தத்திற்கு

கருள்ளிச்சார்-நயக்கொழுந்துச்சார் - மணத்தக்காளிச்சார்-தூதுளைச்சார்-கழற்சிச்சார்-சித்தாமணக்கெண்ணெய் வகைக்கு

படி வ, ஒன்றுசேர்த்துப் பாண்டத்திட்டு கோரைக்கிழங்கு- பிரமியிலை-துளசியிலை-பழம்பாசிசி-நில்விளாயிலை சீந்திற்றண்டு-வல்லாரையிலை வசம்பு கடுகுரோகணி வெண்காரம் வகைக்கு விராகனெடை-ச, முலைப்பாலாலாட்டிக்கரைத்துப் பதமாய்க்காய்ச்சிவடித்து இரண்டு குன்றியெடை இரசபற்பஞ்சேர்த்து கால்-அரைக்கால் பலம் விதமூட்டவும்.

வேறுமாந்தத்திற்கு.

சங்கங்குப்பிவேர்-ஆமணக்கு[illegible]வேர்-நாவல்வேர்-நன்னாரிவேர் கருந்துளசிவேர் சின்னிவேர்-பற்பாட[illegible]வேர்-மேனிவேர்-கௌதும்பைவேர் வகைக்குப்பலம்-வ, சூரணித்து ஒருபடி சலத்திற்கொட்டி மணத்தக்காளிச்சார்-ஓரிலைத்தாமரைச்சார்-அவுரிச்சார்- புங்கன்சார் வகைக்குப்படி வ, சித்தாமணக்கெண்ணெய்படி-க, ஒன்றாய்ச்சேர்த்து இலிங்கம்-மனோசிலை வாளம-பூரம்-கெந்திவகைக்குவிராகனெடை-உ, மதுரம்-மாஞ்சில்-செண்பகப்பூ-செவியம்- கிராம்பு-கடுக்காய்-வால்மிளகு-கண்டுபரங்கி வகைக்குச்சூரணங்கழஞ்சு-க, எண்ணெயில் சேர்த்துப் பதமாய்க்காய்ச்சிவடித்து ௨-க-காசெடை தேகபெலமறிந்துகொடுக்கவும்.

உஷ்ணமாந்தத்திற்கு.

கடுகுரோகணி சீரகம்-உள்ளி-திப்பிலி-கோரோசனை - மதுரம் வகைக்குக்கழஞ்சு-க, சூரணித்து பூரம் விராகனெடை- உ, சேர்த்து அண்டவெண்சருவாலாட்டி மிளகுப்பிரமாணம் குளிகைகட்டி க-உ-மாத்திரை-சுக்கு-மிளகு கியாழத்திலூட்டவும்.

கெற்பமாந்தத்திற்கு.

புங்கன்பருப்பு பலம்-ரு, உலர்த்திச்சூரணித்துப்பாண்டத்திட்டுகஉ படிசலம்வார்த்து ஆகாயக்கெருடன்கிழங்கு நிலப்பனைக்கிழங்கு-அத்திவேர்-சங்கன்வேர்-சாரணைவேர்-சின்னிவேர்- கண்டங்கத்திரிவேர்-மாதுளைவேர் மலைவேம்புவேர்- குப்பைமேனிவேர்-வில்வவேர்-கீழ்க்காய்நெல்லிவேர்-அழிஞ்சல்வேர்-நாவல்வேர்-கரசலாங்கண்ணிவேர்-துத்திவேர்-ஆடாதோடைவேர்- அல்லிக்கிழங்கு-முடக்கொத்தான்வேர்-குறைவேர் - சிவனார்வேம்பு - வெண்



ணொச்சிவேர்-துளசிவேர் வகைக்குப்பலம்-வ, சூரணித்து மேற்படி பாண்டத்திற்கொட்டி பிரமிச்சார்-தைவேளைச்சார் - அவுரிச்சார் குரிச்சார்-தும்பைச்சார் காட்டகத்திச்சார் - மணத்தக்காளிச்சார்-பொன்முசட்டைச்சார் வகைக்குப்படி-வ, கலந்து கடுக்காய் மணடத்திருப்பி-செவியம்-மதுர[illegible]-கோஷ்டம் - வெட்பாலையரிசி-கார்கோல்வித்து - தேவதாரி-[illegible]மாஞ்சில்-கற்கடகசிருங்கி சாதிக்காய்-தான்றிக்காய் வகைக்குக்கழஞ்சு - க, மேற்படி பாண்டத்திற்கொட்டி கலப்பைக்கிழங்கு-வாளம் கெந்தி-குகம்-பூரம்- இலிங்கம் வகைக்கு விராகனெடை உ, ஆமணக்கெண்ணெய் படி - உ, ஒன்றுபடுத்திப்பதமாய்க்காய்ச்சிவடித்து க-உ-காசெடை உள்ளுக்குக்கொடுக்கவும்.

சீர்மாந்தத்திற்கு

நொச்சியிலை-நுணாயிலை-வேளையிலை மேனியிலை- பேய்மிரட்டியிலை-தும்பையிலை இவைகளைச்சமன்கொண்டு வெதுப்பிச்சார் பிழிந்து மிளகு-ஓமம்-உள்ளி-வசம்பு-அரைத்துக்கலந்துக்காய்ச்சி சமன் விளக்கெண்ணெய்கூட்டிப்பதமாய்க்காய்ச்சி வடித்து உச்சிக்கரண்டி விதம் கொடுக்கவும்.

வேறு சீர்மாந்தத்திற்கு.

சிறுதும்மான்பச்சரிசி-பீநாரி-நுணா - சாரணை - வெதுப்படக்கி வகைக்குச் சார் படி-வ, விளக்கெண்ணெய் படி-க, ஒன்றுபடுத்திப்பாண்டத்திட்டு வசம்பு-உள்ளி-மஞ்சள் வகைக்குப்பலம்-உ, ஆவின்பாலாலாட்டிக் கரைத்துப் பதமாய்க் காய்ச்சி வடித்து உச்சிக்கரண்டி விதம் கொடுக்கவும்.

போர்மாந்தத்திற்கு.

அசமதாகம்-கழற்கொடி-இருவேலி நற்சீரகம் - இலவங்கம் இவைகளைப்பொன்வறுப்பாய் வறுத்து வெந்நீராலாட்டிச் சுண்டைக்காய்விதம் முலைப்பாலில் கரைத்தூட்டவும்.

வேறு போர்மாந்தத்திற்கு.

விளக்கெண்ணெய்-முலைப்பால்-உள்ளிச்சார் வகைக்குப்படி-க, கலந்து பாண்டத்திட்டு-கருஞ்சீரகம்-கடுக்காய் சத்திச்சாரணை

வேர்-மிளகு கடுகுரோகணி-வாய்விளங்கம்வகைக்குப்பலம்-க, நிம்பழச்சாற்றாலாட்டி மேற்படி எண்ணெயிற்கரைத்துப் பதமாய்க் காய்ச்சிவடித்துக் களஞ்சியெடைகொடுக்கவும்.

பாண்மாந்தத்திற்கு.

வறுத்த பொடுதலைக்காய்-வசம்பு-உள்ளி-மிளகு-வாய்விளங்கம் சுக்கு-செவியம்-சமன்கொண்டு மிளகுகியாழத்தாலாட்டிசுண்டைக்காய்விதம் முலைப்பாலிலூட்டவும்.

செரியாமாந்தத்திற்கு.

சுக்கு கியாழம்-மிளகுகியாழம்-சீரகக்கியாழம்- ஆவின்நெய் வகைக்குப்படி-வ, ஒன்றுசேர்த்துப்பாண்டத்திட்டு மிளகு-வசம்பு-உள்ளி-இஞ்சி-பெருந்தும்பைப்பூ வகைக்குப்பலம்-உ, முலைப்பாலலாட்டிக்கரைத்துப் பதமாய்க்காய்ச்சி வடித்து உச்சிக்கரண்டி விதம் கொடுக்கவும்.

சுழிமாந்தத்திற்கு.

கோடாசுழி-துளசி-ஆடாதோடை-முதியார்கூந்தல் - சங்கங்குப்பியிலை சிந்தில் நறுதாளி வகைக்குச்சார்படி-உ, சித்தாமணக்கெண்ணெய்படி-ஐ ஒன்றுசேர்த்துப்பாண்டத்திட்டு சாதிக்காய்-திப்பிலி-காயம்-கடுகுரோகணி உள்ளி வகைக்குப்பலம்-க தூதுவளைச்சாற்றாலாட்டிக் கரைத்துப் பதமாய்க்காய்ச்சிவடித்து அதனுடன் கோரோசனை கழஞ்சு - க, பொடித்துப்போட்டு இரண்டு காசெடை உள்ளுக்கியவும்.

நளிர்மாந்தம் எரிமாந்தத்திற்கு.

விளக்கெண்ணெய்-தகரைச்சார் வகைக்குப்படி-ஐ, கலந்தடுப்பேற்றி நாயுருவிவேர்-தைவேளைவேர் - நாய்வேளைவேர்-கொழுஞ்சிவேர்-மூக்கரைவேர்-சாரணைவேர் வகைக்குப்பலம் - க, வசம்பு-ஓமம்-கஸ்தூரிமஞ்சள்- வாய்விளங்கம் வகைக்குப்பலம் - உ, வெள்ளுள்ளி பலம்-கஉ, சீரகம்-வெந்தயம்-கடுகுரோகணி வகைக்குப்பலம்-க, இவைகளை முலைப்பாலலாட்டி மேற்படி எண்ணெயிற்கரைத்துப்பதமாய்க்காய்ச்சி வடித்து க-உ காசெடைமுலைப்பாலில் குலுக்கி யூட்டவும்.



உளைமாந்தத்திற்கு.

சித்தாமணக்கெண்ணெய் படி - ரு, பாண்டத்திட்டு வசம்பு-சாளம்-நிம்பவேர் உள்ளி காயம்-சீரகம்-நாரத்தன்வேர் வகைக்குப்பலம்-வ, இவைகளை தக்காளிச்சாற்றாலாட்டி கரைத்துப்பதமாய்க்காய்ச்சிவடித்து க-உ காசெடை உள்ளுக்கியவும்.

உப்பல்மாந்தம் முக்குமாந்தம் தொந்தமாந்தத்திற்கு

விளக்கெண்ணெய்படி-க, பாண்டத்திட்டு கோஷ்டம் மதுரம்-சீரகம்-திப்பிலி ஏலம் தேவதாரி-சந்தனம் மாசக்காய்- வெந்தயம்-சுக்கு-வெள்ளுள்ளி-வசம்பு கடுகுரோகணி-மூங்கில்பச்சைத்தோல் வகைக்குக்கழஞ்சு-க, பிரண்டைச்சாற்றாலாட்டிக் கரைத்துப் பதமாய்க்காய்ச்சிவடித்து அதனுடன் கஸ்தூரி-கோரோசனம்-பச்சைகற்பூரம் வகைக்குக் கழஞ்சு-க, கலந்து காசெடை உள்ளுக்குக் கொடுக்கவும்.

கணைத்திற்கு.

சித்தாமணக்கெண்ணெய்படி க, பாண்டத்திட்டுக் குறுணிவேர்-சித்திரப்பாலாடைவேர்-வெள்ளெருக்கன்வேர்-விஷ்ணுகரந்தைவேர்-ஆலம்வேர்-கொன்றைவேர்-கழற்சிவேர் வகைக்குப் பலம்-க, முலைப்பாலலாட்டிக்கரைத்துப் பதமாய்க் காய்ச்சி வடித்து ஏலம்-சீரகம்-மதுரம் வகைக்குப்பலம்-க, வறுத்துச் சூரணித்துத் தூவிக்கலந்து காசெடை முலைப்பாலிற்கலந்தூட்டவும்.

வேறு கணைத்திற்கு.

வல்லாரை-மாசிபத்திரி கூவிளம் விரா - உள்ளி - சம்பழம்-கொவ்வை இவைகளின்சார் வகைக்குப்படி-வ, அத்திப்பால்-ஆலம்பால்-முலைப்பால்-ஆவின்பால்-தேங்காய்ப்பால்-தேன் வகைக்கு ஆழாக்கு க, ஆவின் நெய்படி-உ, ஒன்று கலந்து பாண்டத்திட்டு சாதிக்காய்-சாதிப்பத்திரி-ஏலம்-கிராம்பு-திரிகடுகு-திரிபலை- சடாமாஞ்சில்-விடயம் மாசக்காய் வகைக்குப்பலம் க, சூரணித்து மேற்படி பாண்டத்தில் கலந்து சங்கஞ்செடித்தாள்-அருகன்கட்டை- இருவேலி விலாமிச்சு வகைக்குப்பலம் க, இடித்துப்போட்டு மூன்றுநாழிக்கு சலம் வார்த்து ஆழாக்காகச் சுண்டித்து முன்மருந்துகளோடு சேர்த்துப்பதமாய்க்காய்ச்சிவடித்து உச்சிக்கரண்டி விதம்

கொடுக்கவும் அன்றி எலும்புருக்கி வியாதி கண்டவர்களுக்குங் கொடுக்கலாம்.

## கிரந்திசூலை மாந்தத்திற்கு.

முத்தெண்ணெய்-தேங்காய்ப்பால் செம்பருத்திச்சார் வகைக்குச்சேர்-க, பாண்டத்திலிட்டு சுக்கு-கிராம்பு ஏலம்-அரிசிதிப்பிலி-மிளகு வகைக்குச்சூரணம் விராகனெடை மேற்படி எண்ணெயிற்கலந்து பதமாய்க்காய்ச்சிவடித்து பூரபற்பம் விராகனெடை-க, கலந்து உச்சிக்கரண்டி விதம் கொடுக்கவும்.

## வேறு சுணத்திற்கு.

ஆவின்நெய்படி - உ, தேங்காய்ப்பால் - வெள்ளாட்டுப்பால்-தண்ணீர்விட்டான்சார் வகைக்குப்படி-வ, ஒன்றுகலந்து பாண்டத்திலிட்டு செண்பகப்பூ-சந்தனம்-அதிமதுரம்-குமிழன்வேர் - விலாமிச்சுவேர்-நன்னாரி-கடுகுரோகணி-கிராம்பு வாய்விளங்கம்-பன்னீர்ப்பூ வகைக்குப்பலம் வ, தேங்காய்ப்பாலாலாட்டி மேற்படி பாண்டத்திற்கரைத்துப் பதமாய்க்காய்ச்சி வடித்து உச்சிக்கரண்டி விதம் கொடுக்கவும்.

## மாந்தசுணத்திற்கு.

மருளன்கிழங்கு-உள்ளி-கிம்பழம்-சிறுபுள்ளடி - பொடுதலை-தகரை-மிளகு சுக்காளி கருநொச்சி-எருக்கிலை வகைக்குச்சார்படி-வ, சித்தாமணக்கெண்ணெய் படி-க, பிரமிச்சார் - சிறுசெருப்படைச்சார்-நீர்முள்ளிச்சார் துளசிச்சார்-எருமைமுக்காளிச்சார்-கருந்துளசிச்சார் கோழியவரைச்சார்-செய்சிட்டிச்சார் வகைக்கு ஆழாக்கு-உ, இவைகளை யொன்றுபடுத்திப்பாண்டத்தேற்றி பழம்பாசி பலம்-உ, சேர்த்துப் பதமாய்க்காய்ச்சி வடித்து க-உ-பணவெடை முலைப்பாலில் கலந்துக்கொடுக்கவும்.

## ஊதுமாந்தசுணத்திற்கு.

முத்தெண்ணெய்படி-க, தேங்காய்ப்பால்- மாதுளம்பழச்சார்-வல்லாரைச்சார்-முருக்கஞ்சார்-பொடுதலைச்சார் வகைக்குப்படி உ, ஒன்றுபடுத்திபாண்டத்திலிட்டுநீர்முள்ளிவித்து- வேப்பொம்பு-தேங்காய்நெத்து கையாந்தகரைவேர்- கண்டங்கத்திரிவேர்-வசம்பு-ஏலம்-வெட்பாலையரிசி-வட்டத்திருப்பி-பற்பாடகம்முத்தக்காசு



ஒரிலைத்தாமரை - தாமரைக்கிழங்கு செங்கழுநீர்க்கிழங்கு-சிவனார்வேம்பு-கை விளாம்பிசின்-மருட்காரைப்பிசின்-இலவம்பிசின்- மாசக்காய்-கடுக்காய்-விடயம்-வால்மிளகு - சாதிபத்திரி வகைக்குப்பலம்-வ, ஒன்றுசேர்த்துப்பொடித்து மேற்படி பாண்டத்திற்கலந்து பதமாய்க்காய்ச்சிவடித்து க-உ-பணவெடைகொடுக்கவும்.

## சுணமாந்தத்திற்கு.

ஆமணக்கெண்ணெய்படி-க, புனல்முருங்கை நத்தைச்சூரி-நாயுருவி-நாய்வேளை-சிறுகுறிஞ்சான்-நரியுத்தன்-நன்னாரி-பிரமி தும்பை-பொன்னாங்கண்ணி-முசுமுசுக்கை இவைகளின்சார்வகைக்குப்பலம்-க, ஒன்றுகலந்து சித்திரமூலம்-குன்றிவேர்- சங்கங்குப்பிவேர்-முன்னைவேர்-முல்லைவேர்-சித்தாமல்லிவேர் - பேராமல்லிவேர்-காட்டகத்திவேர்-ஆவாரைவேர்-பொன்னாவரைவேர் - மணத்தக்காளிவேர் கொள்ளுக்காய்வேளைவேர்வகைக்குப்பலம்-முக்கால் இடித்துப்போட்டு - படி சலம்வார்த்து உ படியாகச்சுண்டித்து யெண்ணெயோடுசேர்த்து அரித்தரம்-கெந்தி-வாளம்-நாபி- வெள்ளை-அப்பிரேகபற்பம்-சிலாசத்துபற்பம் வகைக்கு விராகனெடை-உ, பொடித்துக்கூட்டி வால்மிளகு-சடாமாஞ்சில் - அக்கல்காரம்-செண்பகப்பூ-கோஷ்டம்-செவியம்-மதுரம்-கற்கடகசிருங்கி-சுக்கு தான்றிக்காய்-கடுக்காய்-சாதிக்காய் லவங்கப்பட்டை - லவங்கப்பூ-கடுக்காய்ப்பூ வகைக்குக்கழஞ்சு-உ, சூரணித்துக்கூட்டிப் பதமாய்க்காய்ச்சிவடித்து-புழுகு-கஸ்தூரி-கோரோசனை-பச்சைக்கற்பூரம் வகைக்கு விராகனெடை-உ, பொடித்துப்போட்டு பணவெடை கொடுக்கவும்.

## வேறு சுணத்திற்கு.

வெள்ளாட்டுப்பால்படி உ, விளக்கெண்ணெய்படி-க, திருகுகள்ளிச்சார்-ஆழாக்கு-வ, ஒன்று சேர்த்துப்பாண்டத்திலிட்டு இண்டங்கொழுந்துபிடி-க, போட்டு செண்பகப்பூ-சாதிக்காய் - லவங்கம்-ஏலம்-வெள்ளுள்ளி-சாதிபத்திரி-இருசீரகம்-வசம்பு- விலாமிச்சு வெட்டிவேர்-சிறுநாகப்பூ-முத்தக்காசு பூலாக்கிழங்கு - கடுக்காய்-கடுகுரோகணி-கோஷ்டம் - நாகேசுரம் வகைக்குக்கழஞ்சு-க, தேங்காய்ப்பாலாலாட்டிக் கரைத்துப் பதமாய்க்காய்ச்சி வடித்து பணவெடை முலைப்பாலில் கலந்தூட்டவும்.

## வேறு செணத்திற்கு.

விலக்கடம்பு-பாவட்டம்புல் வேலிப்பருத்தி பொன்னாங்கண்ணி நாயுருவி குதிரைவாலி முசுமுசுக்கை வல்லாரை-புளியாரை-புங்கிலை-தூதுளை-அம்மான்பச்சரிசி-நிலத்தாமரை-பீர்க்காய்நெல்லி சிறுபுள்ளடி-ஆடுதீண்டாப்பாளை-வரட்டுவா தகரை-நுவரையிலை-வெண்ணொச்சிலை செம்பாயுருவி மிளாத்தக்காளி-ஆடாதோடை-கருநொச்சி-சின்னி வேப்பு சிறுகீரை-முருங்கிலை-பொன்முசட்டை சிரிப்பதத்தன் திலக்குமிழ்-ஆவாரை-விஷ்ணுகரந்தை-சங்கங்குப்பி-நாவல்துளிர்-கண்டங்கத்திரி-வில்வம்-சீந்தில்-குட்டிவிளா இவைகளின்சார் வகைக்குப்படி-க, சித்தாமணக்கெண்ணெய்படி-க, ஆவின்நெய்படி-௨, ஒன்றுகலந்து பாண்டத்திலிட்டுச் சீரகம்-சோம்பு-வசம்பு உள்ளி வகைக்குப்பலம்-க, ஆவின்பாலாலரைத்துக்கரைத்துப்பதமாய்க் காய்ச்சிவடித்து பணவெடை [illegible] ஊட்டவும், அன்றி அஸ்திவெட்டை-செணக்குழிக்கு வ-உபலம்வீதம் கொடுக்கவும்.

## கழிசெணத்திற்கு.

மேனிச்சார் உப்பிலாக்கொடிச்சார்-சருள்ளிச்சார் வகைக்குப்படி-வ, விளக்கெண்ணெய்படி-௨, ஒன்றுசேர்த்துப் பாண்டத்திலிட்டு கண்டங்கத்திரிவேர்-கடுக்காய்-வில்வவேர்-குன்றிவேர்-சிறுகிளுப்பைவேர்-முசுமுசுக்கைவேர்-துளசிவேர் வகைக்குக்கழஞ்சு-க, பசும்பாலாலரைத்து சேர்க்கலந்து பதமாய்க்காய்ச்சி வடித்து க-உ-பணவெடைகொடுக்கவும்.

## வேறு கழிசெணத்திற்கு.

சித்தாமணக்கெண்ணெய்படி-௨, நெய்படி-வ, பொடுதலைச்சார் செம்முள்ளிச்சார்-மணத்தக்காளிச்சார்-கொட்டைக்கரந்தைச்சார்-கண்டங்கத்திரிச்சார் கோழிஅவரைச்சார் நல்துளசிச்சார்-நாய்த்துளசிச்சார் வகைக்கு ஆழாக்கு-க, சேர்த்துப்பாண்டத்திலிட்டு வெந்தயம் சீரகம்-சாரணைவேர் துளசிவேர்-நன்னாரிவேர்-மிளகு-சுக்கு வகைக்குப்பலம்-வ, பொடித்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்து கழஞ்சுவீதம் கொடுக்கவும்.



## உரம் விழுகிறதுக்கு.

வெள்ளுள்ளி-கடுகு-வேம்பின்விதை வகைக்குப்பலம்-ம, ஒன்றாகலந்துக் குழித்தயிலமிறக்கி உடம்பு முழுதும் பூசவும்.

## உப்பல் மாந்தத்திற்கு.

வாய்விளங்கம்-ஆமையோடு-பெருங்காயம்-மிளகு-பொடுதலைச்சாறு-வசம்பு-சுக்குத்திப்பிலி இவைகளைச்சமன்கொண்டு பொடுதலைச்சாற்றாலரைத்து சுண்டையளவு குளிகைசெய்து நிழலுலர்த்தி-வசம்பு-பொடுதலை-வேலிப்பருத்தி-ஓமம் இவைகளின் சாற்றில் கொடுக்கவும்.

## வாதமாந்தத்திற்கு

பொரிகாரம் விராகனெடை-௨, கடுகுரோகணி-கருஞ்சீரகம்-வாய்விளங்கம் வசம்புத்தூள் விராகனெடை-௨, இவைகளைப்பால் [illegible] ஆமணக்கெண்ணெயிலரைத்து மாலையில் பொடுதலையிலைக்கு-துளசியிலைக்கு-வேம்பிலைக்கு-நொச்சியிலைக்கு வேலிப்பருத்தியிலைக்கு-புளியிலைக்கு-வேப்பிலைக்கு உள்ளி வசம்பு-ஓமம்-திப்பிலி இவைகளைச்சமன்கொண்டு அரைத்துப்பிழிந்து ஒருசங்குஊட்டவும்.

## வேறு வாதமாந்தத்திற்கு.

சித்தாமணக்கெண்ணெய்படி-வ, பாண்டத்திலிட்டு பூரம்விராகனெடை-க, வாளம் மிளகு-லவங்கம்-பூண்டு வகைக்கு விராகனெடை-௨, அரைத்துக் கரைத்துப் பதமாய்க்காய்ச்சி வடித்து பணவெடைவீதம் உள்ளுக்குக்கொடுக்கவும்.

## கட்டு மாந்தத்திற்கு.

சித்தாமணக்கெண்ணெய்படி-வ, சிற்றகத்தி-துளசி தகரை-கழற்சி-நொச்சி செம்முள்ளி-மணத்தக்காளி இவைகளின்சார் வகைக்குப்படி-வ, சதுரக்கள்ளிப்பால் பலம் கவ, ஒன்று சேர்த்து பாண்டத்திலிட்டு கடுகுரோகணி கடுக்காய்-இருசீரகம் உள்ளி-வசம்பு-வெள்ளைவேர்-பூசுகாப்பன்பட்டை வகைக்கு விராகனெடை-க, இடித்துப்போட்டுப்பதமாய்க்காய்ச்சி வடித்து காலையில் பணவெடைகொடுத்து மாலையில் மிளகு கடலிட்டு கஷாயத்தைப்போட்டுக்கொழுந்துசெய்து ஒரு சங்குவீதம் கொடுக்கவும்.

### கழிமாந்தத்திற்கு.

கோடகசாலை-தழுதாழை-ஆடாதோடை-தும்பை-முதியார்கூந்தல்-நஞ்சறுப்பான்-சிந்தில்-கருதாளி-பொடுதலை இவைகளின்சார் வகைக்குப்படி-வ, விளக்கெண்ணெய்படி-வ ஒன்றுபடுத்திப்பாண்டத்திலிட்டு காசிக்காய்-திப்பிலி-காயம்-கடுகுரோகணி-உள்ளி வகைக்கு கழஞ்சு-க, பொடித்துப்போட்டுக்காய்ச்சி மெழுகுபதத்தில் கோரோசனம்-விராகனெடை-க கலந்து வடித்துப்பணவெடை திட்டவும்.

### அச்சரமாந்தத்திற்கு.

நுணா-வில்வம் தைவேளை-பொடுதலை-செம்முள்ளி-ஆடாதோடை வகைக்குச்சார்படி-க, ஆவுரிச்சார்படி-உ, துத்தியிலை-வெந்தயம்-ஆடாதோடையிர்க்கு [illegible] வகைக்குப்படி-க, பாண்டத்திலிட்டு [illegible] சலம் வார்த்து உ-படியாகச்சுண்டிய [illegible] மேற்படி சாறுகளோடு கலந்து கருள்ளிச்சார்படி-வ, தேய்க்கும் மட்டிச்சார் அரைக்கால், விளக்கெண்ணெய்படி-க ஒன்று சேர்த்துப்பாண்டத்திட்டு அரத்தை கடுகுரோகணி-விளங்கம் வகைக்கு விராகனெடை-க, கடுக்காய் விராகனெடை-ரு, திக்கல்காரம், வெளிச்சப்பிசின்-கருஞ்சீரகம்-கஸ்தூரிமஞ்சள்வகைக்கு விராகனெடை-உ, பொடித்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து சிறிய உச்சிக்கரண்டிவீதங்கொடுத்து மாலையில் மிளகுகட்டிவிட்டு சுக்கைத்தட்டிப்போட்டுக் கொழுஞ்செய்துக்கொடுக்கவும்.

### உப்பல்மாந்தத்திற்கு.

சிறுதேக்கு-வாய்விளங்கம்-கோஷ்டம்-வால்மிளகு-கடுகுரோகணி-சுக்கு-ஏலம்-திப்பிலி-கண்டுபாரங்கி-ஓமம்-கிராம்பு-தான்றிக்காய்-உப்பிலாங்கொடி-தக்கோலம்-இருசீரகம்-குராசாணி-பிரமிவேர் வகைக்குப்பலம்-வ, நையபிடித்துப் பாண்டத்திட்டு ஒருபடி சலம்வார்த்து முக்காலாழாக்காகச்சுண்டித்து ஒருவிராகனெடை இந்துப்புக்கூட்டி சங்குவீதம் கொடுக்கவும்.

### வேறு கெணத்திற்கு.

கருள்ளிச்சார்-நிம்பழச்சார்-கொவ்வைச்சார்-வல்லாரைச்சார்-மாசிபத்திரிச்சார்-கூவிளச்சார்-குட்டிவிளாச்சார்வகைக்குப்படி-உ,



அத்திப்பால்-ஆலம்பால்-முலைப்பால்-ஆவின்பால்-வெள்ளாட்டுப்பால் வகைக்குப்படி-வ, தேன்படி-அரைக்கால், தேங்காய்ப்பால் படி-க, ஆவின் நெய்படி-உ, ஒன்றுசேர்த்துப் பாண்டத்திட்டு சந்தனம் அருகன்கட்டை-இருவேலி-விலாமிச்சவேர் வகைக்குப்பலம் க, நையபிடித்துப்பாண்டத்திட்டு உ-படி சலம் வார்த்து ஆழாக்காகச் சுண்டித்து மேற்படி மருந்துகளுடன் சேர்த்து சாதிக்காய் சாதிபத்திரி-ஏலம்-கிராம்பு-விடயம்-மாஞ்சில்-திரிபலை-திரிகடுகு-மாசக்காய் வகைக்குப்பலம்-க, சூரணித்து இக்கச் சேர்த்துப்பதமாய்க்காய்ச்சிவடித்து உச்சிக்கரண்டி வீதம் கொடுக்கவும்.

### அஸ்திவெட்டை கெணச்சூட்டுக்கு.

பழச்சார்-இலர் தைச்சார்-கருள்ளிச்சார் வகைக்குப்படி-வ, சித்தாமணக்கெண்ணெய்படி-க, ஒன்றுசேர்த்துப்பாண்டத்திட்டு சுத்திசெய்த கற்றாழைச்சோறு பலம் க, கூட்டி ஏலம்-கருஞ்சீரகம்-சீரகம்-பரங்கிச்செக்கை வகைக்குப்பலம்-வ, ஆவின்பாலாலாட்டி மேற்படி பாண்டத்திற் கலந்து பதமாய்க்காய்ச்சி வடித்து உச்சிக்கரண்டி வீதம் கொடுக்கவும்.

### மந்தாரகெணத்திற்கு.

நாயுருவி-கரிசலை-வல்லாரை-கௌதும்பை-கண்டங்கத்திரி-கருநொச்சி வகைக்குச்சார்படி-வ, சித்தாமணக்கெண்ணெய்படி-வ, ஒன்றுசேர்த்துப்பாண்டத்திட்டு திரிகடுகு-திரிபலை-வெள்ளுள்ளி-கிராம்பு-வசம்பு வகைக்குக்களஞ்சு-க, சூரணிக்கக்கலந்து பதமாய்க்காய்ச்சிவடித்து உச்சிக்கரண்டிவீதம் கொடுக்கவும்.

### ஆமகெணத்திற்கு.

வேலிப்பருத்தி-கோழியவரை-பொடுதலை வகைக்குச்சார் படி-வ, வெள்ளாட்டுப்பால்படி-உ, சித்தாமணக்கெண்ணெய்படி-க, ஒன்றுசேர்த்துப்பாண்டத்திட்டு சிவதைவேர்-கள்ளிவேர்-வெளிச்சப்பிசின்-உள்ளி-கடுகுரோகணி-இருசீரகம்-ஏலம் வகைக்குக் களஞ்சு-க, ஆவின்பாலாலாட்டிக்கரைத்துப்பதமாய்க்காய்ச்சிவடித்து உச்சிக்கரண்டிவீதம் கொடுக்கவும், அன்றி இவ்வெண்ணெயை தாய்முலைக்காம்பில் தடவி குழந்தைகளுக்குப் பாலூட்டுவிக்கவும்.

—*—

இச்சிரோரத்தின வயித்தியபூஷணமென்னும் இந்நூலின் யோகங்களிற்செப்பிய ஒவ்வொரு சரக்குகளையுங்கருத்திற் சேர்க்காவிடில் வியாதிரூபங்களதிகரிக்குமென்னும் பிணியை வெல்லரிதென்னும் ஆன்றோர்களால் கூறப்பட்டுள்ளது.

இரசகெந்தக பாஷாணங்கள் சேர்ந்த எவ்வித யோகங்களையும் பழகுவதற்குமுன்னால் கையாடுவதில் விழுகொண்டு தேகத்திற்பரவி வெவ்வேறு வியாதிகளை விளைவிக்கும் தாதுவர்க்கங்கள் முறிந்தும் கெடுதியை விளைவிக்குமென்னும் தெளிந்த மகான்களால் செப்பலாயிற்று.

மேற்படி விதுள்ள சரக்குகள் சேர்ந்த யோகங்களைக் கையாடப் புகின் பிணியாளர்களின் தேக பெலன்களையும், இலக்ஷணங்களும், சாத்தியாசாத்தியங்களும் நன்காராய்ந்து சர்வஜாக்கிரதையுடன் பிரயோகிக்க வேண்டுமென்பது தெளிந்த பெரியோர்களின் கருத்தெனக்கொள்க.

அக்கொற்றவுடைகளைப் பூட்டப் பிணியகற்றபின்னர் வீறுகள் தணிப்பதற்கு முயற்சிகளைச்செய்விப்பதும் இந்நூல் வயித்தியர்களின் கொள்கையெனப் பதினெண்மர்களும் விவரிக்கலாயினர்.

114304

விசேஷமென்னும் பேதிமருந்தை அதிகாலையிலுண்பதற்குப் பித்தப்பையில் சென்று அபாயத்தை விளைவிக்குமென்பதால் பித்தநீர்ச்சுரப்பை [illegible] அருந்தவேண்டுமென இயம்பலாயிற்று.

கலித்துறை.

காணசித்தர்க்கமுலைக்கருத்தன்னி
வேணமட்டும்விரித்தசிரோரத்ன
மானதாலாம்வயித்தியப்பூஷணம்
வாணர்க்கானவயங்குமுற்றுமுற்றே.

# சிரோரத்தினவயித்திபூஷணம்

முற்றிற்று.